
பக்கங்கள்: முப்பத்திரண்டு +VI

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 27 ஞாயிற்றுக்கிழமை (10.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 135



05
இனவாதமாகும் விளையாட்டு உலகம்



17
தமிழருக்கு விடிவு காலம் கிட்டுமா?



23
அ'புரத்திலுள்ள 55 பேருக்கு விடிவு எப்போது?



30
புதுத் தலைமையில் வெற்றி ஆஸி.

### அற்பசொற்ப சலுகைகளுக்கு விலைபோக மாட்டோம்

# சாத்வீக முயற்சிகள் தோல்வி கண்டால் மாற்று வழியைத்தான் நாட நேரிடும்

### உள்ளூராட்சி உறுப்பினர்களின் பதவியேற்பில் சம்பந்தன் காட்டம்



திருகோணமலை,ஏப்ரல் 10

**அற்ப சொற்ப சலுகைகளுக்காகத் தமிழ் மக்கள் தமது தன்மானத்தை அடகு வைக்க முடியாது.**

**சாத்வீக வழியிலான எமது முயற்சிகள் தோல்வியடையுமானால், நாமும் மாற்று வழியைத்தான் கடைப்பிடிக்க நேரிடும். இதனை எவராலும் தடுக்கமுடியாது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூளுரைத்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வடக்கு - கிழக்கின் உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்றுக்காலை திருகோணமலை நகராட்சி மன்றத்

(31 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரம் நேற்று விழாக்கோலம்; கூட்டமைப்பு உறுப்பினர் பதவிப் பிரமாணம்

திருகோணமலை,ஏப்.10

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற 12 சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிப்பிரமாண வைபவம் திருகோணமலையில் நேற்றுச் சனிக்கிழமை கோலாகலமாக இடம்பெற்றது.

முப்பத்து வருடங்களின் பின் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

(31 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன இந்திய மீனவர்கள்; இலங்கை கடற்பரப்பில் தீவிர தேடுதல்

### தமிழகக்குழுவுக்கு அரசு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 10

தழிழகத்தில் இருந்து மீன் பிடிக்கப் புறப்பட்ட நான்கு மீனவர்கள் அவர்களின் படகுடன் காணாமற்போனார்கள்.

அவர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று மீனவர்களையும்தேடும் பணி தொடர்ந்து இடம்பெறுகிறது. (31 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டித் தெரு நகைக் கடைகள் மீன் சந்தைப் பகுதிக்கு!

கொழும்பு,ஏப்.10

கொழும்பு, செட்டியார் தெருவில் அமைந்துள்ள நகைக் கடைகளை மீன் சந்தைக் கட்டடப் பகுதிக்கு மாற்றுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

நகர அபிவிருத்தி என்ற போர்வையில்,

(31 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த எனது அண்ணர் விக்ரஸின் படகு கடற்படையின் படகுக்கு அருகில் காணப்பட்டது

### மரண விசாரணையில் சகோதரர் லூமன் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஏப்.10

இலங்கைக் கடற்படையினரின் பெரிய படகுக்கு அருகில் எனது சகோதரர் சேவியர் விக்ரஸின் படகு காணப்பட்டது என்று அவரது சகோதரன் சேவியர் லூமன் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இடம்பெற்ற இந்திய மீனவர் விக்ரஸின் மரண விசாரணையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(32 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் ஆசிரியையின் சடலம் வீட்டில் தூக்கிட்ட நிலையில் மீட்பு!

### உடலில் கீறல் காயங்கள்; சாவில் சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.நகரில் பிரபல கல்லூரியைச் சேர்ந்த இளம் ஆசிரியையின் மரணத்தில் சந்தேகங்கள் உள்ளன என்று கூறப்படுகிறது.

சில்லாலை, சாந்தைப் பகுதியைச் சேர்ந்த செல்வராஜா அனுஷா (வயது 27) என்ற யாழ்.இந்துக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியையின் சடலமே நேற்றுமுன்தினம் (31 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதியை மகாராணி கௌரவித்தமைக்குக் கண்டனம்

### இது குறித்து ஸ்ரீலங்கா அரசு கடும் சீற்றம்

கொழும்பு, ஏப்.10

நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் ஒருவரை எலிஸபெத் மகாராணி கௌரவித்தமையும், அதற்காக நியூஸிலாந்து அரசாங்கத்தினால் அவர் தெரிவுசெய்யப்பட்டமையும் எமது அரசினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதெனக் கூறியுள்ளார் பிரதி வெளிவிவகார அமைச்சர் டிலான் பெரேரா.

நாடாளுமன்றில் (31 ஆம் பக்கம் பார்க்க)

எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைனடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.



இன்றே விரையுங்கள்



| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | ஆலடிச் சந்தி, மானிப்பாய். | பருத்தித்துறை வீதி, நெல்லியடி. | கண்டி வீதி, சாவகச்சேரி. |
|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 222 4389 | 021 224 0555 | 021 225 5343 | 021 226 4937 | 077 9508957 |

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com



அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது.

## அருட்திரு. ஜெயக்குமார் அவமதிப்பின் எதிரொலி:

# வடக்கின் தற்போதைய உண்மை நிலைமைகளை எடுத்துக் கூற தயக்கம் காட்டிய பெரியார்கள்

### நேற்றைய நிகழ்வில் பலரும் 'அடக்கி வாசிப்பு'

கொழும்பு, ஏப். 10

வட பகுதியின் உண்மை நிலைமை தொடர்பாக கருத்துக் கூறுவதற்கு மத குருமார்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டிருப்பதை நேற்று இடம்பெற்ற நிகழ்வின்போது அவதானிக்க முடிந்தது.

யாழ். மாவட்ட சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவை ஏற்பாடு செய்த கருத்தரங்கு நேற்று பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெற்றது.

'மனிதமேம்பாட்டுக்கு அனைத்துச் சமயங்களும் கூறும் உண்மைகள்' என்ற தலைப்பில் மதத் தலைவர்கள்கருத்துரைகளைவழங்கினார்கள். இவ்வாறு கருத்துரை வழங்கும்போது மதகுரு ஒருவர் வடபகுதியின் உண்மை நிலைமை தொடர்பாக கருத்துக் கூறினால் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்படக் கூடும். எனவே, இத்துடன் எனது கருத்தை நிறைவு செய்கிறேன் எனக் கூறிவிட்டு தனது பேச்சை இடைநடுவில் நிறுத்திக்கொண்டார். இதே உணர்வு அங்கு கருத்துரை வழங்கிய மேலும் சிலரிடம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

சர்வமத உயர் மட்டகுழுவினர் முன்னிலையில் வட பகுதி உண்மை நிலைமையை வெளிப்படுத்தியமைக்காக அருட்திரு. சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் இனந்தெரியாத நபர்கள் இருவரால் கடந்த வாரம் மிக மோசமாக அவமதிக்கப்பட்டார். இதன் காரணமாகவே நேற்றைய நிகழ்வில் மத குருமார்கள் மற்றும் கற்றறிந்தோர் சுதந்திரமாகக் கருத்துக் கூற தயங்கினார்கள்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வின்போது மகேஸ்வரக் குருக்கள்-

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பேராசிரியர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், ஸ்ரீநாக விகாரை வண. மிககயந்துரே ஸ்ரீ விமலதேரர், வணபிதா சகாயதாஸ் அடிகளார், மௌலவி பி.ஏ.எஸ். சுபியான், பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன், சு. பரமநாதன் ஆகியோர் இதன்போது கருத்துரைகளை வழங்கினார்கள்.

(ஒ-14-313)

## தமிழகத்திலிருந்து வந்தவர்கள் முன்னிலையில்

# இந்திய மீனவரின் சடலம் நேற்று விசாரணைகளின் பின்னர் அடக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 10

நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கடற்படையினரால் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

இராமேஸ்வரம், தங்கச்சி மடத்தைச் சேர்ந்த சேவியர் விக்டஸ் (வயது 41) என்ற இந்திய மீனவரின் சடலமே அது என அவரது சகோதரரான சேவியர் லூமன் அடையாளம் காட்டினார்.

தமிழகத்தில் இருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த, நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பின் தலைவர் பி. அருளானந்தம் தலைமையிலான ஆறுபேர் கொண்ட குழு சடலத்தை அடையாளம் காட்ட வந்திருந்தது.

அந்தக் குழுவில் கே. ஞானசீலன், சேவியர் லூமன், வீ. வீரபாண்டி, ந. அடிமை, எஸ். ராமில் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தியக் கடற்படையினர், அழைத்து வரப்பட்ட இந்தக் குழுவினரைத் தமது எல்லையில் வைத்து இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

கடற்படையினர் இக்குழுவினரை அழைத்து வந்து ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் கையளித்தனர்.

அவர்கள் யாழ். வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டனர்.

ஊர்காவற்றுறை பதில் நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் முன்னிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை இறந்தவரின் சகோதரன் இனங்காட்டினார்.

இறந்தவரின் சேட், உள்ளாடை, இடுப்புநாடா ஆகியவற்றையும் -



அவரது வலது பெருவிரல் மேலாகக் காணப் பட்ட 'குருசு' சிலுவையையும் வைத்து சடலத்தை இனங் கண்டதாக அவர் நீதிவானிடம் தெரிவித்தார்.

இந்தியக் குழுவினர் முன்னிலையில் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் ஊதிப்பெருத்து பழுதடைந்திருந்ததால் கொட்டடியில் உள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

சடலத்தை இனங்காணும் நிகழ்வில் இந்தியத் தூதரக அதிகாரி வினோத்குமார் வர்மாவும் சமுகமளித்திருந்தார்.

(ஒ-ஐ-7-4)

### கருகம்பனையில் நாளை பொங்கல்

மக்கள் இடம்பெயர்வு காரணமாககடந்தஇருபதுவருடங்களுக்கு மேலாக நித்திய, நைமித்திய பூசைகள் இல்லாது இருந்து வந்த கருகம்பனை நாத இராஜ ராஜேஸ்வரி அம்பாள் நாச்சிமார் ஆலய பொங்கல் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

குடாநாடு முழுவதும் குடியிருக்கும் அம்பாளின் பக்தர்களை இந்தப்பொங்கல் விழாவில் பங்கொள்ளுமாறு ஆலய நிர்வாகிகள் கேட்டுள்ளனர். (ஐ)

# டெங்கு நோய் அபாயம் குறித்து சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

### இந்த மாதத்தில் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, ஏப். 10

தற்போது நிலவும் காலநிலை காரணமாக உயிர்கொல்லி நோயான டெங்குக் காய்ச்சல் பீடிக்கும் அபாயம் இருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது நாட்டில் பகலில் கடும் வெப்பமும் இரவில் ஆங்காங்கு மழையும் பெய்வதால் இந்த நோய் பீடிப்பதற்குச் சாதகமாக உள்ளது.

ஏப்ரல் மாதத்தில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது வழக்கமாகும். இந்த வருடமும் இதைப்போலவே அமையுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் உயர் அதிகாரிகள் மற்றும் வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலின்போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

மேலும் நாடெங்கிலும் உள்ள சகல சுகாதார அலுவலகங்களையும் இந்த மாதம் டெங்கு பரவக்கூடிய சாத்தியம் தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு அமைச்சர் சிறிசேன மற்றும் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் பகலில் கடும் வெப்பமும் இரவில் குளிரும் நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்பை அதிகரிக்குமென டாக்டர் மஹிபால சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை டெங்கு நோயினால் பெப்ரவரி மாதம் 1,050 பேரும், மார்ச் மாதம் 1,070 பேரும் பீடிக்கப்பட்டிருந்தனர் என்று அரச தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-க)

## வடக்கின் 5 மாவட்டங்களிலும் உள்ள

# 16 உதவி அரச அதிபர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்வு

கொழும்பு, ஏப்.10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள உதவி அரச அதிபர் அலுவலகங்களை பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி. ஜே.செனவிரத்னவின் ஆலோசனைக்கு அமைவாக குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்பட உள்ளன.

தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர், வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, கரைச்சி, பச்சிளைப்பள்ளி, பூநகரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

மடு, மாந்தை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நீண்டகாலத்தின் பின்னர் ஒரு வெகுமதி

வடக்கு மாகாணத்தில் உள்ள பதினாறு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளைப் பிரதேச சபைகளாகத் தரமுயர்த்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அந்தந்தப் பிரதேசத்துக்கு நலன் பயக்கும் இந்த முடிவை, அமைச்சரவைப் பேச்சாளரும் சுற்றுச்சூழல் துறை அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் -

★ யாழ்ப்பாண மாவட்டத்தில்: காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

★ கிளிநொச்சி மாவட்டத்தில்: கண்டாவளை, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

★ முல்லைத்தீவு மாவட்டத்தில்: புதுக்குடியிருப்பு, துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுரைப்பற்று, மாந்தை கிழக்கு, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

★ மன்னார் மாவட்டத்தில்: மடு, மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் -

வவுனியா மாவட்டத்தில்: வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவும் -

பிரதேச சபைகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

முன்னர் எல்லாம் மாவட்டக் கச்சேரிகளும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுமே அந்த மாவட்டங்களின் கொழும்பு அரச நிர்வாகத்தின் அங்கங்களாக இயங்கின.

ரணதுங்க பிரேமதாசா பிரதமராகவும், உள்ளூராட்சி அமைச்சராகவும் பதவி வகித்த காலத்திலேயே கிராமங்களின் அபிவிருத்தியையும், மக்கள் தமக்குரிய அரச சேவைகளை அந்தந்தப் பகுதியிலேயே இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பையும் உண்டாக்கினார்.

அந்தந்தப் பிரிவுகளின் மக்கள் தொகை - நிர்வாக எல்லைப் பிரதேசங்கள் மற்றும் வளங்களைக் கணக்கில்கொண்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. பிரேமதாசாவின் கிராமோதயத் (கம்உதாவ) திட்டத்தின் வரப்பிரசாதங்களில் ஒன்றாகப் பிரதேச சபைகளும் அமைந்தன.

அரச நிர்வாகத்தை மக்களின் காலடிக்குக் கொண்டு செல்வதென்ற பிரேமதாசாவின் கோட்பாட்டின் பிரதிபலனே பிரதேச சபைகளின் பிறப்பு என்றும் சொல்லலாம் .

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அரசாங்க அதிபர் செயலகத்தின் (கச்சேரியின்) உப அலுவலகங்கள் போலவே செயற்பட்டன. மக்கள் தமது முக்கிய பிரதான தேவைகளுக்குக் கச்சேரிக்கே பஸ் ஏறி அலைந்து திரியவேண்டி இருந்தது. அபிவிருத்திப் பணிகளை மிகக் குறைந்த அளவிலேயே செய்யமுடிந்தது. காரணம், அவற்றுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு கச்சேரி ஊடாகவே பிரித்து வழங்கப்பட்டது. அதனையும் விட, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்குக் கூடக் கச்சேரிக்கே செல்லவேண்டியிருந்தது; இதுபோன்று பல சிரமங்களையும் கஷ்டங்களையும் மக்கள் அனுபவிக்க நேர்ந்தது.

அந்தந்தப் பிரதேசத்து மக்களின் தேவைகளுக்கு ஏற்பவும், அங்குள்ள வளங்களைத் தக்கவாறு பயன்படுத்தவும் உதவி அரசாங்க அதிபர்களுக்குப் போதிய நிதி மூலங்கள் கிடைப்பதில்லை; வழங்கப்படுவதில்லை.

பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டதன் பின்னர் அரச நிர்வாகத்தின் பல செயலாக்கங்கள், செயற்பாடுகள் அவற்றுக்கு வழங்கப்பட்டன. நிர்வாகக் கட்டமைப்பில் மிகக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகாரங்கள் பகிர்வு செய்யப்பட்டன.

பிரதேச சபைகள் தத்தமது எல்லைப் பிரதேசத்தின் வளங்களை மக்கள் பயன்பெறும் வகையில் பயன்படுத்தும் வகையிலும், அதற்குத் தேவையான நிதி வளங்களைப் பெற்றுக்கொள்ளவும் அவற்றுக்கு வசதி செய்யப்பட்டது; அதிகாரம் வழங்கப்பட்டது. மக்கள் நலன் நாடிய அபிவிருத்தித் திட்டங்களை சுயமாக வகுத்துச் செயற்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டது.

அதாவது, உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களை விட மக்களுக்குரிய பல அத்தியாவசிய சேவைகளை அவர்களின் காலடிக்கு எடுத்துச் செல்வதற்குப் பிரதேச சபைக் கட்டமைப்பினால் முடிகின்றது. அந்தந்தப் பிரதேச மக்களின் அனுசரணையுடன் மக்கள் நலன் நாடிய சேவைகளையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ளும் அதிகாரங்களைக் கொண்டவையாகப் பிரதேச சபைகள் விளங்குகின்றன. அங்கு பணிபுரியும் அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, வட மாகாணத்தில் உள்ள பதினாறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் பிரதேச சபைகளாகத் தரமுயர்த்த அரசு மேற்கொண்ட முடிவு வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும். அரசாங்கத்தின் இந்த முடிவு பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன்களுக்கும் அவர்கள் வாழும் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் வழிசெய்யும்.

போரைக் காரணம் காட்டி இந்தத் தரமுயர்வுகள் தள்ளிப்போடப்பட்டிருந்த போதிலும், வடக்கின் அபிவிருத்தி கருதி இப்போது அரசு அதில் அக்கறை காட்டியுள்ளமை காலத்தின் தேவையாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட புதிய பதினாறு பிரதேச சபைகளினதும் நிர்வாகிகள், தமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி, நொந்துபோயுள்ள மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகளையும், அந்தந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளையும் வேகத்துடன் முன்னெடுக்கவேண்டும்.

குறிப்பிட்ட பிரதேசங்கள் இதுவரை கண்ட பின்னடைவுகளை நீக்குவதற்கும், மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட மனங்கொள்வராக. மக்களுக்கும் தமக்கும் நீண்டகாலத்தின் பின்னர் எதிர்பாராமல் கிடைத்த வெகுமதி எனக் கருதி எழுச்சியுடன் செயற்படவேண்டும்.

'இன்றே செய்க அதனை நன்றே செய்க' என்று புதுப்பாதையில் காலடி வைத்து மக்கள் தொண்டாற்றவேண்டும். அதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் தக்கவாறு பயன்படுத்துவார்களா.

# தகுதியான முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பாரபட்சமின்றி ஊக்குவிப்புத் தொகை

## ஆளுநரின் செயலாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஏப்.10

தகுதியான முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வ்ழங்கப்படும். இதில் பாரபட்சத்துக்கு இடமில்லை. ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் பட்டியலில் இருந்து விடுபட்டவர்களின் பெயர்களும் விரைவில் இணைத்துக்கொள்ளப்படும் என உறுதியளித்தார் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே வடமாகாண ஆளுநரின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச உத்தியோகம் வழங்குவதற்காக நியமனம் வழங்கப்படவில்லை. அரச சேவையை நிறைவேற்றவே நியமனம் வழங்கப்படுகிறது. மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் விதமாக இதயபூர்வமாக நாம் சேவை செய்ய வேண்டும்.

அதிகாரத்தைக் கையில் எடுத்து மக்களைப் புறக்கணிப்பது அழகற்றது. மக்களுக்கு சேவை செய்வதே அரச உத்தி யோகத்தரின் முக்கிய பொறுப்பாகும் என்றார்.

அத்துடன் முன்பள்ளிப் பருவம் என்பது மிகவும் முக்கியமானதாகும். 2400 முன்பள்ளிக்ள் இங்கு உள்ளன. ஆனால் இவற்றில் எந்தளவுக்கு தரம் பராமரிக்கப்படுகிறது என்ற கேள்வி எழுகின்றது. இதற்காகவே வடமாகாண ஆளுநரால் முன்பள்ளி முகாமைத்துவத் திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது என்றார். (த-14)

## வட மாகாணத்தில் வெற்றிடங்களை நிரப்ப

# 250 தாதிய உத்தியோகத்தர்கள் விரைவில் உள்வாங்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஏப்.10

வட மாகாணத்தில் உள்ள வைத்திய சாலைகளுக்கு 250 தாதிய உத்தியோகத்தர் களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நிலவுகின்ற தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு சுகாதார அமைச்சு மாணவத் தாதியர் பயிற்சிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் முற்பகுதியில் நடத்தப்பட்டு 250 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுகின்ற தாதிய மாணவர்களில் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 150பேருக்கும், வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 100 பேருக்கும் பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் இவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# யாழ். - கொழும்பு இடையே இப்போது துரித தபால் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.10

கொழும்பில் இருந்து ரயில் மூலம் வவுனியாவுக்கு எடுத்துவரப்படும் தபால் பொதிகள் அங்கிருந்து உடனடியாகவே யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெவித்தார்.

தற்பொழுது கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையிலான தபால் ரயிலின் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து இரவு 8.30 மணிக்குப் புறப்படும் தபால் ரயில் மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு வவுனியா ரயில் நிலையத்தை வந்தடைகின்றது. இந்தத் தபால் ரயிலில் இருந்து எடுத்து வரப்படும் யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் உடனடியாக வாகனம் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டுத் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

அதே போல் இங்கிருந்து சேகரிக்கப்படும் தபால்கள் இந்த ரயில் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்றார் அந்த அதிகாரி. (த-26)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் பல்வேறு உதவித் திட்டங்கள்

நெல்லியடி, ஏப்.10

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் 'பாசிக்' , 'சோ ஆ' ஆகிய நிறுவனங்களின் நிதி உதவியில் பல்வேறு உதவித்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. 'பாசிக்' நிறுவனம் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆழியவளை, வத்திராயன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் 50 பேருக்கு கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடி வலைகளையும் 53 பேருக்கு படகு இயந்திரங்களையும் வழங்கவுள்ளது.

'சோ ஆ' நிறுவனம் செம்பியன்பற்று வடக்குப் பகுதியை சேர்ந்த சுமார் 170 பேருக்கு அரை நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மீளக்குடியமர்ந்துள்ள மருதங்கேணி, உடுத்துறை பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த சிறுதொழில் முயற்சிக்கடன்களை வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-319)

# புத்தாண்டு சுபவேளையில் பாடசாலைகளில் மரம் நடுகை

பருத்தித்துறை, ஏப்.10

புத்தாண்டு சுபவேளையில் 4 மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத் திட்டத்தை யொட்டி நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் பதாகையினை (பனர்) தயாரித்து காட்சிப்படுத்துமாறு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

"இன்று பயிரிடுவோம், நாளை அறு வடை செய்வோம்" என்ற வாக்கியம் கொண்ட பதாகையினையே பாடசாலைகளில் காட்சிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. பதாகையின் அமைப்புக் கொண்ட இறுவட்டுக்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளன. (த-190)

# நினைவுகளைச் சுமந்தபடி .....
# 31 ஆம் நாள் நினைவலைகள்

ஒளி தர வந்தது
24
03
1996



இருள் தந்து சென்றது
11
03
2011

அகில் குட்டி!
கலகலத்துப் பேசி- எமை
மகிழ்வித்த இளஞ்சிட்டே!!!
காலம் வருமுன்பே- நீ
கடுகதியில் சென்றதெங்கே???
கனத்தவை கழியட்டும்- நீ
நினைத்தவை நிறைவேறட்டும்
புலர்வுகள் ஒவ்வொன்றும்- உன்
பெயர் சொல்லிப் புலரட்டும்-எம்
அகங்கள் யாவும்- உன்
நினைவுகளால் நிறையட்டும்
அகிலம் உள்ளவரை- உன்
நினைவுகளும் நிலைத்திருக்கும்
நித்தம் வழி பார்த்து-நீ
நேசித்த உன்னுறவுகள்- வழி மேல்
விழி வைத்து உன் வருகையை எதிர்பார்த்து.

அமரர்
**சந்திரசேகரன் அகிலஜன்** (அகில்குட்டி)

கடந்த (11.03.2011) அன்று இறைபமதடைந்த எமது மகனின் பிரிவுச் செய்தி கேட்டு- இல்லம் வந்து இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், துண்டுப் பிரசுரங்களால் கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்தவர்களுக்கும், மலர் வலயங்களைச் சாத்தியோருக்கும், எமது பிள்ளையின் கல்விச் சமூகத்துக்கும், மேலும் வெவ்வேறு வழிகளில் உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், பாடசாலைச் சமூகத்தினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

இல. 27/16, பூநாறி லேன்,
வண்-வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

உன் நினைவுகளைச் சுமந்தபடி
உன் குடும்பத்தினர்.

## உயர் வகுப்பு மாணவர்களுக்கு நாளை செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.10

ஜி.சீ.ஈ (உ/த) 2011, 2012 இல் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளவையியலும் விஞ்ஞானமுறையும் புதிய பாடத் திட்ட அறிமுகச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

(ஒ-323)

# சிறு நீரகம் தேவை

B+ இரத்த வகை நோயாளர் ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகின்றது. கருணை உள்ளம் படைத்தவர்களின் உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு:-0777397824**

நெஞ்சை விட்டகலா
## 2ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
04
01
1933



மறைவு
01
04
2009

**அமரர் தம்பு தியாகராசா** (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
B.A (Hons) (Mad), B.A (Special) Dip.in.Ed (Cey)

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்

கல்வியில் ஆசானாய்
பல்வகை அறிவும் பெற்று பூமி
தன்னையே ஆய்ந்து கண்டு
நல்ல புத்தகங்கள் தந்தீர்

ஊனுடம்பை ஆலயமாய்த்
திருமூலர் சொல்லி வைக்க
ஆலயத்தை உம் உடம்பாய்
நீர் கண்டு பணி செய்தீர்

நேற்றுப் போல் உள்ளதப்பா
ஈராண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலாது

**என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல சந்திரசேகரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.**

இல 22. இலந்தைக்குளம் வீதி
சொழும்புத்துறை

தகவல்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் சோமசேகரம்

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)



சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பு-7, கின்சி வீதியில் வசித்து வந்தவருமான சோமசுந்தரம் சோமசேகரம் நேற்று(09.04.2011) சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் தம்பதியரின் அருமைப் புதல்வன் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் விருப்பப்படி தனிப்பட்ட ரீதியில் நேற்று சனிக்கிழமை (09.04. 2011) மாலை 5 மணிக்கு சமயக்கிரியைகளைத் தொடர்ந்து தகனக் கிரியைகள் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
P.பாஸ்கரசிங்கம்.

## தரம் 11 கணித வகுப்புகள்

தரம் 9, 10, 11,O/L Day ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு வீடு வந்து பிரபல ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு-0779279469

## விற்பனைக்கு

வேம்பு, முதிரை கலந்த அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கவுண்டர் மேசை இரண்டு, 7 அடி நீளம் 12 அடி நீளம் சோக்கேஸ், றாக்கை, அலுமினிய பிறேம் கண்ணாடியுடன் மூன்று, (12 அடி நீளம் 8 அடி உயரம்) விற்பனைக் குண்டு நகைக்கடைக்கு உகந்தது. தொடர்பு : 0785015186

## உடனடி வேலைவாய்ப்பு

காசாளர்+ கணக்கு லிகிதர் தேவை (பெண்கள்) இரண்டு குணநலச் சான்றிதழுடன் நேரில் வரவும்.

கலிபோர்னியாசிற்றி ரெஸ்ரோரன்ட்
கோண்டாவில் கிழக்கு, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
Californiya City Restaurant, Kondavil
0774710002

## வெகுவிரைவில் வெளிவருகிறது..
## சீதனம்..
## மாத இதழ்!!

**ஒரு சமுக விடுதலைக்கான தணியாத தாகம்!!**

உள்ளங்களில் விதைத்து உரிமைகளாய் வென்றெடுப்போம்!

**வரதட்சணை வரமா? வஞ்சகமா?**

பாடசாலை, திறந்த மட்டத்திலான போட்டிகள்
1. சிறுகதை
2. ஆய்வுக்கட்டுரை
3. கவிதை
4. உண்மைச் சம்பவங்கள்

முதல் 3 இடங்களுக்கான பரிசில்கள் தலா
50,000/=25,000/-15,000/-

தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்

ஆக்கங்கள் வந்துசேர வேண்டிய இறுதித்திகதி 01.05.2011

அனுப்பவேண்டிய தபால் முகவரி:
Seethanam Publication
No. 83,37th Lane Wellawatta,
Colombo-06
E-mail:seethanam@gmail.com
மேலதிக தொடர்புகளுக்கு:
0777380251,0114373764

உண்மையைச் சொல்வோம் அதை உரத்துச் சொல்வோம் வாருங்கள் தோழர்களே. தோழிகளே- நமக்காக நாம்

# கண்ணீர் அஞ்சலி



**செல்வி அனுசா செல்வராசா**
(உடற்கல்வி ஆசிரியை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

இந்துக் கல்லூரியின் இணையற்ற முத்து நீ
தந்தனை சேவை பல தரமான சொத்து நீ
உந்தி பல சாதனைகள் படைத்திட்ட சத்து நீ
உந்தனைப் போல் உறவொன்று எங்கிருக்கும் எமக்கினி?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யாழ். இந்துக்கல்லூரி

# மரண அறிவித்தல்

## யோகவனம் தேவானந்தர்



(Retd. Chief D.O.A Survey Dept.-1944-1983)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டி, சுழிபுரம், கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட யோகவனம் தேவானந்தர் (06.04.2011) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் (சுழிபுரம் மத்தி) அவர்களின் பாசமிகு கணவரும், மீரா(U.K), யோகா(U.K), காலஞ்சென்ற குகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன்(U.K), தவலிங்கம்(U.K) ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் Goldes Green Crematorium இல் இன்று(10.04.2011)ஞாயிற்றுக்கிழமை இந்து முறைப்படி தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி மீரா மனோகரன்(U.K)-00441757773646
திருமதி யோகா தவலிங்கம்(U.K)- 00447743886732

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1996
03
18



இறப்பு
2010
03
22

திதி- ஸப்தமி 10.04.2011 திங்கள்


**யோகராசா பார்த்தீபன்**

பார்த்துப் பார்த்து பழகிய முகம்
பலதூரம் சென்றதுவோ?
கோர்த்து நடந்த உன் விரல்கள்
எம்மோடு இல்லை இன்று- எதிர்
பார்த்து விழி பூத்திருப்போம் உன் வழியில்!!

T.யோகராசா,
கெருடமடு, வசந்தபுரம்.

அப்பா, அம்மா, பெரியம்மா, மாமாமார்,
மாமிமார், சகோதரர்கள், அப்பம்மா.

# இனவாத மயப்படும் விளையாட்டு உலகம்



ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

அது வடமராட்சியின் ஒரு பெரிய கிராமத்தின் சிறிய குறிச்சி. முன்னாள் இடதுசாரியான அந்தப் பெரியவர் தற்சமயம் இலங்கை கிரிக்கெட் அணியின் உறுதியான ஆதரவாளர். அதுமட்டுமின்றி அந்தக் குறிச்சியையே இலங்கைக் கிரிக்கெட் அணியின் ஆதரவுக் கோட்டையாக வைத்திருந்தார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆரம்பித்த நாளிலிருந்து அந்தக் குறிச்சியின் இளைஞர்கள் இலங்கை அணிக்கான தங்கள் ஆதரவை இயலுமான அத்தனை வழிகளிலும் தெரிவித்து வந்தனர். இலங்கை அணி காலிறுதி, அரையிறுதி ஆட்டங்களிலெல்லாம் வெற்றிபெற்றபோது வெடியோசையில் அந்த ஊரே அதிரும். அந்தக் குறிச்சியின் சனசமூக நிலையம் கிரிக்கெட் விமர்சனங்களால் நிரம்பி வழியும். இவற்றுக்கெல்லாம் அந்தப் பெரியவர்தான் தலைமை தாங்குவார்.

அன்று உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி நாள். அவர்கள் இலங்கையின் வெற்றியைக் கொண்டாடப் பட்டாஸ் கட்டுகளுடன் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த னர். போட்டியின் இறுதி நேரம் நெருங்க நெருங்கப் பரபரப்பு அதிகமாகியது.

இறுதியில் இந்திய அணி வெற்றி பெற்றுவிட்டது. ஒரு பெரும் எதிர்பார்ப்பு இடிந்துபோக இளைஞர்களின் முகம் கறுத்துவிட்டது. அவர்களின் நிலை பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

ஆனால், பெரியவர் உடனடியாகத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். ''டேய் இவ்வளவு ஒரு முக்கிய உலகப் போட்டியில எங்களுக்கு இரண்டாவது இடம். அதே ஒரு பெரிய வெற்றிதானே! கொளுத்துங்கோடா வெடியை. அவரின் வார்த்தைகள் மந்திரமாக, இளைஞர்கள் மீண்டும் உற்சாகமானார்கள்.

வெடியோசையும் ஆரவாரமும் காற்றை நிறைக்கிறது. சிறிது நேரத்தில் வேகமாக வந்த வெள்ளை வான் ஒன்று திடீர் 'பிரேக்' அடித்து நின்றது.

''ஆர் இப்ப வெடி கொளுத்தினது?'' வானை விட்டுக் குதித்து இறங்கியவர்களில் ஒருவன் கேட்டான்.

பெரியவர் பெருமிதத்துடன் முன் வந்தார். ''நாங்கள்தான் தம்பி'' இலங்கையராய் இருந்து கொண்டு இந்தியாவின்ரை வெற்றிக்கு வெடி கொளுத்த உங்களுக்கு வெட்கமில்லையே. பெரியவர் தயக்கத்துடன் கூறினார். நாங்கள் இலங்கைக்கு ஆதரவாய்த்தான் கொளுத்தினனாங்கள்.

அவன் கோபமாக ''என்ன சுத்திறியளே?'' என்றுவிட்டு பெரியவரை ஓங்கி அறைந்தான்.

''ஒரு சத்தம் சள் இருக்கக் கூடாது. எல்லோரும் உடனை போய் உங்கட வீடுகளிலை படுத்திட வேணும்'' வெள்ளை வாகனம் போய்விட்டது. அனைவரும் திகைத்து நின்றனர். உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி நாளில் இடம்பெற்ற பல சம்பவங்களில் இதுவும் ஒன்று.

வல்வெட்டித்துறையில் இந்தியாவுக்கு ஆதரவாக வெடிகொளுத்தியவர்கள் தாக்கப்பட்டனர். வெடி கொளுத்தி சூழலை மாசுபடுத்தியதாகச் சிலர் கைது செய்யப்பட்டதாகவும் ஒரு சர்வதேச ஊடகம் தெரிவித்தது. ஹற்றனில் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் தாக்கப்பட்டது மட்டுமின்றி அவர்களின் வீடுகளும் சேதமாக்கப்பட்டன.

அதாவது இந்திய அணிக்கு ஆதரவு தெரிவிப்பது ஒரு குற்றச்செயல் என்றே அவர்க ளால் பார்க்கப்படுகிறது. இதில் நகைப்புக்கிடமானது என்னவெனில் இலங்கை அணியின் ஆதரவாளர்கள் கூட இந்தியாவை ஆதரித்ததாகக் கருதப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கின்றனர். அதே வேளையில் நேரடியாக இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்தவர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

இதிலிருந்து பிரகடனப்படுத்தப்படும் செய்தி என்னவெனில், இலங்கையில் வாழும் எவரும் விரும்பியோ விரும்பாமலோ இலங்கை அணிக்கு ஆதரவு தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள். அந்தக் கட்டளை மீறப்பட்டால் தண்டிக்கப்படுவார்கள் என்பதுதான்.

அடிப்படையில் விளையாட்டு என்பது நாடுகளின் எல்லைகளைக் கடந்தது. வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்களுக்கு வெவ்வேறு நாடுகளில் ரசிகர்கள் இருப்பார்கள். சில விளையாட்டு வீரர்களின் தனித்துவங்கள் சில ரசிகர்களை அவர்களின் விசிறிகளாக்கி விடுவதுண்டு. உதாரணமாக முத்தையா முரளிதரனுக்குப் பல நாடுகளிலும் ரசிகர்கள் மட்டுமின்றி பல அணிகளின் வீரர்கள் மத்தியிலும் கூடத் தனிப்பட்ட செல்வாக்கு உண்டு. இவ்வாறே சச்சின் டென்டுல்கருக்கு உலகம் முழுவதுமே ரசிகர்கள் உண்டு.

இதேபோன்று ஒரு காலத்தில் இலங்கை அணியின் சிறந்த துடுப்பாட்ட ஆட்டக்காரராக விளங்கிய மறைந்த சதாசிவம் அவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டபோது அவரை விடுதலை செய்ய வேண்டுமெனப் பல நாடுகளின் ரசிகர்கள் கோரிக்கை வைத்தமை நினைவிருக்கலாம்.

எல்லாவற்றையும் விட ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் வீரர்கள் நாடுகளின் எல்லைகளைக் கடந்து அணிகளாகி விளையாடுவதை நாம் காணமுடியும்.

இப்படியாக விளையாட்டுக்கள் நாடு, இனம், மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்து ஒரு பொதுத்தன்மையைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

ஆனால், இலங்கையிலோ இந்த மகத்தான பொதுத்தன்மை சிதைக்கப்பட்டது மட்டுமின்றி இது ஓர் அரசியல் ஆயுதமாகவும் மாற்றப்பட்டுவிட்டது. இலங்கைத் தேசிய வெறியை ஊட்டுவதில் மட்டுமின்றி இனவெறிச் சிந்தனைகளிலிருந்து சிங்கள மக்களை மீண்டுவிடாமல் தக்க வைப்பதிலும் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உலகக்கிண்ணப் போட்டியின் இறுதிப் போட்டி இலங்கை அணிக்கும் இந்திய அணிக்குமிடையே மும்பையில் நடைபெறவிருந்த சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரில் களநிலைத் தளபதியாக விளங்கிவரும் தற்போது ஐ.நா.வின் இலங்கைக்கான பதில் வதிவிடப் பிரதிநிதியுமான சவேந்திர டி சில்வா இறுதி ஆட்டத்தில் இலங்கை பெறும் வெற்றிப் போரில் உயிர்விட்ட படை வீரர்களுக்குச் செலுத்தும் காணிக்கை எனத் தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வழி நடத்தியவரும் தற்போது சிறைவாசம் அனுபவிப்பவருமான முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா இலங்கை அணி பெறவுள்ள வெற்றி விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பெற்ற வெற்றிக்கு ஒப்பானது எனத் தெரிவித்திருந்தார்.

இவற்றிலிருந்து ஏற்கனவே இலங்கை, இந்திய அணிகளுக்கான இறுதிப் போட்டிக்கு ஓர் இனத்துவேஷ அடிப்படை திட்டமிட்ட முறையில் ஏற்படுத்தப் பட்டுவிட்டதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்தப் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றிருந்தால் தமிழர்களுக்கு எதிரான இன்னொரு வெற்றியாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும். ஆனால் இப்போட்டியில் இலங்கை தோல்வியடைந்தாலும் கூட இந்தியத் துவேஷம், தமிழ் மக்களுக்கு எதிரான இனத்துவேஷம் என்பவற்றைச் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் வலுப்பெற வைத்துவிட்டதில் வெற்றிபெற்றுவிட்டனர்.

வடக்கிலும் ஹற்றனிலும் வெடி கொளுத்தியவர்கள் மேல் நடத்தப்பட்ட வன்முறைகள் அதைத் தெளிவாகவே புரிய வைத்துவிட்டன.

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் கூட ஆட்சியிலுள்ள அதிகாரபீடங்களின் விருப்புகளுக்கு அமையவே வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றளவுக்கு இன ஒடுக்குமுறை ஒளிவுமறைவின்றியே அமுலாக்கப்படுகிறது.

அதேவேளையில் இலங்கை அணியினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கௌரவித்து நடத்திய விருந்துபசாரத்தின் போது அவர் 120 கோடி இந்திய மக்களின் மகிழ்ச்சிக்காக 2 கோடி இலங்கை மக்கள் உலகக் கிண்ண வெற்றியை விட்டுக் கொடுத்துள்ளனர் எனவும் இலங்கை அணியினர் பெருந்தன்மையுடன் தோல்வியடைந்தனர் என்றும் தெரிவித்திருந்தார்.

இதன் அர்த்தம் இலங்கை அணி விட்டுக்கொடுத்தமையாலேயே இந்திய அணி வென்றது என்பதாகும். இந்தக் கருத்து இந்திய அணியின் திறமையையும் முயற்சியையும் கேவலப்படுத்துவதுடன் இலங்கை அணியின் விளையாட்டு விசுவாசத்தையும் கொச்சைப்படுத்துவதாகும்.

இந்தக் கருத்தில் உள்ள உண்மை, பொய்க்கு அப்பால் இலங்கையின் அதிகாரபீடம் விளையாட்டை விளையாட்டுக்குரிய கௌரவத்துடன் பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது.

இலங்கையில் தேசியவாதத்தின் பேரால் மேல்நிலைப்படுத்தப்படும் இனவாதம் எங்கும் பிரதிபலிப்பது போலவே கிரிக்கெட் விளையாட்டையும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது.

**விற்பனைக்கு**

டோமன் பின்சர் (Domen Pincer) ஆண், பெண், தூய இன நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0778448449

**மணமகன் தேவை**

யாழ். இந்து வேளாள குடும்பம் 1985 இல் மேடராசியில் பிறந்த லக்கினத்தில் சூரி.ராகு 2இல் நட்புப் பெற்ற செவ்.கி.பா. 67 சித்திரை 1ஆம் பாதம் கனடா P.R உடைய பெண்ணுக்கு படித்த அழகான வரனைப் பெற்றோர் தேடுகின்றார்கள். தொடர்புக்கு: 0776568910

**WANTED**

- Medical Representative.
- Speaking English.
- Below 25 years.
- 1-2 years experience.
- For Jaffna.
- Trainees are also considered.

Apex Pharmaceuticals (Pvt) Ltd.
11,Gnanathilaka Road,
Mount Lavinia.
Tel : 0777906430 Email :apexpharma@sltnet.lk

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

சாவகச்சேரி ஸ்ரேசன் லேனைச் சேர்ந்த சுபாஸ்கரன்- தர்சினி தம்பதியரின்

**செல்வப்புதல்வி ஷௌமியா**

தனது முதலாவது பிறந்தநாளைஇன்று (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா,அம்மா, அப்பப்பா சிவலிங்கம், அப்பம்மா நாகேஸ்வரி, குட்டிச்சித்தா சுதர்சன், மாமா மயூரதன், அத்தை நிஷா, மச்சான் அபிநாத், சுவிஸ்லாந்திலுள்ள மாமா ஸ்ரீபன், அத்தை சுதர்சினி, மச்சான் டனீஸ், மச்சாள் டனிக்ஷா, மச்சாள் ஜெனிஷா, காரைக்காட்டு லேனைச் சேர்ந்த அம்மம்மா இராஜேஸ்வரி, பெரியப்பா பெரியம்மாமார்களான சிறிக்குமார் - றஜந்தினி குடும்பம், இத்தாலி கரீந்திரன்- சுமந்தினி குடும்பம், ஜேர்மனி கிருபானந்தன்- வசந்தினி குடும்பம், மாமன் மாமிமார்களான ரவிச்சந்திரன்- சிமி குடும்பம் (கனடா), உதயச்சந்திரன் குடும்பம்(கனடா), பிறேமச்சந்திரன்- சுஜித்தா குடும்பம் (இத்தாலி), ஜெயச்சந்திரன்(இத்தாலி), சிவச்சந்திரன் (லண்டன்), சுமதாஸ்(லண்டன்) சன்ஜீவன்(ஜேர்மனி) மற்றும் உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஷௌமியாவை எல்லாம் வல்ல சிவன் அம்மன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.




ஸ்ரேசன் லேன்,
சாவகச்சேரி.

தகவல்:
அப்பப்பா- சிவலிங்கம்
(சோமு).




புது வருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக, ஏப்ரல் 14ம் திகதி மாலை 4.00 மணி முதல் இரவு 6.00 மணி வரை, சகல NDB வங்கிக் கிளைகளும் திறந்திருக்கும். யாழ், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைக் கிளைகள் காலை 11.30 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

இந்தப் புது வருடச் சலுகை, ஏப்ரல் 07ம் திகதி முதல் 20ம் திகதி வரை பரிசுகள் தீரும் வரையில் அமுலில் இருக்கும்.

அழையுங்கள் 011 2 44 88 88

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

**ஒரே கூரையின் கீழ்**

**BOYS WORLD and SPORTS WORLD**

முதன்முறையாக ஆடவர்களின், விளையாட்டு வீரர்களின் தேவைகளை 100% பூர்த்தி செய்யக்கூடிய Boys World, Sports World யாழ்.நகரில்...

**Boys World இல்**
புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட தரமான நவீன டிசைன்களில் அமைந்த டெனிம், சோட்ஸ், ரீசேட், ரவுசர் மற்றும் அழகு சாதனப் பொருட்களுடன்,

**Sports World இல்**
அனைத்து விதமான விளையாட்டு உபகரணங்கள், Champion Cups, Medals, உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் கழகங்களுக்கான Jerses, Band set இசைக்கருவிகள் நீச்சல் உபகரணங்கள்

மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

World Cup 2011 J.C (Sri Lanka, India, South Africa, England)
IPL J.C (Mumbai Indians, Chennai Superkings)

குறிப்பு : சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

213 1/3, கஸ்தூரியார் வீதி, லலிதா கட்டிடம் 1ஆம் மாடி, (ராஜா தியேட்டர் அருகாமை), யாழ்ப்பாணம். ☎: 0773604830

யாழ்.நகரில் முதன்முறையாக Champion Cup, கேடயங்கள், Medals, உடற்பயிற்சி உபகரணங்கள் போன்றவற்றுக்கென பிரமாண்டமான தனிக் காட்சியறை

**நீங்களும் ஒரு இளமாணி/ முதுமாணி பட்டதாரியாகலாம்**

External Degree-ALAGAPPA UNIVERSITY (INDIA)

**BA, BBA, B.COM, BSc., MSc., MA, MCom, MBA**

தமிழ், ஆங்கிலமொழி மூலம் வெளிவாரி பட்டப்படிப்பை நாடு முழுவதும் தபால் மூலமாகவும், நேரடியாகவும் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்

தகமை : A/L 3 சாதாரண சித்திகள் இப்பட்டப்படிப்பை தொடர்வதற்கு பதிவுகளையும், பாடகுறிப்புக்களையும் எமது கல்வியகத்தினூடாக மேற்கொள்ள முடியும்

Registered and Approved Study Centre
**GENIUS ACADEMY**
Colombo, Kandy, Puttalam,Vavuniya, Jaffna, Trincomalee
Tel : 077 9914260, 011 3134067

**வேலை ஆள்கள் தேவை**

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சைவ உணவகத்துக்கும் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் உணவகத்துக்கும் சமையல் உதவியாளர்கள் மற்றும் சமையற்காரர்கள் தேவை. தொடர்பு: 0778435564

**வீடு விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், பற்றிக்ஸ் வீதியில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0772767037
0772489903

**சேவை (காணி/வீடு)**

யாழ்ப்பாணம்-ELECO Constructions உங்கள் காணிகளில் உங்களுக்கு வேண்டிய வீட்டைக் கட்டுவதற்கும், எம்மிடம் காணிகளைக் சொன்னளவு செய்து (1, 1½, 2 பரப்பு) வீட்டைக் கட்டுவதற்கும் எம்மை தொடர்பு கொள்ளவும். (மிகக் குறைந்த நாள்களில் வங்கிக் கடன் ஒழுங்குகள், BOQ என்பன செய்துதரப்படும்) இப்பொழுது எமது கட்டட நிர்மாண வேலைகள் கோண்டாவிலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு: 0775 214747, 0770591295

**தேவை**

உடனடித் தேவை. பிளம்பர், எலக்ரீசியன், மேசன், Spray பெயிண்டர் (வீட்டுத்தளபாடங்கள்) தேவை. கட்டாரில் வேலை செய்வதற்கு
தொடர்பு: 0777354084

**வீட்டுப் பணிப்பெண்களுக்கான இலவச**
**வேலை வாய்ப்பு**

**விரைவில் பயணம்**

உணவு, தங்குமிடம், வைத்திய வசதிகள், சென்றுவர விமான பயணச்சீட்டு முற்றிலும் இலவசம்

**சம்பள விபரங்கள்**

| | |
|---|---|
| ❖ சவுதி அராபியா | 19 700 (SR 650) |
| ❖ லெபனான் | 20 000 (USD 180) |
| ❖ ஜோர்தான் | 22 200 (USD 200) |
| ❖ அபுதாபி | 25 000 (AED 825) |
| ❖ தோஹா கட்டார் | 21 200 (QR 700) |

தொடர்புகளுக்கு : S. Sujitha - 011 5658003, 077 3604069

வெளிநாட்டு முகவர்களே நேரில் வந்து நேர்முகத் தேர்வு நடாத்துவர்.

சொனெக் லங்கா ப்ரைவேற் லிமிடெட்

SONAK
3A, ஆனந்த மாவத்தை,
மருதானை, கொழும்பு - 10.
தொலைபேசி இல : 011 5658003/011 4337303
ஈமெயில் : sonaks@sltnet.lk, sonaklanka@yahoo.com
அனுமதி இல: AL/1455/05/11, Al/1455/04/11,AL/1455/06/11, AL/1455/03/11

**எனது கனவு பிரித்தானிய பட்டப்படிப்பு**

சர்வதேச அங்கீகாரம்பெற்ற பிரித்தானிய ஹோட்டல் / சுற்றுலா முகாமைத்துவம்

தேம்ஸ் தனது பட்டப்படிப்பில் இணையும் மாணவர்களுக்கு இலண்டன், அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து மற்றும் நியுசிலாந்து செல்ல இலவச ஆலோசனைகள் மற்றும் ஆவணங்கள் தயாரித்தல் சேவைகளை வழங்குகிறது.

டிப்ளொமா 09 மாதம் ▶ உயர் டிப்ளொமா 09 மாதம் ▶ கலைமானி 12 மாதம்

க.பொ.த சாதாரண தர / உயர்தர சித்தியுடன் கலைமானி பட்டம் - இன்றே அழையுங்கள்

Mr. Arzad
0783856840

கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தும் வசதி

ஆங்கிலப் புத்தகம் இலவசம் - ஏப்பிரல் 30ம் திகதிவரை

**Thames College**
153 1/1, High Level Road, Nugegoda
T : 011 5737307 / 011 2825895
E : info@thamescollege.lk
W : www.thamescollege.lk

## விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.10

சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்தவர்களை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூவரும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் நெல்லியடி அரசடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த வி.விவேகானந்தன் (வயது - 17) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். த. குகதாஸ் (வயது - 19) என்பவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார். மற்றையவர் வெளிநோயாளர்பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். நெல்லியடிப் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்றவரை விசாரணைக்குட்டுத்தியுள்ளனர்.

(ஐ-4)

**வாடகைக்கு**

**நல்லூர்**

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கும், பொஸ்கோ பாடசாலை சந்திக்கும் இடையில் (இல. 174/16, கோயில் வீதி) 6 அறையுடன் இணைந்த குளியலறை தரையோடு பதிக்கப்பட்ட பெரிய வீடு

**நிறுவனங்களுக்கு**

வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு - 0776307106

# வாசித்தல் ஒரு கண்ணோட்டம் 5

உற்சாகத்துடன் கவனமெடுத்துக் கிரகித்து வாசித்துக் கொள்வதைச் ''செயற்திறன்சார் வாசிப்பு'' என்பர்.

உற்சாகமின்றி, என்ன வாசிக்கின்றோம் என்ற சிந்தனையின்றி முறையில் எதுவித பதிவுமின்றி வாசித்தலை ''மந்தநிலை வாசிப்பு'' என்று கூறுவர்.

பாடநூல்களை வாசிப்பதற்குச் செயற்திறன்சார் வாசிப்பு முறையே ஏற்றது. இந்தமுறையில் பயிற்சி பெற்றுக்கொள்வதற்கு

- ஆறுதலாகச் சிந்தித்து வாசித்தல் வேண்டும்.
- குறிப்பு - எழுதி வாசித்தல் வேண்டும்.
- நூலுடன் உரையாடிக்கொண்டு வாசித்தல் வேண்டும்.
- வாசித்தவற்றில் நினைவிலுள்ளதை உறுதி செய்துகொள்ள அடிக்கடி மீட்டுப்பார்த்து, தொடர்ந்து வாசித்தல் வேண்டும்.

**நூலுடன் உரையாடல்**

இவற்றுள் நூலுடன் உரையாடிக்கொண்டு எவ்வாறு வாசித்தல் என்பது சற்றுப் புதிரானதாக இருக்கலாம். அது மிக இலகுவானது. நூலில் கூறப்பட்டுள்ள விடயத்தைக் கவனத்துடன் வாசித்து உள்வாங்கி விளங்கிக் கொண்ட பின்னர் அந்த விடயத்தில் நீங்கள் சிறுசிறு கேள்விகளைக் கேட்டு விடைகளை நூலில் இருந்து பெற்றுத் தெளிவுடன் கிரகித்துக் கொள்ளும் முறைதான் அது.

நூலில் என்ன கூறப்பட்டுள்ளது? நூல் ஆசிரியர் ஏன் அதைக் கூறுகின்றார்? அவ்வாறு கூறப் பட்டுள்ளது சரியா? அதற்கு ஆதாரம் உண்டா? அந்தத் தகவல்களில் நம்பகத்தன்மை உண்டா? இவை போன்ற வினாக்களைக் கேட்கும் போது, நூலில் விடை பெறப்படும்.

**மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் மேம்பட வேண்டும்**

இந்தச் செயற்பாட்டையே நூலுடன் உரையாடல் என்கின்றார்கள். இந்த முறையில் வாசிக்கும்போது நூலுடனான ஈடுபாடு அதிகரிக்கும். வாசிக்கும் விடயம் தெளிவுடன் விளங்கிக் கொள்ளும். விளக்கம் பெறும் அந்த வாசிப்பு மனதில் இலகுவில் பதிந்து கொள்கின்றது. இதனையே செயற்திறன்சார் வாசிப்பு வரவேற்கின்றது.

இங்கு வாசகர் கேட்கும் கேள்விகளுக்கு நூலில் விடை பெறமுடியாவிட்டால் ஆசிரியர் அல்லது சிரேஷ்ட மாணவர்களிடம் கேட்டுச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக ஆசிரியர் ஒருவரை அல்லது சிரேஷ்ர மாணவர் ஒருவரை ''அறிவாற்றுநர்'' என்ற வகையில் கொண்டிருத்தல் பொருத்தமுடையது. அது செயற்திறன் சார் வாசித்தலுக்கு உதவவல்லது.

ஒரு தடவை வாசித்த விடயத்தை விளங்கச் சிரமப்பட்டு அதைத் திரும்பவும் வாசிக்க நேரிடுகின்றதா? வாசிக்கும்போது விடயத்தில்கொள்ள வேண்டிய கவனத்தின் குறைவினால் அது ஏற்படலாம். அல்லது விடயங்களில் கூறப்பட்டுள்ள நுட்பமுறை களையோ அல்லது நுட்பவிவரங்களையோ தெளிவாகக் கவனிக்காததால் தோன்றியிருக்கலாம்.

இது குறிப்பிட்ட ஒரு பாடத்தை வாசித்து முடிப்பதற்கு முன் பல தடவைகள் ஏற்படக்கூடும். இன்னும் அது உங்கள் உடல், உள களைப்புக் காரணமாகவும் ஏற்படக்கூடும். இவைதோன்றாதவாறு பாதுகாத்து வாசிப்பை மேற்கொள்ளவேண்டும். இடைவிட்டுக் கற்றல், ஓய்வு எடுத்தல், உடற்பயிற்சி, தியானம் ஆகியனவும் கற்கும் விடயத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து வாசித்து ஞாபகத்தில் வைத்திருத்தல் ஆகியனவும் வாசிக்கும் விடயத்தை மனதில் பதித்துக்கொள்ள உதவும் உத்திகளாகும்.

**முதல் வசனமும் கவனமும்**


ஒரு நூல், சில அதிகாரங்களையும் ஓர் அதிகாரம், பல தலைப்புக்களையும் ஒரு தலைப்பு, சில உபதலைப்புக்களையும் அவை பல பந்திகளையும் பந்திகள் பல வசனங்களையும் கொண்டு அமைந்திருக்கும். இவற்றுள் பந்திகளமைத்தல் பிரதானமானது. தலைப்புக்கள் அல்லது உப 'தலைப்புக்கள் பந்திகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது எழுதப்படாத விதி.

ஒரு பந்தியில் ஒரு விடயம் விளக்கப்பட்டிருக்கும். அதுவே அந்தப் பந்தியின் மையப்பொருளாக இருக்கும். அந்தக் குறிப்பிட்ட பொருளை எடுத்துக் கொடுக்கும் வசனமாக அல்லது அந்தக் குறிப்பிட்ட பொருளுக்குக் கட்டியங்கூறும் நோக்குடையதாகப் பந்தியின் முதல் வசனம் அமைந்திருக்கும்.எனவே பந்தியின் முதல் வசனத்தை மிக அவதானத்துடன் வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அதை வாசித்து விளங்கி முன்னறிவைப் பெற்றுக் கொண்ட பின்னர் பந்தி முழுவதையும் வாசிக்கும் போது அங்கு கூறப்படும் விடயம் இலகுவில் தெளிவு பெற்றுக் கொள்ளும்.

இதே விதியோடு ஓர் அதிகாரத்தின் அல்லது தலைப்பின் முதலாவது பந்தியினை நோக்கிக் கொள்ளலாம். அங்கு என்ன கூறப்படப் போகின்றது என்பதற்கு முதலாவது பந்தி கட்டியங்கூறி நிற்கும்.

வாசிப்பின்போது இவ்வாறான அடிப்படை நுட்பங்களை விளங்கிக் கொள்வது வாசிப்பை இலகுவாக்குவதுடன் ஆர்வத்தையும் தூண்டக்கூடியது.

அந்த ஆர்வம் கற்றலை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல உதவும் செய்முறையாகும்.



கலாநிதி தி.கமலநாதன்,
முன்னாள் பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

# 1973 ஆம் ஆண்டுத் தீர்மானம் இலங்கைக்குச் செல்லுபடியாகாதது ஏன்....?

லிபிய ஜனாதிபதியின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அதை ஒடுக்குவதற்குச் சொந்த மக்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கனரக ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இதன் விளைவு அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் செத்து மடிகின்றார்கள். சர்வதேச நாடுகள் பல உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தி அப்பாவி மக்களைப் பாதுகாக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்தன.

எதற்கும் பணிந்து கொடுக்காமல் கடாபியின் அட்டகாசம் தொடர்ந்தது. அவசர மாகக் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் அதன் 1973 ஆம் ஆண்டு தீர்மானத்தை உடன் நடைமுறைப்படுத்துமாறு அனுமதி வழங்கியது.

அதன் அடிப்படையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இத்தாலி நாட்டுப்படைகள் லிபிய நாட்டு இராணுவத்துக்கு எதிராக வான் தாக்குதல்களை யும் ரொக்கற் தாக்குதல்களையும் ஆரம்பித்தன. அப்பாவி மக்களைக் காப்பதே இதன் நோக்கம் என்று அறிவித்துள்ளன.

அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு லிபிய அதிபருக்கும் அரச படைகளுக்கும் எச்சரிக்கையும் விட்டுள்ளன.

இன்று லிபிய அரசு போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது. மேற்கு நாடுகளின் தாக்குத லுக்கு அடிபணிந்து அப்பாவி மக்களைக் காப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளது. இந்த நிலைமைதானே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இங்கேயும் நிகழ்ந்தது. அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். மனிதகுலத்துக்கு எதிரான இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன.

விமானத் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச நாடுகள் போரை நிறுத்துமாறும் அப்பாவி மக்களைக் காக்குமாறும் கோரிக்கை விட்டன.

புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச அமைப்புக்களின் தலைமைச் செயலகங் களுக்கு முன்னாலும் அந்தந்த நாட்டுத் தலைவர்களின் வாசஸ்தலங்கள், நாடாளுமன்றங்கள், சதுக்கங்கள் முன்னாலும் இந்தப் பேரவலத்தை நிறுத்துமாறும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்குமாறும் கோரி நின்றனர். எதுவுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலினது 1973 ஆம் ஆண்டு சட்டமூலம் அன்று ஏன் மௌனமாய் இருந்தது?

ஒருவேளை எமது நாடு ஐ.நா.சபையின் செயற்பாட்டு எல்லைக்குள் இப்போது இல்லையோ தெரியவில்லை.

லிபியாவில் செய்வதை இங்கேயும் செய்திருந்தால் மனித குலத்துக்கு எதிரான ஒரு படுகொலையைத் தவிர்த்திருக்கலாம். முதியவர்கள், நோயாளிகள், சிறுவர்கள், கர்ப்பிணிகள்,பாலூட்டும் தாய்மார்கள், சிறார்கள் என்று படுகொலை செய்யப்பட்டவர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

இந்தப் பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு எதிராக இனியாவது சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும்.

# மீண்டும் பிறந்து புதுப்படைப்பாவோம்

ஒரு சிறையில் கைதி ஒருவன் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் இருக்கின்றான். சிறை அதிகாரி அவன் மேல் இரங்கிக் கட்டுக்களை அவிழ்த்து விடும்படி சொல்கின்றான். அவனது கட்டுக்கள் அவிழ்த்து விடப்பட்டதினால் அவன் விடுதலை பெற்றான் என்று சொல்ல முடியுமா? அவன் அதே சிறையில்தான் கைதியாக உள்ளான்.

இறைவனின் தூய ஆவி தரும் விடுதலை மேற்சொன்ன விடுதலை போன்றதல்ல. அது சிறையிலிருந்து கிடைக்கும் விடுதலை ஆகும். அந்த உண்மையான விடுதலை கிடைக்கவேண்டும் என்றால் இயேசுவை ஆண்டவரும் தலைவருமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஒருவரிடம் உங்கள் மனநிலையை மாற்றவேண்டும் என்று சொன்னால் ''சரி பார்க்கிறேன்'' என்று அவர் கூறலாம்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கூறினால் அது முடியாத காரியம் என்றுதான் அவர் கூறுவார்.

ஆனால் ஆண்டவரோ ஒருவன் மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது ( யோவா 3:3) என்று கூறுகின்றார். மனிதரால் அது இயலாது. கடவுளால் அது இயலும்.

மீண்டும் பிறப்பவரிடம் காணப்படும் மாற்றம் அவரது தலைவர் மாறுகிறார் என்பதுதான். அலகையைக் கைவிட்டு இயேசு என்னும் தலைவரை ஏற்றுக்கொள்ளும்போது அந்த மாற்றம் பூர்த்தியாகின்றது.

அதனால் தூய ஆவி அந்த மனிதனில் செயலாற்றுகின்றார். எனவே நமது வாழ்வை இயேசுவிடம் ஒப்படைப்போம். அவர் சிலுவையில் மனிதரின் பாவங்களைத் தாமே வலிந்து ஏற்றுக்கொண்டு ......... ''உம் விருப்பப்படியே நிகழட்டும்'' என்று கூறி தம்மையே வானகத் தந்தையின் திருவுளத்திற்குக் கையளித்தார்.

உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறுவது தலைமை மாற்றத்தை ஏற்படுத்தும் வேண்டுதலே. நாமும் இந்த வார்த்தையைத் தியானித்து மீண்டும் பிறந்து புதுப் படைப்பாவோம்.

க.அருள்நேசன், குருநகர்.

## விற்பனைக்கு

PF- XXXX தொடரிலக்கமுடைய Super GL அதி சொகுசு வான் விற்பனைக்கு.

T.P.NO: 0776090926


# வைத்தியசாலையில் பாராட்டு விழா

பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலை அபிவிருத்திப் பாதையில் அதன் உயர்வுக்காய் உழைத்த உறவுகளுக்கான பாராட்டுவிழா வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின்ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபரும் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் உபதலைவருமான செ.சேதுராசா தலைமையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இந்த விழா நடைபெறவுள்ளது.

தேசிய சுகாதார நிர்ணயப் போட்டியில் இந்த வைத்தியசாலை வெற்றியீட்டி பரிசினைப் பெற்றுக் கொண்டது. அதனையொட்டி வைத்தியசாலையின் உயர்வுக்காய் உழைத்தவர்களை கௌரவிக்கும் வகையில் இந்தப் பாராட்டுவிழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-190)


## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில், கண்டி வீதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அருகில் 75/1, 2 பரப்பு 10.7 குழி காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்: 0712087175

## காணி விற்பனைக்குண்டு

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 0777543682

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில

By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 [302], K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

T.P: 077 6751649

## விற்பனைக்கு

6அடி டபிள் டோர் நசனல் பிறிஜ் விற்பனைக்குண்டு. (பாவித்தது).

இல.56, மணிக்கூட்டுவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

T.P: 0777708861


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கதிரேசு தவமணி



பிறப்பு: 23.03.1934
இறப்பு: 22.03.2010

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
பொறுமையுடன் எம்மை அரவணைத்து
பேணிப் பத்திரமாய் ஏற்றமுடன் வாழ
வழிகாட்டியாய் இருந்த எம் தாயே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகள்
காலங்காலமாய் எம்முடன் இருந்திடும்

(40-25-24) (2504)

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்.


## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 13.04.2011 விநியோகிக்கப்படும்.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P.NO: 021 222 2867, 0776090926

# STUDY IN UK, CANADA, USA CYPRUS, POLAND & SINGAPORE



- UK → தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் IELTS இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியை தொடரலாம்.
- USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.
- CANADA → IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் 2வது வருடத்திலிருந்து PR கிடைக்கும்.
- POLAND → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.
- SINGAPORE → பதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். கல்லூரி அனுமதி உத்தரவாதம்.
- CYPRUS → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

100% Legal & Genuine process

**Next Intake: May.'11**

எமது பிரதிநிதி இன்று முதல் செவ்வாய் வரை கிரீன் கிறாஸ் ஹோட்டலில் இருப்பார் நீங்களும் அவரை சந்திக்க வேண்டுமானால் முன்கூட்டியே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுமதிபெற்று சந்திக்கலாம்.

For further Info:
E-mail: read.int@gmail.com
அல்சரா - 0778339943, பஸ்னா - 0778 438403

READ International
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)


## பதினைந்தாவது ஆண்டு நினைவுகளுடன்..!

இவ்வுலகில் 1942 * 06 * 19



இறையுலகில் 1996 * 03 * 25

**அமரர் முருகேசு- பாலசிங்கம்**
(சந்தம்புளியடி- காரைநகர்)

திதி - ஸப்தமி 2011.04.10 ஞாயிறு

ஆண்டு பதினைந்து ஓடி மறைந்தாலும்
நீண்டு வளரும் நினைவுகளை பிரிக்கமுடியாது
வேண்டுதல் ஏற்று விடையவனடியில் வாழ்ந்தாலும்
விம்மி அழுதே நெஞ்சம் கனக்கிறது.

(40-27) (2501)

118/2, சிவராஜா அவெனியூ,
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

நெஞ்சம் மறவா நினைவுகளுடன்
மனைவி - பா.கோபாலி, குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசரத்தினம் அரியமலர்



தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் அரியமலர் 07.04.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-தங்கமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னையா நடராஜாவின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், சிறிகுமார் மற்றும் பாலநிர்மலா (ஜேர்மனி), சஷிலா, டினேஸ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதந்திரகுமார் (ஜேர்மனி), மீரா, சத்தியரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற லிகிர்தாயினி, துசான், கீர்த்தனா, யஸ்வினி, நிறோச் (ஜேர்மனி), சுபத் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பாலை,
அச்சுவேலி.
021 4909503

தகவல்
குடும்பத்தினர்.


# Mitasu

Bicycle and Bicycle Spare Parts



சாதாரண விலையில் உத்தரவாதத்துடன் கிடைக்கும்



ROMA CYCLE
No: 111/A, New Moor Street, Colombo 12.
Tel: 011- 5841124

FLEX Graphic

## பணியாளர் தேவை

எமது கணினி நிறுவனத்தின் யாழ் கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

★ Show Room Manager (ஆண்)
★ Cashier (பெண்)
★ Technicians (ஆண்)

i7 Computers.
164 / 7B, Galle Road
Soysapura. Moratuwa,
Colombo.
0777683676
i7c@sltnet.lk

## Vacancy

விற்பனைப் பிரதிநிதி

i. அடிப்படைச் சம்பளத்துடன் விற்பனைக் கமிசன்,
ii. 2வருட முன் அனுபவம்
iii. G.C.E. (O/L) (தகைமை)

தொடர்பு: 0777708861

## விற்பனை உரிமை நன்மதிப்புடன் விற்பனைக்கு

நடமாடும் ஐஸ்கிறீம் விற்பனை உரிமை, வாகன வசதிகளுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0777708861

## பணியாளர்கள் தேவை

எமது ஹாட்வெயர் விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

ஆர்வமுள்ளவர்கள் 13.04.2011 புதன்கிழமை காலை 9 மணிக்கு தங்களது சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

★ ஹாட்வெயர் விற்பனையில் அனுபவமுள்ளவர்கள், கிளிநொச்சிப் பிரதேசத்தில் வசிப்பவர்கள், ஆண்கள் விரும்பத் தக்கது.

குரு ஹாட்வெயர்
ஏ-09 வீதி,
கிளிநொச்சி.
021 228 5942

# மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

| | | |
|---|---|---|
| * கடவுச்சீட்டு (Passport) | - | இலவசம் |
| * மெடிக்கல் (Medical) | - | இலவசம் |
| * இன்சுரன்ஸ் (Insurance) | - | இலவசம் |
| * விமான டிக்கட் (Air Ticket) | - | இலவசம் |
| * தங்குமிடவசதி (Accomodation) | - | இலவசம் |
| * உணவு (Food) | - | இலவசம் |

* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்

முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

# குடாநாட்டில் 13 வேலைத்திட்டங்களுக்கு 'நிக்கொட்' 54 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## பணிகளை ஆரம்பிக்க அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 54 மில்லியன் ரூபா செலவில் 13 வேலைத் திட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான அனுமதி யாழ். அரச அதிபருக்குக் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் அல்லைப்பிட்டி வெண்புரவி நகர் வீட்டுத்திட்டத்துக்கான மின் விநியோகத்துக்காக 7.04 மில்லியன் ரூபாவும் அச்சுவேலி கால்நடைப் பண்ணை வலுவூட்டலுக்கு 6.213 மில்லியன் ரூபாவும் முருகையடி வீதிப் புனரமைப்புக்கு 10.974 மில்லியன் ரூபாவும் கோப்பாய் வைத்திய சாலை விடுதி அமைப்பு மற்றும் உள்ளக வீதி அகலிப்பு ஆகியவற்றுக்கு 5.034 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகக் கட்டடத் தொகுதி மீளமைத்தலுக்கு 1.086 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், துர்க்காபுரம் கிளை மீளமைப்புக்கு 1.086 மில்லியன் ரூபாவும் கருகம்பனைக் கிளை மீளமைத்தலுக்கு 2.440 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மகா வித்தியாலய ஆசிரியர் தங்குமிடம் புனரமைத்தலுக்கு 4.484 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலகக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்கு 3.50 மில்லியன் ரூபாவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் முன்பள்ளியின் மேலதிக இருப்பிடங்களை அமைப்பதற்கு 1.50 மில்லியன் ரூபாவும் நெடுந்தீவு உதவி அரசஅதிபர் அலுவலகத்தை புதுப்பிப்பதற்கு 5 மில்லியன் ரூபாவும் எழுவைதீவிலுள்ள கிராம அபிவிருத்தி செயலகக் கட்டடத்தை முழுமையாக்க 6.10 மில்லியன் ரூபாவும் சங்கானை பிரதேச செயலகத்துக்கான கொள்ளவத்திறன் விருத்திக்கென 0.35 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் திணைக்களத் தலைவர்களைப் பணித்துள்ளார். (த-14)

## பகுதி நேரக் கற்கை நெறிக்கு மாணவர் இணையலாம்

யாழ்ப்பாணம், ஏப்.10

கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியில் தேசிய சான்றிதழ் இயந்திரவியல் தொழில்நுட்பப் பகுதிநேரக் கற்கை நெறிக்கு மேலும் கணிசமான அளவு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தக் கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் உடன் கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மேலதிகப் பணிப்பாளர் வெ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

இந்தக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையில் மேலும் சில மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (த-14

# யாழ். கூட்டுறவுச் சங்கங்களில் அதிக விலையில் கோதுமை மா

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஒரு கிலோ கோதுமை மா அதன் நிர்ணய விலையை விட அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஒரு கிலோ மா அதன் நிர்ணய விலையை விட ஐந்து ரூபா அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.


சங்கங்களில் ஒரு கிலோ மாவின் நிர்ணய விலை 67 ரூபாவாகும். எனினும் தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு கிலோ மா 72 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

தனியார் கடைகளில் விலை அதிகம் என்பதாலேயே மக்கள் கூட்டுறவுச் சங்கங்களை நாடுகின்றனர். கூட்டுறவுச் சங்கங்களிலும் தனியார் கடைகளின் விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றமையால் யாழ்.குடாநாட்டு மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பொருள் கொள்வனவைக் குறைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மா இவ்வாறு அதிக விலையில் விற்பனை செய்வதற்கான காரணத்தை உரிய தரப்பினர் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-311)

முதிர்ந்த அனுபவம்...



எழுத்துருவில்: மூத்த எழுத்தாளர் தெணியான் எழுதிய 'தவறிப் போனவனின் கதை' நூல் வெளியீட்டு விழா அண்மையில் அல்வாய் கலையகத்தில் நடைபெற்றது. நூலை அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ராலின் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை எழுத்தாளர் க.சின்னராஜா பெற்றுக் கொள்கிறார். படத்தில் எழுத்தாளர் தெணியானும் உள்ளார். (த-319)

# ஏழாலை மகா வித்தியாலய மாணவரின் அ.அட்டை விண்ணப்பங்கள் எங்கே?

## 2 வருடங்களாக அவர்கள் அலைச்சல்

யாழ்ப்பாணம், ஏப்.10

ஏழாலை மகா வித்தியாலயத்தில் இருந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அடையாள அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனப் பெற்றோர்களும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட மாணவர்கள் கடந்த ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவும் ஏனைய போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வசதியாகவும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

குறிப்பிட்ட அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் பாடசாலை நிர்வாகத்தினால் யாழ்.செயலக அடையாள அட்டை அலுவலகத்தில் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தாம் குறிப்பிட்ட மாணவர்களின் தேசிய அடையாள அட்டை தொடர்பாகப் பாடசாலையுடன் கதைத்துவிட்டு யாழ்.செயலக அடையாள அட்டைப் பிரிவில் தேடியபோதிலும் குறிப்பிட்ட அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் அங்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் பெற்றோர் கூறுகின்றனர்.

பாடசாலையில் இருந்து இந்த விண்ணப்பங்கள் அடையாள அட்டைப் பிரிவுக்கு அனுப்பப்படவில்லை எனவும், குறிப்பிட்ட விண்ணப்பங்கள் தவறிவிட்டதாகவும் பாடசாலையுடன் தொடர்புடைய சிலர் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் உரியவர்கள் உண்மையைக் கூறி மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (த-86)

## 'தவறிப் போனவனின் கதை' வெளியீடு

நெல்லியடி, ஏப்.10

எழுத்தாளர் தெணியானின் ''தவறிப் போனவனின் கதை'' என்னும் நூல் வெளியீட்டு விழா அல்வாய் கலையகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் த.கலாமணி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆய்வுரைகளைக் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி ஆசிரியர் எஸ்.தனேஸ்வரி, கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் பா.தனபாலன், யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இராஜேஸ் கண்ணா ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

அருட்திரு இராஜேந்திரம் ஸ்ராலின் அடிகளார் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை முன்னாள் வங்கி முகாமையாளர் க.சின்னராஜா பெற்றுக் கொண்டார். தொடர்ந்து ஏற்புரையை எழுத்தாளர் தெணியான் நிகழ்த்தினார்.

(த-319)

## வீதிகள் புனரமைப்பு

வடமராட்சி, ஏப்.10

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 'என்றிப்' திட்டத்தில் பல வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

செம்பியன்பற்று மாமுனை வீதி, மருதங்கேணி கடற்கரைப் பிள்ளையார் வீதி, மருதங்கேணிப் பாடசாலை வீதி, உடுத்துறை மகாவித்தியாலய வீதி, சுமைதாங்கி வீதி, கொடுக்கிளாய் வீதி, ஆழியவளை பாடசாலை வீதி, வாரிவட்டைக் வீதி ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

(த-319)

# எமது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி மன்னித்துக் கற்றலுக்கு அனுமதியுங்கள்

## 'ராக்கிங்'கில் ஈடுபட்ட மாணவர்களின் பெற்றோர் உருக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.10

'ராக்கிங்'கில் ஈடுபட்ட எமது பிள்ளைகளை மன்னித்து அவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட அனுமதிக்குமாறு 'ராக்கிங்'கில் ஈடுபட்ட தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களின் பெற்றோர் கல்லூரி நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் முதலாம் வருட மாணவர்கள் மீது இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்கள் சிலர் மேற்கொண்ட 'ராக்கிங்' விவகாரம் குறித்த 3ஆம் கட்ட விசாரணைகள் கடந்த 6 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் இடம்பெற்றன.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் எதிர்வரும் 12ஆம் திகதிவரை வழக்கை ஒத்தி வைத்தார்.

இதன் பின்னர் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுப் பிரிவினரைச் சந்தித்த பெற்றோர் தமது பிள்ளைகளை மன்னித்து அவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்குமாறு கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து நாம் வந்திருக்கின்றோம். அடிக்கடி வந்து போவதற்கு எம்மிடம் பொருளாதார வசதிகள் போதிய அளவில் இல்லை. எனவே எமது பிள்ளைகள் தவறு செய்திருந்தால் அவர்களை மன்னித்து அவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கற்றல் செயற்பாடுகளைத் தொடர அனுமதிக்க வேண்டும் எனப் பெற்றோர் கல்லூரி நிர்வாகத்திடம் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி நீதிமன்ற விசாரணைகள் முடியும் வரை பொறுத்திருங்கள் என்று கல்லூரியின் இணைப்பாளர் பா.தனபாலன் பெற்றோரிடம் தெரிவித்தார். (த-9)

## காணி, வீடு விற்பனைக்கு

Jaffna, மானிப்பாய் கட்டுடை சந்திக்கு அருகில் 5 பரப்புக் காணியில் 6 அறைகள் கொண்ட வீடு உடனடி விற்பனைக்கு உண்டு.
T.P: 0774153667

## தவறிவிட்டது

துர்க்காபுரம், தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய சக்தி வேல் யதுகுலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (921663633V) யாழ்.இந்துக் கல்லூரி விளையாட்டு மைதா னத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முக வரியுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.0770487567


## புதிய தபாலதிபராக தர்மராஜா

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். பிரதம தபாலகத்தின் புதிய தபாலதிபராக ஏ.தர்மராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார்.

இதுவரை காலமும் பதில் பிரதம தபாலதிபராக எஸ். லோக நாயகம் பணியாற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-26)

## நைலோன் வலை மீன்பிடியில் மீனவர் ஆர்வம்

யாழ். கரையோரப் பகுதி மீனவர்கள் தற்போது அதிகளவில் நைலோன் வலைத் தொழிலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

'றோலர்' மூலமான மீன்பிடித் தொழில் தடைசெய்யப் பட்டதை அடுத்தே மீனவர்கள் நைலோன் வலை மீன்பிடியில் அதிக அக்கறை காட்டிவருகின்றனர். குருநகர் பகுதி மீனவர்களே இந்த நைலோன் வலைத் தொழிலில் அதிகளவில் ஈடுபடுகின்றனர்.

(த-26)


## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர் சி.அம்பிகபாலகரன் (உரிமையாளர், நியுமல்ரி சென்ரர் - டச்சுவீதி, சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தந்தை

அமரர் வீ.சின்னத்தம்பி

அவர்கள் 01.04.2011 அன்று காலமானார். இவரின் மறைவுக்கு மன்றம் தனது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
போகராணி விமலாம்பிகைபாகன்
அவர்களின் தாய்
**திருமதி பவளம் நாகமணி**
அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பன்னீர் சிந்த | | கண்ணீர் சிந்த |
|---|---|---|
| 08 | | 28 |
| 06 | | 03 |
| 1955 | | 2004 |



**அமரர் சொ.பாலச்சந்திரன்**

(முன்னாள் கிராம சேவையாளர், ஜே/79)
திதி: சப்தமி

முதல் நாளில் பள்ளியில் விட்டு - பிரிந்தது போல
இடப்பெயர்வில் இடம் மாறிப் பின் - பிரிந்தது போல
வெளிநாடு போய் - பிரிந்தது போல
ஏழு ஆண்டு என்ன ஏழு ஜென்மம் போனாலும்
மீண்டும் வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன்...

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குழி. யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்,
**குடும்பத்தினர்.**
0750755245

(2496)(31)

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம் இராமலிங்கம்



சரவணைமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் இராமலிங்கம் 08.04.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - அபிராமி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான அனலைதீவு ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் கால்லஞ்சென்றவர்களான பூமணி, நவரத்தினம், நடராசா, இரத்தினம், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திரராணி(சரவணை), அமிர்தலிங்கம் (வவுனியா), தனிநாயகம் (மானிப்பாய்), சாரதாம்பாள் (பின்லாந்து), செல்வநாயகம் (கனடா). ஆகியோரின் அன்புத் தாயும். காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் வையேந்திமாலா (வவுனியா), வில்வராணி (மானிப்பாய்), காலஞ்சென்ற அங்கமுத்து (பின்லாந்து) மற்றும் பகீரதி (மானிப்பாய்) ஆகியோரின் மாமியும் மகேந்திரன் (கவிதா), மகேந்திரராணி (சத்தியசீலன்), மனோகரன் (மாலினி), மனோகரி (கிருபாகரன்), காண்டீபன், தர்சிகா (குலசேகரன்) , சஞ்ஜிவன், சோபிதா, வர்னஜீவன், குமுதினி (கண்டீபன்), காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் கயனி, கயேந்தினி, கயந்தன். இந்துமதி (பாலவிஜித்), மணிசேகரன், பானுமதி (தவலோசன்), ஸ்ரீமதி, யுதாகரன், திலக்சி, திலக்சன், நிதர்சன், இலக்சன், யுதர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அனுசா, அனுசன், கோபிசா, கிருசாந், திவ்வியா, தீபிகா, பகீரா, அபிராம், டனுஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலி தெற்கு மானிப்பாய் (செல்வநாயகம் இல்லத்தில்) நாளை (11.04.2011) திங்கட்கிழமை நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செக்காலை லேன்,
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
**செல்வநாயகம் குடும்பத்தினர்**

## வீடு விற்பனை

சின்னமலை ஏற்றம், தொண்டைமானாற்றில் சுடலோரம் (சுனாமிகுரும் பாதுகாப்பானது) 3 அறை வீட்டுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
0777309261, 0773793366

## வீடு வாடகைக்கு உண்டு

கோண்டாவில் சந்தியில் இருந்து இரு பாலை றோட்டில் 3 நிமிட நடை தூரம். 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770590173, 0213212880

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,வேம்படி றோட்டில், பிரபல யமான பாடசாலைகள் மற்றும் பிரதான வர்த்தக, அரச அலுவலகங்களுக்கு அண்மையில், கடை/ வீடு கட்ட அமைவான ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0750392152.

## தொடர் கடைகள் வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதி, ஆலடி, உடுவிலில் (அரசினர் வைத்தியசாலைக்கு அருகில்) அமைந்துள்ள தொடர் கடைகள் நான்கு சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.
தொடர்பு: 0778548312, 0750485402.

## வீடு வாடகைக்குண்டு

இல.189, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் (யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அருகாமையில்) 3500 சதுர அடி கொண்ட வீடு சகல வசதிகளுடனும், வாகனத்தரிப்பிடத்துடனும் காரியாலயப் பாவனைக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0773405790

## மாபெரும் மலிவு விற்பனை
## போபிசன் எலக்ரோனிக்ஸ்

இல.80, K.K.S. வீதி, சுன்னாகம்.
0779472248, 021 7912752.

Sony TV, DVD, CD Hifi Set Amplifires Box Set woofer, Home Theatre & எலக்ரிக்கல் பொருளகள் அனைத்தையும் மிகக் கூடிய விலைக்கழிவில பெறுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
சுன்னாகம்
கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக.

## WANTED

C/Ctt/ Java Programmers in Araly North, Araly & Vaddukoddai please Find the requirements at http// www.keethacon sulting. com/ jobs send resume/ biodata to jobs@keetha consulting.com with A-levei results, diplomas, certificates and or degrees.

## அறை வாடகைக்கு உண்டு

Chundukuli, கச்சேரிக்கு அருகில் Varanda, Toilet உடன் இணைந்த அறை வாடகைக்குண்டு. 2 பெண்கள்/ தாய், மகள் ஆகியோர் விரும்பத்தக்கது.
T.P: 0750828308

## விற்பனைக்கு

8 அடி உயரம் 4 அடி அகலம் கொண்ட இரண்டு கண்ணாடி அலுமாரி.
முகவரி - சிவன் கோவிலடி, பருத்தித்துறை.
தொடர்பு: 0775122951

## வேலையாள் தேவை

பிரபல கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்தில் வேலை செய்வதற்கு ஓரளவு கல்வித் தராதரத்துடன் [O/L] அனுபவமுள்ள / ஆர்வமுள்ள வேலையாள் தேவை. [சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்]
தொடர்பு: 0718475326

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1981 உயரம் 173 cm, சுவாதி 3ஆம் பாதம், 7இல் செவ்வாய் 67 பாவம் அழகிய பெண MBBS Doctor க்கு உள்நாடு/ வெளிநாடு Doctor மணமகன் தேவை.
தொடர்பு: 0777249492,
6 P.M பின்

## வாகனம் விற்பனைக்கு

இங்கிலாந்திலிருந்து (UK) இறக்குமதி செய்யப்பட்ட வொல்வோ, Model S40 (volvo), போயோ Model 407 Auto (Peugeot) பதிவு செய்யப்படாத கார்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
0777495688

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் தெற்கில், தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம், மருத்துவபீடம் ஆகியவற்றுக்கு அண்மையில் 2 ¼ பரப்புடன் நவீன வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0774581237

## புதுவருடத்தை முன்னிட்டு
## மகளிர்க்கான சலுகை

*மிகக் குறைந்த கட்டணத்தில்*

மகளிர்க்கான அழகுக் குறிப்புகள் தொடர்பான செய்முறையுடன் கூடிய கருத்தரங்கு

காலம்:- *11.04.2011 பி.பகல் 3.00 மணிக்கு*
இடம் :- *அருணாலயா கலைக்கூடம் [மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்] யாழ்.வீதி, மானிப்பாய்.*
பதிவுக் கட்டணம்:- *100/=*
*பதிவுகளை 11.04.2011 பிற்பகல் 1.00 மணிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும் . நேரில் வர முடியாதவர்கள்*

தொலைபேசி மூலம் பதிவுகள்
0779209156


## திருக்குளிர்த்தி

சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் உள்ள காளி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் திருக்குளிர்த் திருவிழா நாளைதிங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் இடம்பெறவுள்ளது. நண்பகல் 12 மணியளவில் அம்பிகைவீதியுலா வரும் காட்சி இடம்பெற்று மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது.

(ம-9)

## விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வீட்டு மின் இணைப்பு பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. தரத்தில் சித்தியுடன் 16-35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதியுடையவர் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், நைற்றா, இல . 7 கோயில் வீதி, யாழ்ப்பாணம்என்னும் முகவரிக்கு 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையா ளர் கி. ககிருஷ்ண பாலன் கேட்டுள்ளார்.

(ம)


SHAMROCK
A/L 2013, O/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் GEN. ENG. & GIT
* O/L REPEAT & ENG
*Gr 1 முதல் O/L வரை
* ENG. MED. 6 To11
* ENG. LIT 10,11 & ICT

## வாழ்த்துகின்றோம்




எங்கள் வடமராட்சி மண்ணில்
வைத்திய சேவையில் தரமுயர்ந்து
தேசிய சுகாதார அதியுயர் சிறப்பு விருதுபெற்று
வரலாற்றில் தடம் பதித்த எமது
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையையும்
இப்பேற்றினைப் பெற்றிட
தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றிய
வைத்திய அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள் மற்றும் ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திக் குழுவினர் ஆகியோருக்கு
எமது மனமார்ந்த பாராட்டுகளும், வாழ்த்துக்களும்.

ராஜன் சைக்கிள் வேர்க்ஸ், ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,
கனன் போட்டோ கொப்பி
பருத்தித்துறை.

# முசலிப் பிரதேசத்தில் 147 மில்லியன் ரூபாவில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

மன்னார், ஏப். 10

மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் மன்னார், முசலிப் பிரதேச செயலகப் பிரிவில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக 147 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கான வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுக்கவுள்ளதாகவும் முசலிப் பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹூனைஸ் பாரூக் தெரிவித்தார்.

முசலிப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் முசலிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றபோதே, அவர் இதனைக் கூறினார். கடந்த சில மாதங்களாக இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் அமைச்சர் ரிசாட் பதியுதீனும் தானும் எடுத்த முயற்சியால் மீண்டும் அவை நடைமுறைக்கு வந்துள்ளன. விரைவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்குமாறு கிராம அபிவிருத்தி அமைப்பினருக்கு ஹூனைஸ் பாரூக் ஆலோசனை வழங்கினார்.

உட்கட்டமைப்பு வசதிகள், பொதுக்கட்டடங்கள், வாழ்வாதார ஊக்குவிப்பு முயற்சிகளுக்கான சுழற்சி முறையான கடன் திட்டம் என்பன மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளதெனவும் அவர் கூறினார். அத்துடன் வயற்காணி துப்புரவு செய்தல், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, சுகாதாரம், கல்வி, போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை சிலாவத்துறையில் 1.7 மில்லியன் ரூபாய் செலவில் புதிய தபாலகம் அமைப்பதற்கான அனுமதி பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின்போது வழங்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிபாவா பாரூக், முசலிப் பிரதேச சபைத் தலைவர் தேசமான்ய யஹ்யான், பிரதேச செயலாளர் உட்பட திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (க)

## குடிசன மதிப்பீடு ஆரம்பம்

வவுனியா, ஏப். 10

வவுனியா மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் குடிசன மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக அரச அதிபர் என்.திருஞானசம்பந்தர் தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களும் மதிப்பீட்டு அலுவலர்களும் வீடுவீடாகச் சென்று விவரங்களைப் பெற்று சிவப்பு நிறத்திலான ஸ்ரிக்கர்களை ஒட்டி வருகின்றனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குடிசன வீட்டு வசதிகள், தொகை புள்ளி விவரங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

'நைற்றா' நிறுவனம்

## ஐந்து பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

முல்லைத்தீவு, ஏப்.10

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் (நைற்றா) ஐந்து பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

.தகவல் தொழில் நுட்பத்தில் தேசிய தரச் சான்றிதழ் கற்கை நெறி, தாதிய உதிவியாளர் பயிற்சி நெறி ஆகியவற்றுக்கு 17 முதல் 25 வயது வரையானோர் விண்ணப்பிக்கலாம்.

அதேபோன்று 17 முதல் 35 வயது வரையானோர் விவசாய இயந்திர திருத்துநர், பிரத்தியேக செயலாளர், வீட்டு மின் இணைப்புப் பயிற்சியாளர் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான கல்வித்தகைமை க.பொ.த. சாதாரண தரம் ஆகும்.

தகுதியுடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை ''மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, பிரதேச செயலகம் அருகாமை, துணுக்காய்'' என்னும் முகவரிக்கு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஞா. தே. இரத்தினகுமார் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

## அருள் வேண்டி...



*அருள் கிடைக்கட்டும்: கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் ஒட்டுசுட்டான் 64 ஆவது இராணுவப் படைப்பிரிவினரால் நடத்தப்பட்ட பெருவிழாவின்போது இராணுவ உயரதிகாரிகள் அர்ச்சனைத் தட்டுக்களுடன் வலம்வந்து பூசையில் கலந்து கொள்கின்றனர். (500)*

# யானைகளில் அட்டகாசம் அதிகரிப்பு துணுக்காய் மக்கள் அவல நிலையில்

கிளிநொச்சி, ஏப்.10

துணுக்காய்ப் பிரதேசம் அம்பலப் பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம் ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் யானைகளின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் முன்னர் தமது குடியிருப்புக்களில் மக்களால் நட்டு வைக்கப்பட்ட பயன்தரு விருட்சங்கள் யாவும் போரின்போது அழிக்கப்பட்டு விட்டன.

இதனால் மீள்குடியமர்ந்த மக்கள் தமது வளவுகளில் தென்னை உட்படப் பயன்தரு மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர். ஆனால் இரவு வேளைகளில் நடமாடித்திரியும் யானைகள் இவற்றை அழித்து வருகின்றன. குறிப்பாகத் தென்னை மரங்கள் இவற்றின் முக்கிய இலக்காக இருப்பதுடன் அவற்றை முற்றாக அழித்து நாசம் விளைவிக்கின்றன.

அத்துடன் குடிமனைகளுக்குள்ளும் இவை உட்பிரவேசித்துத் தொல்லைகளைக் கொடுத்து வருகின்றன.

இந்த யானைகளின் தொல்லைகள் தொடர்பாக இந்தப் பிரதேச மக்கள் துணுக்காய்ப் பிரதேச செயலர் மற்றும் படையதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

யானைகளின் அட்டகாசத்தை ஒடுக்குவதற்காக எதிர்காலத்தில் மின்சார வேலிகள் அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக இந்தப் பிரதேசப் படையதிகாரியொருவர் மக்களிடம் தெரிவித்ததாகவும் தெரிய வருகின்றது. (க-410)

# துணுக்காயில் 140 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

கிளிநொச்சி, ஏப்.10

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின்கீழ் 140 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பெரும் போகத்தில் இந்தக் குளத்தின்கீழ் 623 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது வழக்கமாகும்.

தற்போது குளத்திலுள்ள நீரின் அளவைப் பொறுத்து 140 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இதேவேளை கோட்டை கட்டிய குளத்தின்கீழ் இம்முறை 70 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாரியின்போது அதிகளவு மழை பெய்துள்ளதால் குளங்களில் நீரின் இருப்பு திருப்தியாகவுள்ளது.

இந்த நிலையில் நீர்த்தட்டுப்பாடின்றி சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-410)

# கிளைக் காரியாலயம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா, ஏப்.10

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளைத் தலைமைக் காரியாலயத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை பட்டாணிச்சி புளியங்குளத்தில் நடைபெற்றது.

பனை தென்னை வள அபிவிருத்தி சங்க வவுனியா கிளைத் தலைவர் அன்ரனிதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கட்டடத்தினை திறந்து வைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில் பனைஅபிவிருத்திச்சபைத் தலைவர் ப.சீவரத்தினம், மாவட்ட மேலதிக அரச அதிபர் என். திருஞானசம்பந்தர், பிரதேச செயலாளர் ஏ.சிவபாதசுந்தரன், வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் கிறிஸ்ரி யோசப், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க)

## மருத்துவ வசதி பெறுவதில் சிரமம்

முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அம்பலப் பெருமாள்குளக் கிராம மக்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இடம்பெயர்ந்த சுமார் நூறு குடும்பங்கள் இங்கு மீளவும் குடியமர்ந்த நிலையில் மருத்துவ வசதிகளை தமக்கு ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்வதற்காகத் தாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ)

# வாள்வெட்டுக்கு இலக்காகிய வர்த்தகர் வவுனியா வைத்தியசாலையில்

வவுனியா, ஏப்.10

வவுனியா நகர வர்த்தகரும் மரண விசாரணை அதிகாரியுமான ஏ.கே.இராசலிங்கம் கொள்ளையரின் வாள்வெட்டுக்கு இலக்காகி கையில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் கொள்ளையிடச் சென்ற கொள்ளையர்களைத் தடுக்க முயன்றபோதே அவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதன்போது, அவரது மனைவி கழுத்திலிருந்த சுமார் 10 பவுண் தாலிக்கொடி உள்ளிட்ட பல நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

படுகாயமடைந்த இவருக்கு வவுனியா வைத்தியசாலையில் நேற்றிரவு 10 மணியளவில் அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# கேள்வி கோரல்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வீதிகள்,
புனர் நிர்மாணம் செய்வதற்கான
கேள்வி கோரல் அறிவித்தல்

பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம்
உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்.

1) பின்வரும் புனர் நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அவிபிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்த காரர் தரம் |
|---|---|---|
| 01. புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி, 0.0 -2.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 37,500.00 | C 8 |
| 02. தொண்டமானாறு - வல்லை - துன்னாலை வீதி, 0.0 - 2.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 30,000.00 | C 8 |
| 03. தொண்டமானாறு - வல்லை - துன்னாலை வீதி, 2.0 - 3.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 15,000.00 | C 9 |
| 04. புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி, 0.0 - 2.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 25,000.00 | C 8 |
| 05. புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி 2.0 - 4.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 25,000.00 | C 8 |
| 06. புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி 4.0 - 5.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 13,000.00 | C 9 |
| 07. புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி 5.0 - 7.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 25,000.00 | C 8 |
| 08. புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி 7.0 - 8.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 13,000.00 | C 9 |
| 09. சாவகச்சேரி புகையிரத நிலைய அணுகு வீதி கல்லிட்டு தாரிடல் (இயந்திரங்கள் மூலம்) | 30,000.00 | C 9 |
| 10. வழுக்கையாறு -புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி, 19.0-20.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 30,000.00 | C 8 |
| 11. வழுக்கையாறு -புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி, 20.0-21.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 30,000.00 | C 8 |
| 12. வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி, 17.8.19.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 40,000.00 | C 8 |
| 13. வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி, 1.0 -2.0 கி.மீ வீதி திருத்தலும் மீள் தாரிடலும் (இயந்திரங்கள் மூலம்) | 49,000.00 | C 8 |
| 14. சாவகச்சேரி - தனங்களப்பு வீதி- மதகு 1/3 மதகு மீள் நிர்மாணம் | 18,000.00 | C 8 |
| 15. கல்லிட்டு தாரிடல்- சாவகச்சேரி- புலோலி வீதி, 8.0- 10.0 கி.மீ (இயந்திரங்கள் மூலம்) | 25,000.00 | C 8 |
| 16. புத்தூர் - கந்தரோடை வீதி, மதகு கட்டுதல், இல: 12/5 | 5,000.00 | C 8 |
| 17. கொக்குவில் - வட்டுக்கோட்டை வீதி மதகு கட்டுதல். இல. 7/1 | 5,000.00 | C 9 |
| 18. சண்டிலிப்பாய்- சேந்தாங்குளம் வீதி- வீதி திருத்தல், மீள் தாரிடல்- 4.0 - 4.5 கி.மீ (இயந்திரங்கள் மூலம்) | 18,000.00 | C 9 |
| 19. சண்டிலிப்பாய்- சேந்தாங்குளம் வீதி-வீதி திருத்தல், மீள் தாரிடல் 4.5 - 5.0 கி.மீ (இயந்திரங்கள் மூலம்) | 22,000.00 | C 8 |
| 20. சாவகச்சேரி- புலோலி வீதி மதகு- 17/1 - மீள் நிர்மாணம் | 18,000.00 | C 8 |

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 27.04.2011 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் 27.04.2011 அன்று முற்பகல் 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்கவேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 18.04.2011 தொடக்கம் 26.04.2011 பிற்பகல் 2 மணி வரை மிள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/ - + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெறவேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD)நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற் குறிப்பிட்ட தரத்துக்கமைய பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி, அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.
04. முன் கேள்வி கோரல் கூட்டம் 25.04.2011அன்று முற்பகல் 10மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
05. கேள்விப் பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.
06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றுக்குரிய பாதுகாப்புப்பத்திரம் ஒவ்வொரு கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்துக்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021 222 2968. |
| மாகணப்பணிப்பாளர் (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். | பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். |

(சி- 577478) (45)

## ஈச்சம்பழ சீசன் ஆரம்பம்

யாழ்ப்பாண்ம், ஏப்.10

குடத்தனைப் பகுதியில் தற்பொழுது ஈச்சம்பழச் சீஸன் ஆரம்பமாகியுள்ளது. ஈச்சமரங்களில் குலை குலையாக சிவப்பு நிறங்களில் காய்களும் கறுப்பு நிறங்களில் பழங்களும் காணப்படுகின்றன. ஈச்சம் பழ சீசன் ஆரம்பமாகியதை அடுத்து பெரும் எண்ணிக்கையானோர் அவற்றை நாடி வருகின்றனர்.

(ம-78)

## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.10

கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் தொழிலுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த இ.செல்வராஜா (வயது 26) எனும் இளைஞர் வீதியில் மறைமுகமாக இருந்த கட்டுத்துவக்கு வெடித்துப் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வரணி இடைக் குறிச்சிப் பகுதியில் இடம் பெற்றது. (207)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.10

பஸ்சுடன் மோட்டார் சைக்கிளில் மோதியதில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் மட்டுவில் தெற்கு பிரதேசத்தில் இடம் பெற்றது. குகதாஸ் வினோஜன் (வயது 19) எனும் இளைஞனே விபத்துக்குள்ளானவர் ஆவார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரும் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மல்லாவிப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. அதேஇடத்தைச் சேர்ந்த ஆர்.ராகினி (வயது 19) என்பவரே விபத்துக்குள்ளானவர் ஆவார்.

(ம-207)

## மண்டைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய

பரிபாலன சபை

மேற்படி ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 11.04.2011 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் திரு.இ.ரமேஸ் J/07 கிராம அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள் கின்றோம்.

செ.அ.ஸ்ரீபத்மராசா,
செயலாளர்.
08.04.2011.

(42-25-21)

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்

பேராசிரியை கலாநிதி
செல்வி வசந்தி அரசரத்தினம்



உலகத்தினர் போற்றும் வளமிகு கல்வியின்
உயர் யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு நின்
உன்னத பணியின் பயனாக உயர் பதவிகளில் ஒன்றான
மருத்துவ பீடாதிபதி பதவி உனைத் தேடி வந்து
உயர்வு கண்டாய் உள்ளரும் பணியினை மதித்த
உத்தம பல்கலைக்கழக ஆணைக் குழுஉயர் பதவியான
துணை வேந்தராக உயர்த்தி வைத்துப் பெருமை சேர்த்தது
உளமறிந்து வழங்கிய உயர் பதவிக்கு
உன்னுயர்வான சேவையினால் ஒளிபெற
உரிமையுடனும் உவகையுடனும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
K. சுதன் குடும்பம் "அன்னை ரெக்ஸ்" சாவகச்சேரி.
K. நாகராசா குடும்பம் C.T.B கச்சாய் றோட், சாவகச்சேரி.

(39)

LAUGFS LANKA GAS PLC
லாஃப்ஸ் லங்கா காஸ்

நிறுவனம் வழங்கும் புத்தாண்டு சலுகை



இன்றுமுதல் புதிதாகக் கொள்வனவு செய்யும் 5kg அல்லது 12.5kg காஸ் சிலிண்டர் வாங்கினால்

காஸ்குக்கர் இலவசம்

இச்சலுகை
10.04.2011 முதல்
07.05.2011 வரை

குறிப்பு:- எந்தவொரு லாப் காஸ் முகவரிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதம விநியோகத்தர்:
பிள்ளையார் டிஸ்றிபியூட்டர்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0772640715.

Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444,021 222 8250, 0777222422

புத்தாண்டு அதிரடி சிறப்புச்சலுகை

Diploma in Microsoft Office 1000/= 3 Months
Diploma in Desktop Publishing 1000/= 4 Months
Diploma in Web Page Designing 1000/= 3 Months
Diploma in Graphic Designing 1000/= 4 Months
Diploma in Hardware Engineering 1000/= 3 Months
Diploma in Auto CAD 1000/= 3 Months
Diploma in Computer Science 1000/= 4 Months
Honors Diploma in Computer Science 1000/= 3 Months

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/-
Diploma in Multimedia 4Months 1000/-

Batch i -09-04-2011 - 11AM or 2PM
Batch ii -10-04-2011 - 11AM or 2PM
Batch iii -13-04-2011 - 9AM or 3PM
Batch iv -15-04-2011 - 9AM or 3PM

Diploma in Computerized Accounting
Tally Accounting Package
ஆரம்பம் : 09.04.2011 10.04.2011 10Am

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Auto CAD — Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Hardware Engineering — Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்..

புதுவருடத்தை முன்னிட்டு.மாணவர்களினதும்,
கணனி ஆர்வலர்களினதும் நலன்கருதி சிறப்புச்சலுகையாக
பதிவுக்கட்டணம் இன்றி கற்கைநெறியை மேற்கொள்ளலாம்.....

இச்சலுகை 30-04.2011 மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

# உவமை அணிக்குப் புதுமை சேர்த்த பாடல்!

ஈழத்தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள் கற்பனை உலகில் தனித்துவம் பெற்ற பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களின் பாடல் பற்றிக் குறிப்பிடும் போது,

''இயற்கைக் கவியாய்ப் பிறப்பில் அமைந்தவரும் கற்பனை உலகில் சஞ்சாரஞ் செய்பவருமான மகாலிங்கசிவத்தின் கவிதை ஒன்று சகுந்தலை சரிதையை அழகு செய்கின்றது. கண்ணுவர் சகுந்த தலையைக் கணவன் பால் வழிப்படுத்தும்போது வாழ்த்துகின்ற சந்தர்ப்பம் சாகுந்தலத்தில் இருதயம் போன்றது. கவிகளின் இதயங்களை அளந்துகாட்டுதற்குரிய இடம் அந்த இடம். அப்படிப்பட்ட இடத்தில் மகாலிங்கசிவத்தின் கவி சகுந்தலைக்கு அளபெடை போல் நீண்டு செல்லும் பாதையை ''அறுதொடர்கள் உகரம் போல் உறுக தூரம்'' என்று குறுகச் செய்ய முயல்கிறது. அறுதொடர் கண் உகரம் குற்றியலுகரம். இந்தக் குற்றியலுகரக் கற்பனை சொந்தக் கற்பனை. இது காளிதாச மகாகவியின் கற்பனைக்கு மகுடம் சூட்டுவதுபோல் வருகிறது. இந்த அருமையான கற்பனைப் பாடல் பல்வேறு பாட பேதங்களுடன் மகாலிங்கசிவத்தின் மாணவ பரம்பரையில் வழங்கி வருகிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கியக் காட்சி – 80**

*''மங்கையிவள் செலும் வழியில்*
*நறுந்தருக்கள் நிழல்செய்து மலிக மற்றும்*
*பொங்கு மணல் தாமரையின்*
*பொலந்தாது போற் பொலிக புனித வாவி*
*எங்கு மலர்ந்தி லங்கிடுக மந்தமா*
*ருதம் வீச இனிய தோகை*
*யுங் குயிலும்து ணையாக அறுதொடர்கள்*
*உகரம்போல் உறுக தூரம்''*

இந்தப் பாடலில் சகுந்தலையை அவள் கணவன் துஷ்யந்தனிடம் அனுப்பும் கண்ணுவ முனிவரின் கருணை உள்ளம் புலப்படுகிறது.

கணவனாகிய துஷ்யந்தனைத் தேடிச் செல்லும் மங்கையாகிய சகுந்தலை பூங்கொடி போன்றவள். சிறிது வெயிற் பட்டாற் கூட வாடி விடுவாள். அதனால் வழி நெடுக மரநிழல் அமைய வேண்டும் என்பதை ''மங்கையிவள் செலும் வழியில் நறுந்தருக்கள் நிழல் செய்து மலிக'' என்றார்.

சகுந்தலையின் பாதங்கள் மலரினும் மெல்லியவை. அந்த மென்பாதங்கள் வெப்பத்தால் சுடும் மணலின் உஷ்ணத்தைத் தாங்க மாட்டா என்பதை உணர்ந்து மணல் வெப்பம் குறைந்து தாமரை மலரின் குளிர்ச்சி பொருந்திய தாதுபோல் அமையவேண்டும் என்று அருளினார்.

கண்ணுவர் ஆசிரமத்திலேயே வளர்ந்த சகுந்தலை நெடுந்தூரம் சென்று அறியாள். அதனால் நீர்த்தாகம் என்பது எப்படி இருக்கும் என அறியாள். எனவே, இப்போது அவள் செல்லும் வழி நெடுந்தூரம் ஆதலால், அவள் தாகம் ஏற்பட்டதும் அருந்துவதற்கு இனிய தூய வாவிகள் விளங்கி நீர் வழங்கவேண்டும் என்னும் பொருளில் ''புனித வாவி எங்கும் மலர்ந்திலங்கிடுக'' என்றார்.

முனிவர் ஆச்சிரமத்தில் சகுந்தலை இருக்கும்போது சோர்வடைந்தாலோ காற்று இல்லாது புழுக்கம் ஏற்பட்டாலோ தோழியர் விசிறி எடுத்து வீசிச் சகுந்தலையின் சோர்வையும் புழுக்கத்தையும் நீக்குவர். அவள் செல்லும் வழியில் அவளுக்குப் புழுக்கம் ஏற்பட்டால் தோழியரால் நீக்க முடியுமா? தென்றல் காற்றினால் தான் புழுக்கத்தை மாற்றமுடியும். அதனால் ''மந்த மாருதம் வீச'' என்று அருளினார்.

வனவிலங்குகள் எதுவும் சகுந்தலை முன் எதிர்ப்படக் கூடாது என விரும்பிய முனிவர், அவளுக்கு மகிழ்ச்சியூட்டும் மயிலும் குயிலும் எதிர்ப்பட வேண்டும் என்னும் பொருளில் ''இனிய தோகையும் குயிலும் துணையாக'' என்றார்.

சகுந்தலை முன்பொருபோதும் நீண்டதூரம் பயணம் செய்ததில்லை. அதனால் அவள் பயணம் செய்யும் வழியும் தூரத்தில் குறைதல் வேண்டும் எனக் கண்ணுவ முனிவர் விரும்பினார்.

உயிர் எழுத்தாகிய உகரத்துக்கு மாத்திரை ஒன்று, குற்றியலுகரத்துக்கு மாத்திரை அரை. குற்றியலுகரம்: நெடுந்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத் தொடர்க் குற்றியலுகரம் என ஆறுவகைப்படும்.

உகரம் ஒரு மாத்திரை குறைந்து குற்றியலுகரத்தில் அரை மாத்திரையாக வருவது போலச் சகுந்தலை செல்ல வேண்டிய நீண்ட தூரமும் அவள் நடப்பதற்கு வசதியாக அரைவாசியாகக் குறைய வேண்டும் என்று முனிவர் அருளுகின்றார்.

''அறுதொடர்க் கண் உகரம் போல் உறுக தூரம்'' என்றார்.

குற்றியலுகரத்தை உவமை அணியாக்கி, உவமை அணிக்குப் புதுமை சேர்த்த பண்டிதர் மகாலிங்கசிவத்தின் கவித்துவம் இனிமை வாய்ந்தது; புதுமையானது.

**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

---

# பள்ளிக்கு போகப் போறேன்….




அன்று திங்கட்கிழமை வழமைபோல பள்ளிக்கூடம் போவதற்காக நரேன் புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்தான். நேற்றுப் பெய்த மழையால் ஒழுக்கு வீட்டில் அவனது புத்தகங்களைப் பாதுகாக்க எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அவனால் முடியவில்லை. ஒழுகாத இடத்தில் வைத்தும் சில ஒழுக்குகள் அவனது புத்தகங்களைப் பதம் பார்த்துவிட்டிருந்தன. ''டேய் நரேன்! இன்னுமா வெளிக்கிடுகிறாய்?'' சமையல் கட்டில் இருந்து இரைந்தாள் அவனது தாய் கோமளா.

தாயின் கத்தலைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் நனைந்த புத்தகங்களை நீவி எடுத்துப் புத்தகப் பையினுள் வைத்துக் கொண்டிருந்தான் நரேன்.

நனைந்த விறகை வைத்து ரொட்டி சுடுவதே அவளுக்குப் பெரிய காரியமாக இருந்தது. புகை நிறைந்து போன சமையல் கட்டில் இருந்து கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

''நரேன் என்ன செய்யிறாய்? வந்து சாப்பிடன். நேரமாகுது என்றல்லவா சொன்னாய்'' ''வாறேன், பொறம்மா புத்தகமெல்லாம் நனைஞ்சு போச்சு. அதை எடுத்து வைக்க வேண்டாமோ?'' ''ஏன் நீ ஒழுகாத இடத்தில் வைத்திருக்க வேண்டியதுதானே?'' ''ஒழுகாத இடத்தில் தானம்மா வைச்சேன். ஆனால் மழை நேற்று இரவு கடுமையாகப் பெய்தது அல்லவா? அதுதான் சாடையா ஒழுகினதுபோல''

''சரி.. சரி.. நீ வந்து சாப்பிட்டு விட்டுப் போ, நேரமாகுது'' தாய் கொடுத்த சாப்பாட்டை மளமளவெனச் சாப்பிடத் தொடங்கினான் நரேன்.

''டேய் நரேன்! இன்றைக்கு நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம். நேற்று பாதியில் முடிக்காமல் விட்டு விட்டு வந்த பூச்சு வேலை இருக்கிறது. வா போய்விட்டு வரலாம்'' அப்பாவின் குரல் கேட்டு அடியுண்டவன் போல் நிமிர்ந்தான் நரேன். நேற்றும் என்னைத்தானே கூட்டிக்கொண்டு போனார். இன்றைக்கும் ஏன் கூப்பிடுகின்றார்.

நாளைக்கு வேலுவைக் கூட்டிக்கொண்டு போறேன். இன்றைக்கு மட்டும் வா என்று சொன்னவர், இன்றைக்கும் என்னைக் கூப்பிடுகிறார் என்றால் ஒருவேளை வேலு அண்ணா வரவில்லையோ? என யோசித்தான் நரேன்.

இது அடிக்கடி நடப்பதுதான். ஆனால், இன்று 'எக்ஸாம்' இருக்கிற நேரத்தில அப்பா வேலைக்குக் கூப்பிடுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. தனேந்திரன் நிரந்தமான வேலை என ஒன்றும் செய்ததில்லை. என்ன வேலை கிடைத்தாலும் செய்வான். அப்படித்தான் எங்கோ ஒருவரின் அறிமுகத்தால் கொஞ்சப் பூச்சு வேலை கிடைத்துவிட அதற்கு நரேனையும் கூட்டிச் சென்றான்.

அப்பா கூட வேலைக்குப் போவது நரேனுக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை. இப்படி இடையிடையே நரேனை வேலைக்குக் கூட்டிச் செல்வதால் தன்னுடைய படிப்பு பாதிக்கப்படுவதை அப்பா உணராதமையை எண்ணி எவ்வளவோ தடவை அழுதிருக்கிறான் நரேன். முடியாது என்றால் அப்பாவின் கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும். என் மீது உள்ள கோபத்தில் அம்மாவைப் போட்டு அடிப்பார். அதனால் அவன் வாய் இல்லாப் பூச்சியாகி விடுவதுண்டு.

இன்றும் அப்படித்தான். தந்தை வேலைக்குக் கூப்பிட்டதும் அவனால் மறுபேச்சுப் பேசமுடியவில்லை. தாயின் முகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் எந்த சலனமும் இல்லை. கைகளைப் பிசைந்தவாறே நின்றான் நரேன்.

''அம்மா, நான் அப்பாகூட வேலைக்குப் போகவில்லை. நீயாவது சொல்லம்மா. நான் பள்ளிக்கூடம் ஒழுங்காகப் போனால்தானே அம்மா 'எக்ஸாம்' எழுதலாம். அன்றைக்கும் 'சேர்' வரவு குறைவாக இருக்குது என்று சொன்னார் அம்மா. என்னால் முடியாது 'எக்ஸாம்' நெருங்கிற நேரத்தில் நான் போகமாட்டேன்'' என்றான் அழாக்குறையாக.

''என்னங்க, அவன்தான் சொல்றான், பள்ளிக்கூடம் போக வேண்டும் என்று. பேசாமல் நீங்கள் போக வேண்டியதுதானே'' என்றாள் கோமளா மகனுக்குப் பரிந்து கொண்டு.

''இஞ்ச நீ பேசாம இரு. உனக்கென்ன தெரியும். வேலையில அவன் கூடமாட வந்து நின்றால் நல்லதுதானே. அந்த வேலு வந்தா அவனுக்குக் கூலி குடுத்தாகனும். இவனைக் கூட்டிட்டுப்போனால் அது மிச்சமல்லவா?'' என்றான் சினத்துடன்.

''இல்லை அப்பா பரீட்சை நெருங்கிக் கொண்டே இருக்கின்றது. அதுதான்...'' என இழுத்தான் நரேன். ''என்னடா பெரிய 'எக்ஸாம்' அது நாளைக்குப் பார்த்துக்கலாம். பேசாமல் - எனக்கு விசரக் கிளப்பாமல் - என்னோட வெளிக்கிடு. நீயும் வேலை பழகின மாதிரி இருக்கும்''

என்ன பெரிய வேலை. நான் படிக்கிற வயதில என்னத்தைப் பழகிறது என்று புறுபுறுத்தான் நரேன்.

''டேய் நரேன், நான் முன்னால போறேன். நீ பின்னாடி வா. அதோட மட்டப்பலகை, சாந்துக் கரண்டி எல்லாத்தையும் எடுத்து உரப்பையில் போட்டு எடுத்துக் கொண்டு வா. பிறகு எதையாவது மறந்து விட்டு வந்து முழிக்காதே'' தனேந்திரன் சொன்னது நரேன் காதில் விழுந்ததோ என்னவோ, அடுக்கி வைத்த புத்தகத்தை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் நரேன். காலை வெயில் சுள்ளென்று எறித்துக் கொண்டிருந்தது. பாடசாலைக்குச் செல்வோர் மற்றும் வேலைக்குச் செல்வோர் எனக் காலை வேளை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அப்பா சொன்ன பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்து உரப்பையில் போட்டு எடுத்துக் கொண்டான்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ENGLISH CLASSES

அனைத்து grade 5இருந்து A/L படிக்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள், வயது வந்தோர், இல்லத்தரசிகள், ஆசிரியர்கள் அனைவருக்கும் வீடு வந்து அவர்களுக்கு ஏற்ற விதத்தில் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

விபரங்களுக்கு: 0772882790

## மணமகள் தேவை

யாழ்.இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட வயது 55 மணமகனுக்கு மணமகள் தேவை. விதவைகளும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0770824139.

## கணினி திருத்துதலும் விற்பனையும்

பாவித்த Laptopcomputer, 25,000/= - 70,000/= வரை. ஆறுமாத உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. அத்துடன் பழுதடைந்த கணினிகள் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: 0772151987 (Prasannaraj)

## தண்ணீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு

பெற்றோலில் இயங்கும் சில்லு இல்லாத HONDA தண்ணீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக் குண்டு.

தொடர்பு: 0750427160

## காணி விற்பனைக்கு

பலாலி வீதிக்கு மிகச் சமீபமாக ஆலடி ஒழுங்கையில், ஊரெழு மேற்கில் சற்சதுரமான, 6பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கலாம். தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: விஜனா 0212240802 அல்லது பழனி 0778957637.

## விற்பனைக்குண்டு

பழைய மொடல் பிறிண்டர் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774592913.

## அருள்முருகன் திருமண சேவை

Doctors, Engineers உட்பட ஏராளமான மணமகன்கள், மணமகள்களில் எத்தகைய மணமக்கள் தேவைக்கும் தொடர்பு: T.P: 2229334 எமது சேவையின் தரம் நேர்மைப்பண்புகள், சேவை முறைமைகள் (Systematical Services) பற்றி இதுவரை அறிந்திராதவர்களுக்கான தெரிவித்தல் இது!

*03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

## நாய்கள் விற்பனைக்கு

உயர் இன டோர்மன் மூன்று மாதக் குட்டிகளும் அல்சேஸன் ஆண், பெண் நாய்களும் உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 0776913211

# புதுவருட பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் புதுவருட கொடுக்கல் வாங்கல்களுக்காக அன்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை திறந்திருக்கும். அன்றைய தினம் அவுறுது வாசனா சான்றிதழில் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்பில் இடுபவர்களுக்குக் குடையும், 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்பிலிடுபவர்களுக்கு எவர் சில்வர் விசிலிங் கேத்தலும் அன்பளிப்பாக வழங்கப்படும் என யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி இரண்டாம் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-311)

# கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. இன்று நடைபெறவிருந்த இந்தக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் செ.சிவானந்தன் தெரிவித்துள்ளார். (ம-311)

## Request for Expression of Interest (EoI)

**Upgrading of Office Building Electric wiring system:**

UNICEF, Jaffna Field Office invites EoIs from qualified and experienced institutions to conduct an Upgrading of Office Building Electric wiring system.

**Terms of References are;**

**General:**

a. Replace Dangerous/substandard cabling.
b. Remove main fuse bypass and install a main fuse with correct rating.
c. Install RCCB breakers for earth leakage protection
d. Electrical Load balancing

**Specific:**

Provide own assessment and cost estimate to upgrade the office electric power supply system which should include the following;

- Replace the main service wire to 50mm 4 core
- Re-arrange current wiring with proper conducting
- Balance the three phases
- Install voltage meter and Ampere meters to monitor power fluctuations
- Install RCCD(trip switch) in the 3ph CEB distribution panels
- Replace the current circuit breakers to march a commercial work environment
- Repair the main incoming fuse (60ampere)
- Install 3 row enclosure for the generator room
- Install a metal enclosure for all electrical devices
- Disconnect the generator supply to UNDP
- Replace the 2.5mm wire from generator to the guest houses with a 6mm wire
- Separate earth link for office building and ICT room.

You are free to come and inspect the office building during office hours from 0900 – 1600 hrs from Monday to Friday.

Please provide your offer in sealed envelope by close of business (cob) 30 April 2011 and attached the company profile. Please include in the company profile

- Details of your facilities related to electrical wiring work.
- Number of technical staff and their capacity knowledge in the field of electrical engineering

Address :
**UNICEF**
**125, Temple Road, Jaffna**

unite for children

unicef

## பூச்சாடிப் பிரியர்களுக்கு...



அழகுத் தோட்டம் அமைத்திட

**DSI** இன் பூச்சாடிகள்

விரும்பிய அளவுகளில் பெற்றுக்கொள்ள

DIAHSRI காட்சியறை

தொ.பே: 021 222 1378 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கைதடி கண்டி வீதியில் அரசினர் வயோதிபர் இல்லம் "சாந்தி நிலையம்" முன்பாக அமைந்த ஒழுங்கையில் கண்டி வீதியில் இருந்து 100m தூரத்தில் 4¼ பரப்புக்காணி விற்பனைக் உண்டு.

தொடர்புகளுக்கு: 0774406388, 0775440293.

## காணி விற்பனைக்குண்டு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் வீடு, தொழிற்சாலை கட்டுவதற்கு உகந்த 9¾ பரப்புக்காணி கிணற்றுடனும் பனைமரங்களுடனும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0774951983.

## வீடும் காணியும் விற்பனைக்கு

மல்லாகத்தில் தமிழ்ப்பாடசாலை ஒழுங்கையில் (விசாலாட்சி வித்தியாலயம்) 6½ பரப்புக்காணியும், காணியில் அமைந்த வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770461170

## விற்பனைக்கு

10 முழம் - 40 மரம், 12 முழம் - 25 மரம் தரமான மரங்களும் மற்றும் தரமான வேலையில் அமைந்த லான்மாஸ்ரர் பெட்டியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0776183885, 0214904791

## வீடு வாடகைக்குண்டு

யாழ். புங்கங்குளம் சந்தியிலுள்ள 03 அறை, 2 வரவேற்பறை மற்றும் சமையல், குளியல் அறை, 4 வாகனங்கள் நிறுத்தத் தக்க வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0779937402

## கல்வெட்டும் இயந்திரம் விற்பனைக்கு

பெற்றோலில் இயங்கும் கல், பாறை, சிமெந்து கட்டடங்களை வெட்டும் இயந்திரம் புதிய BLADE உடன் விற்பனைக்குண்டு. அத்துடன் மின்சாரத்தினால் இயங்கும் நுணுக்கமான வேலை செய்யக்கூடிய SANDER இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0750427160

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சுப்பிரமணியம் சக்திவேல்



மலர்வு
19.01.1956

உதிர்வு
01.04.2009

அன்பான துணைவனே அன்போடும்
பாசத்தோடும் எமைக்காத்த தேவனே!
எம்மினிய அருமை அப்பாவே!
பாதியிலே எமைப் பரிதவிக்க விட்டு
சென்றதேனோ எம் உயிர்த் தந்தையே
என்றும் எம் நெஞ்சம் மாறாத அப்பாவே
உங்கள் நினைவில் என்றும் நாம்.......

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்,
மகன்- சுரேஸ்ராஜா,
மருமகன்- றஜீவ் (நோர்வே).

18/9, மூத்தவிநாயகர் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம். (49,21,25)

## வீடு விற்பனைக்கு

17/A கச்சேரி கிழக்கு ஒழுங்கை
சுண்டிக்குளியில் வீட்டுடன் 2½ பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777369065, 2345603.

நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

# திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

# கடவுள் வடித்த கண்ணீர்



(திருப்பாடுகளின் காட்சி)



காலம்: ஏப்ரல் 12, 13, 15, 16, 17-2011
(செவ்வாய், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு)
-ஐந்து நாள்களுக்கு-
நேரம்: மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை
யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212222393 (39)

திருமறைக் கலாமன்றம்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 . 05 . 1927



மறைவு
01 . 05 . 2009

**அமரர் கந்தையா கனகசபாபதி**

*(ஓய்வுபெற்ற பிரதம புகையிரதப் பாதுகாவலர்)*

திதி: ஸப்தமி (10.04.2011)

அன்புக்கு அணிகலனாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் எம் வாழ்விற்கு ஒளியூட்டிய- தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் மறையாது உங்கள் நினைவுகள்
இறைபதத்தில் இன்புற்று வாழ இறைஞ்சுகின்றோம் எந்நாளும்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

"விஜயாபதி" கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய். (49,21,25)

# சிறுவர் கதிர்

## பருவ காலம் கூறும் பழமொழிகள்

தை பிறந்தால் வழி பிறக்கும்.
மாசிப் பனி மூசிப் பெய்யும்.
பங்குனி மாத வெயிலில் படையும் நடுங்கும்.
சித்திரை மாத வெயில் பத்தரை மாற்றுத் தங்கம்
வைகாசி மழையால் வாழை பெருகும்.
ஆனி அரை ஆறு ஆடி முழு ஆறு.
ஆடிக் காற்று அம்மியும் தூக்கும்.
ஆவணி மேகம் தாவணி போடும்.
புரட்டாதி வெயில் பொன்னுருக்கக் காயும் மண்ணுருகப் பெய்யும்.
ஐப்பசி அடை மழை கார்த்திகை கனமழை.
கார்த்திகைக்குப் பின் மழையும் இல்லை கர்ணனுக்கு பின் கொடையும் இல்லை.
மார்கழிப் பனியில் பச்சையும் துளிர்க்கும்.

**ச.லக்சிகா, தரம்-7 'ஏ',**
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

## விடுகதைகள்

வளைந்து நெளிந்து ஆடும், தண்ணீர் குடித்தால் சாகும் அது என்ன?
**நெருப்பு**

செக்கச் சிவந்த மச்சான் சின்னக்குண்டு மச்சான் அவன் யார்?
**குண்டுமணி**

வெள்ளை மாளிகைக்குள் செல்ல வழியில்லை அது என்ன?
**முட்டை**

கண்ணீர் விட்டு அழுதாலும் கடைசிவரை ஒளி தருவான் அவன் யார்?
**மெழுகுவர்த்தி**

**ச.டிலக்சிகா, தரம்-2 'ஏ',**
யா/சிறுவிளான் கனகசபை வித்தியாலயம்.

## சிந்தனைத் துளிகள்

பிறந்த பூமியைக் காட்டிலும் உயர்ந்த பொறுமை உள்ளவர் யார்?
தாய்
ஆகாயத்தைக் காட்டிலும் பரந்த மனம் கொண்டவர் யார்?
தந்தை
நாடு கடந்து போகுறவனுக்கு யார் தோழன்?
கைவித்தை
புகழ் எதில் நிலைபெறுகின்றது?
நல்லொழுக்கத்தில்

## விடை தெரியுமா? 101

1.உலகின் மிகப்பெரிய வளைகுடா எது?
2.உலகின் மிக ஆழமான கடல்?
3.மிக வேகமாக சூரியனைச் சுற்றும் கோள் எது?
4.உபகோள்கள் இல்லாத கோள்கள் எவை?
5.சிலப்பதிகாரம் நூலின் ஆசிரியர் யார்?ள

### விடை தெரியுமா?

தெரிந்தால் 16.04.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடைகள் 100

1.காட்விட்
2.அமெரிக்காவின் ட்யூக்ஸ் பல்கலைக்கழகம்
3.தாய்லாந்து
4.இந்தியா
5.பிரேம்னா இன்ரகிறிபேர்னியா

### வெற்றி பெற்றவர் விவரம்

1.ஹம்ஷா,
தரம்-9'சி',
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தமிழுக்கு ஆங்கிலம் (10)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'சூ' வரிசையில்**
சூனியம்: Vacuum (Empty)
சூரியன்: Sun
சூப்பு: Soup, Suck
சூசகம்: Hint
சூன்யக்காரி: Witch
சூரன்: Hero
சூடு: Heat, Shot
சூடம்: Camphor
சூறாவளி: Whirl wind

**'செ' வரிசையில்**
செடி:Plant
செட்டை: Wing
செபம்: Prayer
செப்பு: Copper, Tell
செய்: Do
செய்தி:News
செருக்கு: Pride
செருப்பு: Slipper
செலவு: Expenses
செல்வம்: Wealth
செல்வாக்கு: Influence
செவிடு: Deafness
செம்மறி: Sheep

**'சே' வரிசையில்**
சேமி: Save
சேகரி: Gather
சேட்டை: Mischief
சேதம்: Loss
சேரி: Slums
சேவல்: Cock
சேவை:Service
சேறு:Mud

**'சை' வரிசையில்**
சைகை: Signal
சைனியம்: Army
சைத்தான்: Devil


**'சொ' வரிசையில்**
சொறி: Itch
சொல்: Word, Tell
சொட்டு: Drop
சொகுசு:Luxury
சொடக்கு:Cracking the fingers
சொண்டு: Beak
சொத்தி: Lame
சொத்து: Property

**'சோ' வரிசையில்**
சோகம்:Sorrow
சோடி:Couple, Pair
சோடு: Pair of silppers
சோதனை: Trial, Exam
சோதிடம்: Astrology
சோம்பல்:Laziness
சோர்வு: Tiredness
சோலை:Grove
சோறு:Boiled rice
சோம்பேறி:Lazy man
சோளம்:Maize

**'சௌ' வரிசையில்**
சௌகரியம்: Comfortable
சௌக்கியம்: Healthy


தொகுப்பு:ரம்யன்

## மாணவத் தூரிகை



ஆர்.அத்மன், தரம்-8 'ஏ',
ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயம்.

சி.கிரிசதுர்ஸ், தரம்-9
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.





சி.சரஞ்ஞா, தரம்-4,
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## அகதி



ஊரை இழந்து
உறவுகளைப் பிரிந்து
உண்ண உணவின்றி
உறங்க இடமின்றி
ஓலைக் குடிசைக்குள்
என் கண்ணீரும்
கரைகிறது நானும்
ஓர் அகதியாய்
கதறி அழுகின்றேன்

கதிர், நெடுந்தீவு.

## இங்கேயும் அதுவா...!

அழகுடன் அன்றி
அன்புடன் ஒருவன்
பட்டங்கள் இன்றி
நம்பிக்கையுடன்...
மண்ணை மட்டும் நம்பி
இருக்கும் ஒருவன்
மணம் முடிக்க வரும்போது
எனக்கு...!
கோட்டும் சூட்டும் பட்டங்களும்
கொண்டவன்...
தான் வேண்டும்...
என்று கூறும்...
பெண்கள் உள்ளவரை!
பட்டங்கள் கொண்டவனுக்கு
மவுசு இருக்கப்
போவது உண்மையே!

கப்பலில் ஏறியவனுக்கும்
கல்லுடைப்பவனுக்கும் மட்டும்
சீதனம் தேவை இல்லை
என்று கூறுவதிலிருந்தும்
எஞ்சினியருக்கும் எக்கவுண்டருக்கும்
நம்மை விலை பேசுவது
சரியென...
ஒப்புக் கொள்பவரும் இருக்கிறார்கள்
அன்பு சகோதரிகளே...
பகட்டுக்கு மட்டும் ஆசைப்படாதீர்கள்
பண்பை...
முதலாக கொள்வீர்
தரப்படுத்தாதீர்
சமத்துவம் கொடுங்கள்
நிச்சயம்!
சீதனப்பேய் ஓடிவிடும்.

எஸ்.கிருஷா,
புலோலி.

## மன்னித்துவிடு



துன்னாலையூர்
ஆர்.பரமேஷ்

என் ஈரவிரல்
இடையினில் நின்று - தினம்
நாட்டியம் போடுகின்றாய்
நான் வா எனும்போது
வருகின்றாய் - போ
எனும் போது போகின்றாய்
நீ உயர்ந்தவன்
உயிர் இல்லாவிட்டாலும்
உனக்குள் உதிரம் உண்டு
நான் நினைப்பதினை - நீ
உனை உருக்கி எனக்கு
வடித்து தருகின்றாய்

எனக்கு நல்ல நன்பனாக
உன் தூக்கம் மறந்து
அதிக நேரம் என்னோடு
உலவுகின்றாய் - நான்
தன் நன்றி கெட்டவானக
எனக்காக உழைத்த
உன்னை
உன் உதிரம்
முடிவுற்றதும்
துக்கி எறிந்து விடுகின்றேன்
என்னை மன்னித்துவிடு
என்னை புரிந்த பேனாவே...

## தடைகள்

என்
ஆழ் மனம்
தினமும்
தடைகள் எதுவுமின்றி
கற்பனையில்
நீண்ட தூரம்
பயணித்துக் கொண்டிருக்கின்றது....!
ஆனால்
நிஜ வாழ்வில்
என்னைச் சூழ்ந்துள்ள
தடைகளைத் தாண்டி- ஒரு
தடவையேனும்
என்னால்
பயணிக்க முடியவில்லையே...!



து.திலக், யாழ்ப்பாணம்.

## இத்தனை பெரிய பூவா....

-வசந்தி

மழை பார்க்க
தலை நீட்டுகிறாய் நீ
கண்களைப் பொத்திக்
கொள்கிறது
மின்னல்

நனைதல் பிடிக்குமென்று
மழையில் குதிக்கிறாய்
இந்த சிலையைப்
பிடிக்கிறதென்று
உன் மேனியில் குதிக்கிறது
மழை

றோஜாவை ஏனடி
வருடிப் போனாய்?
உன் மென்மை கண்டு
உதிர்ந்து விழுந்து
தற்கொலை செய்கின்றன
றோஜா இதழ்கள்!

'இன்று என்ன நாள்?'
ஆசிரியரின் கேள்விக்கு
அமாவாசை என்கிறேன்
நீதான் வரவில்லையே

பனித்துளியில் முகம் பார்த்த
பட்டாம் பூச்சி திகைத்துப் போனது
இத்தனை பெரிய பூவா என்று
நீரூற்ற வந்த உன்னைப் பார்த்து!

## இருட்டறை....



ச.பகீரதன்

வேதனைகளை
சொந்தமாக்கி
மரணத்தின் விளிம்பில்
விரக்தி என்னும் வாழ்வில்
துடித்து துரும்பு
போல் இருக்கும்
என் இதயத்துக்குச்
சுமையேற்றி
சுகம் விசாரிக்கும்- உன்
உள்ளம் என்னையறியாத
ஓர் இருட்டறைதான்
இன்னும்....

## வீசி விட்டாள்....

"ஓவியாவின்" இடுப்பில்
ஒய்யாரமாய்த்
தொங்கினேன்!
அவள் அழகிற்கு அழகு
சேர்த்து!

ஆயிரம் முறை....!
அவள் இஸ்ரப்படி
முத்தமிட்டேன்

பலமுறை என்னை
கசக்கிப் பிளிந்திருந்தாள்
இருந்தாலும்.........?
அவள் போக்கில் என
விட்டிருப்பேன்

ஆனாலும்...? "ஓவியா"
'ஏசி'வீட்டில்!
ஓசியில்
வாழ்ந்தவளாச்சே....!
அழகுள்ளவரை என்னை

அனுபவித்துவிட்டு
தூர வீசி விட்டாள்
தூசி துடைக்கும்
துப்பட்டாவாக்கி.



வன்னி மகன்

## மனதைக் கவர்ந்த உலகு

காமன் பெற்ற பேடு!-அந்தக்
கன்னிக் கேதுவோ ஈடு!
வாவென் றழைக்க வனப்பு!-அவள்
வந்தாள் எனக்கும் இனிப்பு!

அறைக்குள் தனியே கிடப்பாள்!-மலர்
அனைய அன்னவள் படுப்பாள்!
நிறைந்த மனதோடு நானும்!-பல
நிமிடம் சுவைக்க வேணும்!

பனியின் குளிரினால் மெத்தை!-தனில்
படுப்போம் பின்படிப்போம் வித்தை!

தனிமை இனிமை என்பாள்!-தாகம்
தணிப்பாள் காத லன்பால்!

மாலையில் படலைப் பக்கம்!-உனைக்
கண்டால் எனக்குச் சொர்க்கம்!
காலைக் கமலம் போல் இருப்பாள்!-காதற்
கரங்கொண் டென்னை அணைப்பாள்!

கண்கள் இரண்டும் வண்டு!-அவள்
கன்னிப் பூவெனும் செண்டு!
மண்ணில் மலர்ந்த அழகு!-என்
மனதைக் கவந்த உலகு!

எம்.ரீ.சஜாத், கிண்ணியா.

## செப்படி வித்தையன்று கலை

நல்லூர் G.K.தாஸ்

அற்புதக் கலைஞர் - பலர்
அமர்ந்திருந்து புகழோச்சி
விற்பன்னம் விளைவித்த
விந்தைத் திருமண் இது!
தட்சணாமூர்த்தி எனும்
தனியொரு லயமேதை - தன்
தனித்துவக் கலைத்திறத்தால்
தரணியெங்கும் புகழ் சேர்த்தான்!
இசையே உயிர் மூச்சான
உத்தமக் கலைஞர் பலரின்
உழைப்பினாலே உயர்ந்து
உருப்பெற்றது இப்பூமி! - இங்கு
கரங்களில் பட்டமொன்று பெற்றால்
கலைஞராகி விட்டோம் என்று
கங்கணங்கட்டுதல்
காலத்தின் பிழையே ஐயா!
இப்படியே போனால்
எப்படியாகும் நம் கலை?- அது
செப்படி வித்தையன்று!
குன்றிடாத் தொடர் பயிற்சியும் - என்றும்

நின்றிடாத நிறை முயற்சியும்
தன்னையுணர்தலும் - சுருதி,
தாளம், லயப் பயிற்சி - தன்
மூச்சுப் போல் முகர்தலும் வேண்டும்!
கலைத்துவத்தின் மேன்மையன்று
பட்டங்கள்!- அவை
கலை வாழ்வின் நுழைவுச் சீட்டே!
கலை என்றால் - மனங்களை
கரைக்க வேண்டும்!
உள் நுழைந்து ஆழ ஊடுருவி - ஆன்ம
உணர்வு தொட்டு உலுக்க வேண்டும்!
மனங்கொள்க!

# தமிழக முகாம்களிலுள்ள ஈழத் தமிழருக்கு விடிவுகாலம் கிட்டுமா...?

**அரசியல் தலைவர்களுக்கும் முதல்வர் கருணாநிதிக்கும் கடிதங்கள் எழுதியதுதான் மிச்சமாகியுள்ளது. எமக்கு விடிவு காலம் கிடைக்க எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை என்று குமுறுகின்றனர் ஈழத்தமிழ் அகதிகள்.**

துன்னாலைச் செல்வம்



இலங்கையில் போர் நடைபெற்ற காலப் பகுதியில் கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றவர்கள் இன்று போர் முடிவடைந்த நிலையிலும் தமது சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் அன்றாட வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விமானக் குண்டு மழை, ஆட்லறி ஷெல்லின் சிதறல்களுக்குள் இருந்து தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சொந்த ஊரையேவிட்டு ஓடியவர்கள்.

இன்னும் அவர்களுக்கான நிலையான இருப்பிடம் கிடைக்கவில்லை. இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**கடலில் மாண்டனர் சிறையில் வாடுகின்றனர்**

இடம்பெயர்ந்து படகு மூலம் சென்றவர்களில் பலர் கடலில் மாண்டனர். பலர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகிறார்கள். பலர் இராமேஸ்வரம் கரை சேர்ந்தனர். இராமேஸ்வரம் கரை சேர்ந்தவர்கள் தமிழ்நாடு அகதி முகாம்களில் வாடுகின்றனர். தப்பிப் பிழைத்துச் சென்றும் தமக்கு இன்றுவரை சந்தோஷமான வாழ்வை வாழ முடியவில்லை எனக் கதறி அழுகின்றனர்.

தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும், அவர்களின் வாழ்வு முறைகளைத் தமது சொந்த ஊருக்கே வந்து பழக்கிக் கொள்ள ஆசைப்படுகின்றனர். மிகப்பெரிய நிறைவேறாத கனவு உலகில் வாழ்கின்றனர். தமது எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்று தெரியாமல் விரக்தியின் விளிம்பில் நாளைக் கழிக்கின்றனர்.

ஈழத் தமிழர்களுக்கு இந்தியா எந்த வேளையும் உதவி செய்யும் என்ற நம்பிக்கையில் இடம்பெயர்ந்து கடல் ஏறியவர்களுக்கு தமிழ்நாட்டு அரசு கூட எந்தவிதமான உதவிகளும் செய்யாது கை விரித்துள்ளது.

**இந்திய அரசு மீது நம்பிக்கை வைக்கமுடியாது**

ஈழத் தமிழர்களின் அழிவுக்குப் பெரும் பங்காற்றிய இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு நல்ல விடிவைப் பெற்றுக் கொடுக்கும் என்று நினைக்க முடியாது.

இடம்பெயர்ந்து இந்திய தமிழ் நாடு அகதிமுகாம்களில் இருக்கும் இலங்கை மக்களின் வாழ்வாதார முன் னேற்றத்திலும் அவர்களின் எதிர்காலம் பற்றியும் எள்ளளவும் சிந்திக்காத இந்திய அரசு, எப்படி இலங்கையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு உதவி செய்யப்போகிறது.

தமிழ்நாடு அகதி முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களில் ஒரு குடும்பத்துக்கு இந்திய அரசு வழங்கும் உதவித் தொகையானது எந்த மூலைக்குக் காணும் என்பதால் கல் உடைத்தல், மூடை ஏற்றுதல் போன்ற கட்டட வேலைகள் உட்படப் பல கஷ்டமான தொழிலில் பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கியூ பொலிஸாரின் நெருக்கடிகளுக்கும் தமிழ்நாடு பொலிஸாரின் அச்சுறுத்தல்களுக்கும் நாளாந்தம் முகம் கொடுத்து வருகிறார்கள்.

முகாம்களில் நடக்கும் பிரச்சினைகளை வெளியே சொல்ல முடியாமல் தமக்குள் சொல்லிப் புலம்புகின்றனர். அங்குள்ள முகாம்களில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகள் கூட முழுமையாகக் கிடைப்பதில்லை. முகாம் பொறுப்பதி காரிகளிலிருந்து அங்கு கடமைபுரியும் அலுவலகர்வரை இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் அனைத்திலும் கை வைத்து விடுகின்றனர். முகாமில் நடப்பவை வெளியே சொல்லக் கூடாது என முகாம் அதிகாரிகளால் அடிக்கடி தமிழ் மக்கள் அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர்.

**நாளாந்தம் அச்சுறுத்தலால் நொந்துபோயுள்ளனர்**

நாளாந்தம் நடைபெறும் இவர்கள் மீதான அச்சுறுத்தல் நடவடிக்கைகளால் கும்மிடிப் பூண்டி முகாம் மக்கள் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்து விட்டனர். மரங்களில் ஏறி நின்றும் தமது உண்ணாவிரதப் போரட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தைக் கைவிடுமாறு கோரிய தமிழ்நாடு பொலிஸார், அதனை ஏற்க மறுத்த முகாம் மக்களைப் பொல்லுகளால் அடித்துக் காயப்படுத்தினர். காயப்பட்டவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதனால் அந்தப் போராட்டத்தை முகாம் மக்கள் கைவிட்டனர். இன்று வரை ஒன்றுமே செய்ய முடியாமல் குரல் கொடுக்க முடியாத அடிமைகளாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கூலித் தொழிலுக்காக அம் மக்கள் முகாமை விட்டு வெளியே சென்றுவரும்போது பொலிஸாருக்கு 'மாமுல்' கொடுக்காமல் முகாமுக்குள் வரமுடியாது.

உலகத் தமிழர்களின் தலைவன் என்று வெளியே சொல்லிக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டின் முதல்வர் கலைஞர் கருணாநிதி கூட இந்த மக்களின் எதிர்காலம் பற்றி ஒரு துளியளவு கூட சிந்திப்பதாகத் தெரியவில்லை. திருமணம் ஆகாத பெண்களும், தொழில் இல்லாத ஆண்களும் அகதி முகாம்களில் அதிகமாகக் காணப்படுகின்றார்கள்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் முன் வந்து தமக்கு உதவி செய்வார்களா என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

**பகடைக் காய்களாக ஈழத் தமிழர்கள்**

இந்திய அரசியலுக்காக ஈழத் தமிழர்களைப் பகடைக் காய்கலாகப் பயன்படுத்தும் தமிழ்நாட்டு அரசு, தேர்தல் முடிவடைந்த பின்னர் அடுத்த தேர்தல் வரும் வரை மௌனம் காப்பது - அவர்கள் அரசியல் இலாபத்தை எதிர்நோக்கி இருப்பது - நன்கு தெரிகிறது.

ஒரு மிக்ஷிக்கும், ரீவிக்கும் தேர்தலில் ஓட்டுப் போடும் தமிழ்நாட்டு மக்கள் இருக்கும் வரை தமிழ்நாடு அரசியல் நாற்றம் வெளியே வரமுடியாத குப்பைத் தொட்டியாகவே இருக்கப் போகின்றது.

இதனை மாற்றக்கூடிய திராணி உள்ள தமிழ்த் தலைவன் இல்லாத வெறுமையின் இருப்பிடமாவே என்றைக்குமே தமிழ் நாடு இருக்கப் போகிறது என்பது தான் தமிழ் சமூகத்துக்குக் கிடைத்த வேதனையான செய்தியாகும். தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் விவரங்களைத் திரட்டி, அவர்களது புலம்பெயர் உறவுகளுடனான தொடர்புகளைக் கண்காணிக்க இலங்கையிலிருந்து சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் தமிழகத்துக்குச் செல்லவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இன்னும் இருக்கிறார்கள் என்ற வலையமைப்பில் தொடர்ந்தும் தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் பங்கு கொள்ளாமல் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த தமிழ் மக்களைக் கண்காணிப்பு நடவடிக்கை என்ற பெயரில் அவர்களுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பது எந்த விதத்தில் நியாயமாகும்.

**வளமான வாழ்வுக்கு வழிசமைக்கப்படுமா?**

அந்த மக்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து, அவர்களைக் குடியமர்த்தி, அவர்களின் வாழ்வை வளம் பெறச் செய்ய நடவடிக்கை எடுப்பதை விட்டு, புலிகள் என்ற சந்தேகத்தின் பெயரில் முகாமுக்குள் முடக்கும் நடவ டிக்கையில் என்னத்தை இலங்கை அரசு எதிர் பார்த்துக் காத்திருக்கின்றது.

தமிழ் நாடு அகதி முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் வெளியிடங்களுக்குச் செல்வதற்குக் கூட வசதியில்லாத காரணத்தினால் முகாம்களுக்குள் முடங்கும் நிலை காணப்படுகின்றது.

தமிழ்நாடு அகதி முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் விமானம் மூலம் இலங்கை வருவதற்கு வசதி இருப்பின் ஒரு வழிக் கடவுச் சீட்டை அங்கே உள்ள இலங்கைத் தூதரகத்தில் பெறவேண்டும். அப்படிப் பெறுவதற்கு அங்கு சென்றால் அந்த தூதரகத்தில் பணிபுரியும் சிங்கள அதிகாரிகளால் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாமல் போகும் நிலை உள்ளது. அவர்கள் திருப்பி முகாமுக்கே அனுப்பி விடுவார்கள்.

நீ புலியாக இருந்த படியால் தான் இங்கே கடலால் வந்திருக்கின்றாய் எனக்கேட்கும் கேள்வியில் பலபேர் இலங்கைத் தூதரகத்துக்குச் செல்வதற்கே பயப்படுகின்றனர். பல தடவைகள் தூதரகத்துக்கு அலைந்து திரிந்து ஒரு வழி கடவுச் சீட்டைப்பெற்று, பின்பு கிளியரன்ஸ் எடுப்பதற்காக அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கிவிட வேண்டும். முதலில் பொலிஸ் நற்சான்றிதழ் எடுத்துக் கொண்டு சென்னையில் உள்ள மவுண்ட் வீதியில் உள்ள S.P. அலுவலகத்துக்குச் சென்று கிளியரன்ஸ் படிவத்தை வாங்கி நிரப்பிக் கொடுத்து V.O. விடம், அதாவது கிராம அலுவரிடம் இருந்து கடிதம் வாங்கிக் கொண்டு R.I. யிடம் சென்று ஒரு கடிதத்தை வாங்கிக்கொண்டு தாம்பரத்தில் உள்ள தாலுகா அலுவலகத்துக்குச் சென்று கடிதத்தைப் பெற்று காஞ்சிபுரம் சென்று கலெக்டரிடம் சைன் வாங்கிக்கொண்டு மீண்டும் S.P அலுவலகத்துக்கு வந்து விண்ணப்பத்தைக் கொடுத்தால் விமான ரிக்கெட்டைப் பதிவுசெய்து கொண்டு வரும் படி சொல்லுவார்கள்.

உடனே சென்று விமான ரிக்கெட்டை புக்கிங்செய்து விட்டு டிக்கெட்டைக் கொண்டு வந்து காட்டினதும் கிளியரன்ஸ் தருவார்கள்.

இதற்கிடையில் எல்லோருக்கும் லஞ்சம் கொடுத்தால்தான் இத்தனை கடிதங்களையும் பெறமுடியும். பணம் இல்லாதவர்கள் என்ன செய்ய முடியும். தமிழ் நாட்டில் வெளி இடங்களில் தங்குவதா இருந்தால் என்ன செய்ய முடியும்.

வாடகைக்குப் பணம் கூடுதலாக தேவைப்படும் சில குடும்பங்களின் உறவினர்கள் வெளிநாடுகளில் இருப்பதால் அவர்கள் மூலம் பணம் கிடைப்பதால் சிலரின் வாழ்க்கை நன்றாக இருக்கிறது.

வெளிநாடுகளில் உறவு இல்லாதவர்கள் ஏதாவது கூலிவேலை செய்துதான் அங்கே வாழமுடியும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கான வெளிநாட்டு கடன்கள்



## விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு ஆதரவு

இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களமானது இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

## கடன் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?

### 1ஆம் வகை

கம்பனியொன்றின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுகளை மேற்கொண்டுள்ள வணிகப் பொருள் ஏற்றுமதியாளர்கள்
- சுற்றுலா
- சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கு நிலையங்கள்
- இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம்
- கப்பற்படுத்தல்
- உள்நாட்டு வான் பயணம்

### 3ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களிலுள்ள தனி உடமையாளர்களுக்கு, உடமையாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- ஆலோசனைப் பணிகள்
- அரச அதிகாரசபைகளுடன் பதிவு செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
- விளம்பரம் செய்தல், பிரசுரித்தல், புகைப்படமெடுத்தல்
- விளையாட்டுகள் தொடர்பான பணிகள்
- நவீன உடைகளின் வடிவமைப்பு மற்றும் திரைப்படத் தொழில்
- பொழுதுபோக்குத் தொழில் (சங்கீதம், நடனம், நிகழ்ச்சி முகாமைத்துவம் போன்றவை)

### 2ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களில் ஈடுபடும் கம்பனிகளுக்கு கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் பெருந்தோட்டம்
- மீன்பிடி
- உணவு பதனிடல்
- கல்வி மற்றும் பயிற்சி
- வலு உருவாக்கம் மற்றும் கடத்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- மருத்துவமனைகள் மற்றும் நலம் மற்றும் நலக் கவனிப்புப் பணிகளின் வழங்கல்
- வர்த்தக ரீதியிலான வீடமைப்பு நிர்மாணம்
- வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம்
- பாரிய போக்குவரத்து
- சுற்றாடல் பாதுகாப்பு
- பல்பொருள் அங்காடி
- ஊர்திகளைப் பொருத்துதல்
- துறைமுகங்கள் மற்றும் துணைப் பணிகள்
- கைத்தொழில் பூங்காக்கள்
- நகர உட்கட்டமைப்பு (நீர் விநியோகம், சுகாதார மற்றும் வடிகால் செயற்றிட்டங்கள்)
- தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவோர்
- பாரிய கைத்தொழில்கள் மற்றும் தயாரிப்பு

## கடன் வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் யார் ?

- பன்னாட்டு வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகள்
- பல்புடை நிதியியல் நிறுவனங்கள்
- கடன்பெறும் கம்பனிகளின் வெளிநாட்டு பங்குடமையாளர்கள் அல்லது தாய்க் கம்பனிகள்
- ஏற்றுமதிக் கொடுகடன் முகவர்கள்
- தனிப்பட்ட கடன்வழங்குநர்கள்: வதியும் நாட்டில் அவன்/ அவள் வரி செலுத்துவர் என்ற சான்றுடன் கூறப்பட்ட வங்கியுடன் அவன்/ அவள் கணக்கைப் பேணுவதாக அவனது/ அவளது வதியும் நாட்டின் வங்கியாளரிடமிருந்து உறுதிப்படுத்தலை அளிக்குமிடத்து

## கடன்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நியதிகள் எவை?

**கடன் பெறவேண்டிய ஆகக் கூடிய தொகை:** ஐ.அ.டொலர் 20 மில்லியன்

**மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி:** கடன் பெறுகைகளைப் பெற்ற திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும

**கடன் பெறுவதற்கான செலவு:** கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான பிரயோகிக்கத்தக்க வட்டி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளும் இரண்டாந்தரச் சந்தையில் தற்போதைய இலங்கையின் நாட்டுக்கான பன்னாட்டு முறி வீதம் + 200 அடிப்படைப்புள்ளிகளை விஞ்சுதலாகாது

## கடன் பெறக்கூடிய நோக்கங்கள் எவை?

தொழிற்படு மூலதனம், வியாபாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு, கம்பனியை மீள அமைத்தல் அல்லது ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் விபரங்கள் மற்றும் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான **www.cbsl.gov.lk** இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து **011-2477358** அல்லது **011-2477000 – நீட்டம் 3126.**

பி. எச். ஓ. சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
**CENTRAL BANK OF SRI LANKA**


## புதுவருட போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.10

பருத்தித்துறை சுப்பர்மடம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் சித்திரைப் புத்தாண்டு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதியன்று மாபெரும் போட்டிகளை நடத்த உள்ளது.

அன்றையதினம் காலை படகு ஓட்டம், மரம் வலித்தல், நீச்சல்போட்டி, மரதன் ஓட்டம் ஆகிய போட்டிகளும் மாலை, சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக உடற்பயிற்சி நிலையத்தின் விளையாட்டுக்களும் இடம் பெறவுள்ளன.

(ம-78)


# நினைவஞ்சலி



மலர்வு 24.06.1926 — உதிர்வு 05.04.1987

## செல்வி பத்மாவதி இராமநாதன்

*(ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

திதி: 10.04.2011

கடமை தவறாமல் கல்லூரிக்கும் விநாயகர் கோயிலுக்கும்
சேவைசெய்து நிம்மதி அடைந்தார்
இந்த அதிபர் காலம் கல்லூரிக்கும் ஒரு பொற்காலம் என்று
எல்லோரையும் வர்ணிக்க வைத்தார்
இந்த உலகத்தில் செய்த சேவை போதும் தமதுலகிலும்
செய்யவேண்டும் என்பது இறைவன் கட்டளை
சீக்கிரமாகவே இறை அடியை அடைந்து விட்டார்
அன்பும் பக்தியும் கலந்த அஞ்சலிகள்பல.....

*திருமதி க.லம்போதரன்*
*126/4, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சகோதரி.

(49.20.50)



# EXPRESSION OF INTEREST

## Civil Work Contractors

UNDP Sri Lanka

The United Nations Development Programme (UNDP) Jaffna Field Office in Sri Lanka wishes to facilitate the resettlement process by providing sustainable basic infrastructure facilities to crisis affected communities to enable access to socio economic services and facilities in the Jaffna District.

To this effect, the Transition Recovery Programme (TRP) within the United Nations Development Programme (UNDP) Office in Sri Lanka invites eligible national civil work contractors to indicate their Expression of Interest for various civil work contracts such as Construction of Multi-purpose halls, Preschools, Sales outlets/Auction Centers, Internal Roads, Culverts, Primary Heath Centers, small scale irrigation and water supply systems, Agro Wells and other small scale lively hood/Environmental related infrastructure facilities, etc within the Jaffna Peninsula.

***In order to qualify, contractors must be registered with The Institute for Construction Training and Development (ICTAD). All contractors must have an ICTAD grade of above M7 or C8 to qualify for this EOI. Any contractor unable to meet this requirement will not be considered for short listing and will be disqualified from the Expression of Interest.***

Detailed Scope of Works, Bills of Quantities (BOQ), Detailed Technical Drawings and other relevant Bid Solicitation Documents will be made available for *only* short-listed organizations that qualify as technically compliant subsequent to the proposals submitted based on this Expression of Interest. Short listing will be based on core technical competencies such as, minimum Institute of Construction Training and Development (ICTAD) qualifications/grading, reference details of similar work undertaken and successfully completed along with proven financial stability of the organization. Qualified and interested vendors must provide/indicate the following in detail in the submission for Expression of Interest:

| NO. | CATEGORY | REFER TABLE |
|---|---|---|
| i. | Company Profile | 1 |
| ii. | Current Construction Contract Commitments | 2 |
| iii. | Information About Personnel Proposed to Site/Project | 3 |
| iv. | Experience of Contractor in Terms of Money Volume and Similarity of Projects | 4 |
| v. | List of Machineries and Equipment | 5 |
| vi. | Construction Turnover for the Last Five Years | 6 |
| vii. | Financial Capacity | 7 |
| viii. | Litigation History | 8 |
| ix | Client References | 9 |

All reference tables can be downloaded from www.undp.lk (working with us > Procurement) between 11th– 25th April 2011 or collected from the address below. Any proposal received and not conforming to the EOI guidelines above will be considered as technically non-compliant and the offer may be rejected. The deadline for the submission of the Expression of Interest is on or before 06th May 2011 2.00pm local time and all sealed proposals must be handed over to the following address:

**Head of Office**
**United Nations Development Programme (UNDP)**
**No. 121 Temple Road, Jaffna, Sri Lanka.**

(49.23.24)

The applicants will be responsible for any costs or expenses incurred by parties for preparation or delivery of expression of interest and UNDP will not be reimbursing any expenses in this regard.
UNDP reserves the right to reject any EOI submitted by interested parties, without assigning any reasons thereof.

# பனை வளஞ்சார் அபிவிருத்திக்கு வழிபிறக்குமா?

10



இயற்கையுடன் இயற்கையை அனுசரித்து வாழப் பழக வேண்டும். எமக்கு இயற்கை அன்னை தந்த அரும்பெரும் சொத்து பனை வளமாகும். இந்த வளத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை மூலப்பொருளாக்கி முதலாக்கும் வழிவகைகளை மேலும் ஆராய்ந்தால் இன்னும் பலவிதமான மதிப்பேற்றஞ் செய்த பொருள்களைத் தரம் வாய்ந்ததாக ஆக்கி உள்ளூர் மற்றும் உலகச் சந்தைகளில் உரிமையுடன் உலாவர வைக்க முடியும். எங்களூர் உணவுப் பொருள்களுக்கும் ஏனைய உற்பத்திப் பொருள்களுக்குமான கேள்வியை அதிகரிக்கும் வழிவகைகளை இன்னும் ஆராய்ந்தால் நிச்சயம் அவற்றின் விற்பனையைப் பல மடங்குகளாக உயர்த்திவிட முடியும். இதில் பனைவளஞ்சார் கைத்தொழில்மான விளைபொருள்களாகக் கற்பக தருவின் பொருள்களை மாற்றிவிட முடியும்.

பனை மரத்திலிருந்து பெறப்படும் பெருள்களிலிருந்து உணவுப் பொருள்களை இன்னும் மதிப்பேற்றஞ் செய்து உருவாக்குதல் நன்று. இந்த உணவுப் பொருள்களின் தூய்மை அல்லது தரம் மிகவும் கவனிக்கப்படல் வேண்டும். குடிசைக் கைத்தொழிலாகவும் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பினூடாகவும் உற்பத்தியாகும் இந்த உணவுப் பொருள்கள் தரமானவையாகவும் சுத்தமானவையாகவும் இருக்க வேண்டுமெனப் பலரும் எதிர்பார்க்கின்றனர். குறிப்பாகத் தனியாரினால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் தரமில்லாது இருப்பதுடன் கலப்படம் செய்யப்பட்டு தரங்குறைந்து விற்கப்படுவதால் எம்மவர்கள் வாங்கிப் பயன்படுத்தப் பின்னடிக்கிறார்கள். தனிப்பட்டவர்களால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களுக்கான கேள்வி குறைந்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

### பதநீரிலிருந்து பெறப்படும் மதிப்பேற்றஞ் செய்த உணவுப் பொருள்கள்

பதநீரிலிருந்து பல்வேறு வகையான பொருள்கள் மதிப்பேற்றஞ்செய்து பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன: கருப்புட்டி அல்லது பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனைந்தேன், பனஞ் சர்க்கரை ஆகியனவாகும்.

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பதாகவே பனையிலிருந்து பதநீரை இறக்கி பனை வெல்லம் தயாரிக்கப்பட்டது. இந்தியாவின் ஆந்திரா கேரளம், கர்நாடகம்,மேற்குவங்காளம் இவற்றுடன் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலும் பனை வெல்லம் தயாரிக்கப்படுகின்றது. இலங்கையில் வடபகுதியிலேயே இந்த வெல்லம் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பதநீரிலிருந்து உருவாகும் பனைவெல்லம் பற்றி மகாத்மா காந்தியடிகள் இப்படிக் கூறியிருக்கின்றார்.

''பதநீரைத் தேனுக்கு ஒப்பான இனிய வெல்லமாக மாற்ற முடியும். இந்த வெல்லம் கரும்பு வெல்லத்தை விடச் சிறந்தது. கரும்பு,வெல்லம் இனிமையானது. ஆனால் பனை வெல்லமோ இனிப்பும், அதைவிட சுவையும் உடையது. இதில் பல உலோக உப்புக்கள் உள்ளன. மருத்துவர்கள் என்னிடம் வெல்லம் சாப்பிடச் சொன்னார்கள். அதனால் நான் எப்போதும் பனை வெல்லமே சாப்பிடுகிறேன். ஆலைகளில் கூட உற்பத்தி செய்ய முடியாத அதிசயமாக இயற்கை இந்தப் பொருளை உண்டாக்கியிருக்கிறது. இந்த வெல்ல உற்பத்தி குடிசைகளிலேயே நடைபெறுகின்றது. பனைகள் அதிகமாக உள்ள ஆயிரக்கணக்கான கிராமங்கள் உள்ளன. அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் இந்த வெல்லம் தயாரிக்கப்படுகின்றது. இந்த நாட்டிலிருந்து ஏழ்மையை விரட்ட இது ஒரு வழி. இது ஏழ்மைக்கு மாற்று மருந்தாகவும் அமையும்''

மகாத்மா காந்தியடிகள் அனுபவத்தால் உணர்ந்து கூறிய அனைத்தும் பெறுமதியானவை. அவர்போல நாமும் பனை வெல்லத்தை உணவில் பயன்படுத்தினால் எமது வளமும் உரம்பெறும் நாமும் சுகதேகிகளாவோம்.

### பனை வெல்லம்

பனை வெல்லமெனத் தனியாரினால் விற்கப்படும் வெல்லக் கட்டிகள் தூய்மையானதாகவும் தரமானவையாகவும் இருப்பதில்லையென்றும் அதனுள் கரும்பு சீனியை இனிப்புத் தன்மையை அதிகரிப்பதற்காகக் கலக்கப்படுவதாகவும் பலவகையில் புகார்கள் எழுகின்றன. இவ்வாறான நிலைமையை மாற்றுவதற்காகவும் இந்தப்பொருள்களை வாங்கிப் பயன்படுத்துபவர்களுக்கு நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்காகவும் நிறுவனக் கட்டமைப்பினூடாக இப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும். இந்தச் செயற்பாடுகளை வடபிராந்திய பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவு சமாசத்தினூடாக நெறிப்படுத்தி முன்னெடுப்பது இவையனைத்துக்குமான தீர்வாக அமையும்.



(வளரும்)


பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# மாதுளை மருத்துவத்தில் பல பயன் தரவல்லது

## இலுப்பை

**வேறு பெயர்:** இருப்பை, குலிகம், மதுகம்.
**தாவரவியற் பெயர்:** Madhuca Longifolia
(மதுகா லோன்ஜிபோலியா)
**குடும்பம்:** Sapotaceae (சப்போட் டேசியே)
**சிங்களப் பெயர் :** மீ
**சமஸ்கிருதப் பெயர்:** மதுகா
**ஆங்கிலப் பெயர்:** Indian butter tree

இது பெருமரவகுப்புக்குரியது. வைரமான மரம். பரந்த கிளைகளில் தனி இலைகளைக் கொண்டது. பூ வெள்ளை நிறம். சித்திரை, வைகாசியில் பூக்கும்.



இதன் பூவைக் குடிநீர் செய்து கொடுக்க இருமல், நீர் வேட்கை என்பன தீரும். உலர்ந்த பூவை பொட்டணி கட்டி வாதவீக்கங்களுக்கு ஒற்றடங் கொடுத்துவர வீக்கம் வற்றும். பட்டையை குடி நீரில் அவித்துப் புண்களைக் கழுவலாம் இலுப்பெண்ணெயை பித்த வெடிப்புக்குப் பூசி வர மாறும்.

இலுப்பை அரப்பை தேசிக்காயுடன் சேர்த்து அவித்து தலைக்குத்தேய்த்து முழுகிவர தலைப்பொடுகு, தலையவியல், மண்டைக் கரப்பன் என்பன மாறும். இலுப்பை அரப்பு அவித்த நீரால் புண்கள், சொறி, சிரங்குள்ள இடங்களில் தேய்த்துக் கழுவிவர மாறும்.

## வன்னி

**வேறு பெயர்:** சமீவிருட்சம்
**தாவரவியற் பெயர்:** Caesalpinia Coriaria
(சிசால்பீனியா கோரியேரியா)
**குடும்பம்:** Caesalpinioideae
(சிசால்பீனியோய்டியே)
**சமஸ்கிருதப் பெயர்:** சமீவிருட்சம்

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

வன்னியிலை (வன்னிபதரம்) விநாயகருக்குப் பிரியமானது. வன்னிச்சமித்து சனீஸ்வரனுக்கு உகந்தது. சமீ என்றால் பாவங்களைச் சமிக்கச் செய்வது என்று கருத்து. புனிதமான மரமாதலால் இதை வெட்டுவதில்லை. ஆலயங்களில் வடகிழக்குத் திசையில் வளர்க்கப்படுவது வழக்கம்.

இது சிறுமரவகுப்புக்குரியது. முள்ளுள்ள இலையுதிர் மரம், புளியமிலை போல சிறிய கூட்டிலைகள். காய்கள் உருண்டையாகவும் சதைப்பற்றாகவும் இருக்கும். இதன் இலை, காய், பட்டை என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. இதன் இலைச் சாற்றுக்குச் சமவளவு தேங்காய் எண்ணெயை கலந்து சொறி, சிரங்கு, புண்களில் பூசிவர அவை மாறும்.

காயின் தோலைக் குடிநீர் செய்து உட்சூட்டுக்குக் கொடுக்கலாம். பட்டைக் குடிநீரால் புண்களைக் கழுவிவர மாறும்.

## மாதுளை

**வேறு பெயர்:** மாதாளை, தாடிமம், மாதுளங்கம்
**தாவரவியற் பெயர்:** Punica granatum
(பியூனிக்கா கிரனேற்றம்)
**குடும்பம்:** Punicaceae (பியூனிக்கேசியே)
**சிங்களப் பெயர்:** தெலும்
**சமஸ்கிருதப் பெயர்:** தாடிம
**ஆங்கிலப் பெயர்:** Pomegranate

இலை, பிஞ்சு, பழம், விதை, பட்டை, வேர் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இதன் இளம் இலைகள் அல்லது பூவை ஊறவைத்த நீரினால் கண்களைக் கழுவிவர கண்ணோய், கண்பீளை சாறுதல் என்பன மாறும்.

பூச்சாறும், அறுகம்புல்லின் சாறும் சமவளவு கலந்து கொடுக்க மூக்கிலிருந்து நீர், குருதிவடிதல் நீங்கும்.



பிஞ்சு அல்லது பழக்கோதைக் குடிநீர் செய்து காலை, மாலை 15-30 மி.லீ அளவில் பருகிவர கழிச்சல், சீதபேதி, ஆசனக் கடுப்பு என்பன நீங்கும்.

மாதுளங்கோதை உலர்த்திப் பொடி செய்து தேனுடன் காலை, மாலை சாப்பிட்டுவர கழிச்சல், சீதபேதி, வயிற்றுளைவு என்பன நீங்கும்.

பழச்சாற்றைத் தனித்தாவது கற்கண்டு சேர்த்தாவது சிறிது சிறிதாகப் பருகிவர வாந்தி, நாச்சுவை யின்மை, ஓங்காளம் என்பன மாறும். கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் காலை வாந்திக்கும் இது மிகவும் நல்லது.


வேர்ப்பட்டையைக் குடிநீர் செய்து கொடுத்துவர குடற்புழுக்கள் வெளியாகும்.



(தொடரும்...)

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 157



அனுப்புவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1.விருப்பம்/பொருத்தம்
4.தப்பிதம்
7.நிலையம்/இடம்
8.முடிந்த பாடலின் கடைசிச் சொல் அடுத்த பாட்டின் முதலாய் வரும் பாடல் திரட்டு.
9.பெண்கள் விளையாடும் ஆட்டம்
11.மண்ணில் கிளம்பும் தூசு.
14.சுடுகலன்.
17. இந்தப் பறவை இரவில் பறக்கும்.
18.தைத்திருநாளில் நாம் வீட்டில் செய்வது
19.ரக
20.பறவை மாமிச பட்சினி.
21.சாப்பிடாது.
22.தமிழ் மாதங்களுள் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1.உரையாடல்
2.சிவப்பு நிறத்தை இப்படியும் அழைப்பர்
3.மொத்தம்
4.தாமதி
5.எந்நேரமும்
6.அசுவம்
8.மாலைவேளை
10.பிழைத்துப் போன நிலை
12.பொருத்தமான
13.வம்சம்
15.பள்ளிவாசலில் ஒலிப்பது
16.பலே பேர்வழியை இப்படியும் அழைப்பர்
17.வாயு நிலை
20. தூக்கத்தில் காண்பது

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 155 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)விவேகம் (4)அகதி (7)வாண்டு. (8)வாலிபன் (9)கடுக்காய். (11) களிப்பு. (14)வன். (15)பாலகன் (17)அடி. (18) ஓடும். (19)சதகம். (21)பதம் (23)தில்லை. (24)கல்லாமை.

### மேலிருந்து கீழ்

(1) விவாகம். (2)வேண்டு. (3)கடுக்கன். (4)அலி. (5)கபடி. (6)தின் (8)வாய்ப்பாடு. (10)காளி (12)புலம்பல். (13)சின்னம்மை. (14)வடிதல். (17) அசதி. (18)ஓம். (20)கலை. (22) தலா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 155 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — அ.கிறிஸ்ரினா, கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டை.

2 ஆம் பரிசு — செல்வன் ச.சாருஜன், ஆண்டு-3, சைவ சன்மார்க்க வித்தியாசாலை, ஏழாலை.

3 ஆம் பரிசு — ச.சிறீலதா, பாடசாலை வீதி, எழுதுமட்டுவாழ் தெற்கு.

4 ஆம் பரிசு — சி.பானுராஜா, அக்கராயன் த.க.பாடசாலை, கோணாவில், கிளிநொச்சி.

5 ஆம் பரிசு — சி.சிந்துஜா, 184,பிரதான வீதி, நெல்லியடி.

### பாராட்டுப் பெறுவோர்

**செல்வி ஸ்ரீ.துஷாரா,**
15/11 புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**சிவரம்யா, சிவநாதன்,**
24/4,1/1 பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-6

**ச.அட்சயா,**
யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.
தரம்-6'பி'

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ருபா 300/=, ருபா 250/=, ருபா 200/=, ருபா150/= ருபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 157**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 20.04.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.156 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 24.04.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# தமிழக முகாம்...

*(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

சென்னையில் பல பகுதிகளில் அதாவது மடிப்பாக்கம், விருகம்பாக்கம், வளசரபாக்கம், போரூர், திருவாண்மையூர், அண்ணாநகர், தாம்பரம் போன்ற பகுதிகளிலும் திருச்சியில் கே.கே.நகர் போன்ற பகுதிகளிலும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

அங்கிருந்தவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முகவரிடம் பணம் கொடுத்து போய்ச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள் போக முடியாமல் பெருந்தொகைப் பணத்தைப் பறிகொடுத்தவர்களும் இருக்கிறார்கள்.

வெளிநாடு செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டு சிறையிலும் பலர் இருக்கிறார்கள். வெளிநாட்டில் உற வினர்கள் உள்ளவர்கள் பணம் கொடுக்க பலர் பலசரக்குக் கடைகளை அமைத்தும், தொலைபேசி நிலையங்களை அமைத்தும், வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும். ஒளி அமைப்பு செய்தும் நகைக்கடைகள், தையல் கடைகள் போன்றவற்றை அமைத்து வாழ்க்கையை நகர்த்துகின்றனர்.

**புலிச்சாயம் பூசப்பட்டு சிறைகளில் உள்ளனர்**

விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத் தின் பெயரில் பலர் இன்னும் சிறைகளில் வாடுகின்றார்கள். கூடுதலானவர்கள் வேலூர் சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளனர்.

வருடக்கணக்கில் எந்தவித விசாரணைகளும் இன்றி வேலூர் சிறைகளில் அடைக்கப்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர்கள் எப்போது விடிவு கிடைக்கும் எனக் காத்துக் கிடக்கின்றார்கள்.

தமிழ்நாட்டு காவல் துறையினருக்கு பணத்தைக் காட்டினால் போதும். வாயைப் பிளந்து நிற்பார்கள் அந்தளவிற்கு லஞ்சம் அங்கு தாண்டவம் ஆடுகின்றது.

எந்தவித குற்றமும் செய்யாத வசதி படைக்காத ஈழத்தமிழர்கள் இவர் களால் நிறையத் தடவைகள் தண்ட னைக்கு ஆளாகி விடுகின்றார்கள்.

இராமேஸ்வரத்தில் உள்ள மண்டப முகாம், கும்முடிப் பூண்டி முகாம், சேலம் முகாம், மகா வல்லிபுரத்திலுள்ள முகாம், தட்டுவன் கொட்டி முகாம் மதுரையில் உள்ள முகாம் போன்ற முகாம்களில் பல வருடக் கணக்காக அடைப்பட்டுக் கிடக்கும் இலங்கைத் தமிழர்களைச் சொந்த இடங்களுக்குக் கொண்டு வர இந்திய அரசும், இலங்கை அரசு நடவடிக்கை எடுக்குமா?

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் நாட்டில் உள்ள அகதி முகாம்களில் வாழ்கின்ற னர்.

இந்த மக்கள் எப்பொழுது தமது சொந்த, ஊருக்குச் செல்வோம் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.பல அரசியல் தலை வர்களிடம் கடிதம் மூலம் தமது பிரச்சி னைகளை எழுதி அனுப்பியும் எந்த விதமான பதிலும் அவர்களுக்குக் கொடுக் கப்படவில்லை.

முதலமைச்சர் கருணாநிதிக்கு நிறையக் கடிதங்கள் அனுப்பியும் அவை எந்தவித பயனும் இல்லாமல் போய் விட்டதாகக் கூறுகின்றனர்.

எங்களை இலங்கைக்கு அனுப் பும்படி எல்லோருக்கும் கடிதம் போட் டும் வீண் விரையமான நாள்கள் எமது வாழ்வை மீட்டெடுக்க வழி அமைக்குமா? என முகாம் மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

# பள்ளிக்குப்.....

*(13 பக்கத் தொடர்ச்சி)*

அவன் சுமந்து சென்ற உரப்பையின் கனம் முதுகை உறுத்தியது. புத்தகப் பையைத் தூக்க வேண்டிய என் தோள்கள் இந்த உரப்பையைச் சுமக்க வேண்டியதன் நிர்ப்பந்தத்தை எண்ணி மனம் வருந்தினான். புத்தகப் பையுடன் செல்லும் மாணவர்களைப் பார்த்ததும் அவன் கண்கள் பனித்தது. நரேன் படிப்பில் கெட்டிக்காரன்தான். பரீட்சையில் தான் பெற்ற புள்ளிகளைப் பெற்றோரிடம் காட்டி அவன் பெருமைபட்டதில்லை. அதற்கு அவன் பெற்றோரும் இடம் தந்ததில்லை.

சிமெந்துக் கலவையை அள்ளிப் போட்டுக் குழைத்துக் கொண்டிருந்தான் நரேன். அடிக்கடி கைகாலை அலம்பிக் கொண்டான். அப்போது வேலு வரவே ''என்னவேலு இன்றைக்கு வரமாட்டியோ என நினைச்சேன் எங்க போனனி'' என்றான் நரேந்திரன்.

இல்ல அண்ண என்ர மகனைப் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு வாறன். ''என்ன உன்ர மகனையோ...?'' என நெற்றியைச் சுருக்கினான் தனேந்திரன் ''ஓம் அண்ணை, அவனை ஒரு நல்ல பள்ளிக்கூடமாகப் பார்த்துச் சேர்த்திருக்கிறேன். நான்தான் படிக்கவில்லை அப்படி இப்படி கஷ்டப்படுகிறேன். என் பிள்ளையாவது படிச்சு நல்ல நிலைக்கு வரவேண்டும். என்ஜினியர், டொக்டர் ஆகனும் என்று நான் ஆசைப்படவில்லை. ஏதோ நல்ல உத்தியோகம் பார்க்கின்ற அளவுக்குப் படிச்சால் போதும். கடன உடனபட்டுத்தான் அவனைச் சேர்த்திருக்கிறேன். அவன் நல்லாய்ப் படிப்பான். எனக்கு நம்பிக்கை இருக்கு அண்ணை...'' வேலு சொல்லிக் கொண்டே போனான்.

அப்போதுதான் தனேந்திரனுக்கு ஏதோ உறைத்தது. எவ்வளவு மடத்தனமாக இருந்திருக்கிறேன். ச்சீ... இந்த வேலுகிட்ட இருக்கிற மதிகூட என்னிடம் இல்லையே. அவனும் என்னை மாதிரி ஒரு சாதாரண தொழிலாளிதானே. நரேன் எத்தனை தடவை நான் படிக்க வேண்டும் எனக் கெஞ்சி இருக்கிறான். அதையெல்லாம் உதாசீனப்படுத்திட்டு எத்தனை தடவைகள் அவனை வேலைக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறேன் என வருந்தினான் தனேந்திரன்.

உடனே எழுந்த தனேந்திரன் சிமெந்துக் கலவையைக் குழைத்துக் கொண்டிருந்த நரேனின் கைகளைப் பிடித்து விறுவிறுவென கூட்டிச் சென்றான். அவன் மகனை எங்கே இழுத்துக் கொண்டு போறான் என்று அப்போது வந்த வீட்டு உரிமையாளர் சிதம்பரத்துக்குப் புரியவில்லை. ஆனால் உங்களுக்குப் புரிந்திருக்குமே?

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 14

# முதுமையின் இனிமை

இந்தப் பூவுலகில் வாழும் ஒவ்வோர் உயிருக்கும் தொடக்கம், முடிவு ஆகிய இரு செயற்பாடுகளும் உண்டு. அந்தவகையில் மனிதன் என்ற உயிரியும் அதற்கு விதிவிலக்கல்ல. கருவறையில் தொடங்கிய வாழ்க்கைப் பயணம் கல்லறை வரைக்கும் தொடர்க்கதையாகத் தொடர்கின்றது. கருவறைக்கும் கல்லறைக்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதன் பல வகையான கற்றல்கள் ஊடாக இன்பம், துன்பம் இரண்டையும் ப(ா)ல் வேறுபட்ட விகிதாசார அளவுகளில் அனுபவிக்கின்றான்.

மனிதனது வாழ்க்கையானது பல படி நிலைகளைக் கொண்டுள்ளது. அதன் ஒவ்வொரு கட்டத்திலும் பல வகையான வளர்ச்சிப் படிகளைக் கொண்டுள்ளான். இந்தவகையில் முதுமை என்பதும் மனிதனின் படி நிலைகளில் ஒன்றுதான் என்பதை நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய உலகின் உன்னத வளர்ச்சியின் பெருமைக்குரியவர்கள் இந்த முதியவர்கள். இவர்களின் கடந்த கால அனுபவங்களை இன்றைய இளைய தலைமுறையினர் கவனத்தில் எடுத்தல் மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். அத்துடன், முதியவர்கள் தங்கள் கடந்த கால அனுபவ உண்மைகளைத் தற்கால உலகின் யதார்த்தத்துடன் ஒப்பிட்டு அதற்கேற்ப அனுபவப் பகிர்வினை வழங்கி வழிகாட்டல் செய்தல் நன்று. இதன் மூலம் சந்ததி இடைவெளி அல்லது தலைமுறை இடைவெளி என்ற ஒன்றினால் ஏற்படும் மன உளைச்சல்கள் தவிர்க்கப் படுகின்றன.

கடந்த காலத்தில் இயந்திரத்துடன் இயந்திரமாகப் பயணித்த இன்றைய முதியோர், இன்று இயந்திரத் தன்மையற்று மனிதத்தன்மையுடைய மனிதனாகப் போதியளவு ஓய்வும் நித்திரையும் அமைதியும் உள்ள ஒரு பொற்காலத்தில் வாழ்க்கை நடத்துகின்றனர். ''அவசரக்காரனுக்குப் புத்தி மத்திமம்'' என்ற முதுமொழிக்கமைவாகக் கடந்த கால வாழ்வில் சில இடங்களில், சில தவறுகள் இடம்பெற்றிருப்பின் அவற்றைத் தற்கால சந்ததியினரும் விடாமல் இருப்பதற்கு நல்லமுறையில் அனுபவப் பகிர்வை வழங்குதல் மூலம் வழிகாட்டல்கள், ஆலோசனைகள் வழங்குவதினூடாக முதியோர் தமக்குள்ளே உள்ள சுமைகளை இறக்கி வைப்பதற்கும் ஓர் ஊடகமாக இதனைப் பயன்படுத்த வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இவ்வாறு முதியோர் திருத்தங்கள் பற்றிய சிந்தனையில் ஈடுபடல் அவர்களின் வாழ்வில் மன நிறைவுக்கும் திருப்திக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும். இன்றைய இளைய தலைமுறையினர் நாளைய முதியவர்கள் ஆவர். எனவே, அவர்கள் தங்கள் பிற்கால வாழ்வில் நன்நிலை வாழ்வு வாழவும் இக்கால முதியோர் வழியமைத்த பெருமைக்குரியவர்கள் ஆவர். இவ்வாறான நேற்றைய இளைஞனின் ஆலோசனைகளை இன்றைய இளைஞன் அனுசரித்தால் இன்றைய இளைஞன் மட்டுமல்ல, நாளைய இளைஞனும் அதனைச் செவிசாய்ப்பான் என்பது திண்ணம்.

க.சதாநந்தன்,
தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை.

### முதியோரின் மனமகிழ்ச்சியை வளர்க்க சில சிந்தனைத் துளிகள்

- தங்கள் வீடுகளில் சிறிய வீட்டுத்தோட்டங்கள், பூமரங்கள் வளர்த்தல்
- பேரப்பிள்ளைகளுடன் விளையாடுதல், அவர்களுக்குத் தங்களின் வாழ்வின் அனுபவத்தை வழங்குதல்
- வீட்டுப் பிராணிகள் வளர்த்தல்
- ஓய்வுபெற முன் பார்த்த தங்கள் தொழில் அனுபவங்களைத் தேவைப்படுவோருக்கு வீட்டில் இருந்தவாறே வழங்குதல்.
- சமூகத்தில், விழாக்களில் கலந்துகொள்ளுதல்.
- இறைவழிபாட்டில் ஈடுபடுதல், அவரவர் மதம் சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல்.
- சமூகசேவை சம்பந்தமான விடயங்களில் ஈடுபடல்.

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

# மருந்துகள் பாவிக்கும் பொழுது கவனிக்க வேண்டியவை

*நோயாளிகள் மருந்துகளை மருத்துவரின் பரிந்துரையின் படி எடுப்பதன் மூலமே முழுமையான குணப்படுத்தலைப் பெறமுடியும்.

மருந்துகளின் எண்ணிக்கையோ, மருந்துகள் எடுக்க வேண்டியதற்கு இடையிலான கால அளவையோ தமது விரும்பின் படி மாற்றக் கூடாது.

ஏனெனில், இவை இரண்டும் மருந்து இரத்தத்தில் நின்று செயற்படும் திறனை வைத்தே கணிக்கப்பட்டு வைத்தியரால் பரிந்துரைக்கப்படுகின்றன.

எனவே, இவற்றைக் குறைப்பதன் மூலம் செயற்திறன் குறைக்கப்பட்டு குணமடைதல் தாமதப் படுத்தப்படும்.

எனினும், இவற்றைக் கூட்டுவதன் மூலம் மருந்தின் செயற்திறனை அதிகரிக்க முடியாது. மாறாக, அது நச்சுத்தன்மைக்குச் சிறுநீரகப் பழுதடை தலுக்கும் வழிவகுக்கும்.

மருந்து ஒன்று காலையும் மாலையும் எனப் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், அந்த மருந்தானது குறித்தவொரு நேரத்திலேயே ஒவ்வொரு நாளும் எடுத்தல் வேண்டும்.

உதாரணம்: காலையும் மாலையும் 8 மணிக்கு உள் எடுக்கப்பட்டால் அடுத்துவரும் நாள்களிலும் 8 மணிக்கே உள் எடுக்கவேண்டும்.

சாப்பாட்டுக்கு முன்னால், பின்னால் என்ற கட்டளைகளும் கவனத்திற்குரியவை.

உதாரணம்: சாப்பாட்டுக்குப் பின்னால் எடுக்க வேண்டிய மருந்தை முன்னால் எடுத்துக்கொண்டால் குடற்புண் உருவாகும் வாய்ப்பு ஏற்படலாம்.

மருத்துவரின் அனுமதியின்றிப் பரிந்துரைக்கப் படாத வேறு மருந்துகளைச் சேர்த்து எடுக்கக்கூடாது. ஏனெனில், மருந்துகளிடையே இடைத்தாக்கம் ஏற்பட்டு மருந்துகளின் செயற்திறன் அற்றுப் போகலாம் அல்லது பாதக விளைவுகளை உருவாக்கலாம்.

வைத்தியர் பரிந்துரைத்த மருந்துகளில் ஒன்றை எடுக்காது தவிர்த்தலும் ஆபத்தானதே. ஏனெனில், தவிர்க்கப்படும் மருந்து எடுக்கப்படும் மருந்தொன்றுக்குரிய செயற்திறனுக்குத் தேவையானதாக இருக்கலாம்.

ரி.தமயந்தி,
மருத்துவ பீட மாணவி.

# மன அழுத்தத்துக்கான முகாமைத்துவம்


மன அழுத்தம் என்பது ஒரு நோயல்ல. சூழல் காரணிகளால் ஏற்படுவது. இதன்போது உடலுக்குத் தேவையான சக்தித் தொகுப்பு கூட்டப்படுகின்றது. இது உடற்றொழிலியல் எல்லையைத் தாண்டும் போது நோய்க்காரணியாக அமைகின்றது.

இதன்போது மூளையானது மன உளைச்சலிற்கான சில ஹோர்மோன்களை விடுவிப்பதன் மூலம் உடலின் சக்தித் தொகுப்பு அதிகரிக்கப்படுவதன் விளைவாகக் குருதிக் குளுக்கோஸ், இதயத்துடிப்பு வீதம், குருதியமுக்கம், தசைத் தொழிற்பாடு என்பன அதிகரிக்கப்படுகின்றன. இதனால் உயர்குருதியமுக்கம், சலரோகம், அல்சர் போன்ற நோய்த் தாக்கங்கள் மேலும் அதிகரிக்கப்படுகின்றன.

இதன் அறிகுறிகளாக: தலையிடி, வயிற்றுக் கோளாறு, நித்திரைக் குழப்பம், உயர்குருதி அமுக்கம், வாய் உலர்தல், அதிகரித்த தடவை சலம் வெளியேறல், கோபம், உடல்உளத் தாக்கங்கள், பாரிசவாதம் என்பன அடங்கும்.

முகாமைத்துவம்

மன அழுத்தம் அவதானிக்கப்படின் அதனைக் கவனிக்காமல் விடாது அதற்கான காரணத்தையும் அதற்கு உடல் எவ்வாறு பிரதிபலிக்கின்றது




என்பதையும் அதனை எவ்வாறு தவிர்க்கமுடியும் என்பதையும் அவதானிக்க வேண்டும்.

இதன்போது மிகவும் ஆறுதலாக ஆழமான பெருமூச்சு எடுத்து விடுவதன் மூலம் அதிகரிக்கும் இதயத் துடிப்பு, சுவாச வீதத்தைக் கட்டுப்படுத்தலாம்.

மனதுக்கு அமைதியாக யோகா, தியானம் போன்றவற்றில் ஈடுபடல், பிடித்த விளையாட்டுக்கள் விளையாடல், இதமான இசை ரசித்தல், சித்திரம் வரைதல், ஆன்மீகத் துறைகளில் ஈடுபடல் போன்றனவும் மிகவும் சிறந்தவை. போதிய அளவு நித்திரை அவசியம்

மன அழுத்தம் ஏற்படுத்துகின்ற காரணிகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் அல்லது அழுவதன் மூலமோ கோபத்தை வெளிக்காட்டுவதன் மூலமோ வெளிப்படுத்துதல் சிறந்தது.

நீண்டநேரம் ஈடுபடும் வேலைகளில் இடையிடையே இடைவேளை எடுத்துக் கொள்ளுதல், அந்த நேரங்களில் மன உளைச்சலை, களைப்பைப் போக்கும் வகையிலான செயல்களில் ஈடுபடல் சிறந்தது. அத்துடன், செய்யும் வேலைகளில் நிதானத்துடன் பதற்றமின்றி ஆறுதலாக இலகுவான முறையில் ஈடுபடுதலுடன் நேர அட்டவணையின் பிரகாரம் ஈடுபடுதலும் மிகவும் சிறந்தது.

மது அருந்துதல், புகைப்பிடித்தலைத் தவிர்த்துக் கொள்வதுவும் மன உளைச்சலைத் தவிர்ப்பதற்கான வழிகளில் ஒன்றாகும்.

எஸ்.சோபிகா
மருத்துவ பீட மாணவி

# மாறும் வாழ்வியலும் மறைந்து போகும் பொருள்களும்

மாற்றம் ஒன்றுதான் நிரந்தரமானது. உலகில் மனித வாழ்வியலும், மனிதன் பயன்படுத்தும் பொருள்களும் மாறி வருகின்றன.

விஞ்ஞானத்தின் விரைவான வளர்ச்சி மனித வாழ்வின் அனைத்துத் தளங்களையும் ஏதோவொரு வழியில் மாற்ற முறச் செய்கின்றது.

பல்லாயிரம் வருடம் காத்து வந்த பண்பாட்டு முறைகளிலும் மாற்றம் நிகழ்கின்றது.

தொழில்நுட்பம் வளர்ந்து வர மனிதனின் நேரம் மீதப்படுத்தப்படுகின்றது. அதேவேளை பாவனைப் பொருள்கள் சில மறைகின்றன. குறைந்த எண்ணிக்கையானோர் பயன்படுத்தும் பொருள்களாகின்றன.

சில தொழில் முறைகள், வாழ்வியல் பழக்க வழக்கங்கள் மாற்றமுறுகின்றன, அற்றுப் போகின்றன.

கடந்த 3 தசாப்தகால மாற்றங்களில் என்பட்டறிவுக்கு எட்டியவற்றை இங்கே பட்டியல் இட்டுள்ளேன்.

மழலைப் பருவம், மாணவர் பருவத்தில் இருந்து பயணத்தைத் தொடங்குவோம். மணலில் அ, ஆ... எழுதிப் பெற்றோர் பழக்கும்முறை காணாமல்போய்விட்டது. சிலேற்றில் தமிழ் எழுத்துக்களை, இலக்கங்களை எழுதிப் பழகும் முறை இப்போது இல்லை.

சிலேற் என்றால் என்னவென்று தெரியாத இளந் தலைமுறையும் வந்துவிட்டது.

சிறிய கண்ணாடிப் போத்தல் எடுத்து அதில் வேப்பமரப் பிசினை இட்டு மெல்லிய சுடுநீர் ஊற்றிக் கரைத்து பேப்பரை, மட்டைகளை ஒட்டும் முறையை இப்போது காண முடியாது.


கடைக்குச் சென்று கம், பயிண்டர்கம் போத்தல் வாங்கி வருகின்றனர்.

ஆனால் வேப்பம் பிசினின் உறுதி அதில் இல்லை.

கோதுமை மாவின் மீது வெந்நீர் ஊற்றிப் பசை உருவாக்கும் பழக்கமும் அருகி வருகின்றது.

ஊற்றுமைப் பேனா வாங்கி மைப்போத்தல் வாங்கி அதில் மை நிரப்பி அழகழகாக எழுதும்முறை முற்றாகவே அற்றுப் போய்விட்டது.

றிச்சோ வண்டியில் மனிதர்களை ஏற்றி மனிதன் இழுக்கும் முறை தற்போது இல்லை. ரக்சி, கார் பிடிப்போரும் மிகவும் குறைவு. ஆட்டோ, வான் என்பவை அந்த இடங்களைப் பிடித்துவிட்டன.



மாடு பூட்டிய மாட்டு வண்டிலும், கையால் இழுக்கும் வண்டிலும் மறைந்து போகிறன்றன. ரி.வியுடன் டெக்கை இணைத்து 'கொப்பி' போட்டுப் படம்பார்க்கும் பழக்கம் முற்றாகவே அற்றுப் போய்விட்டது.

தியேட்டர்களில் படம் பார்க்க முண்டியடித்த வாழ்க்கையும் குறைந்துவிட்டது.

ரேப் றெக்கோடரில் கசற் இணைத்துப் பாட்டுக்கேட்கும் முறையும் அற்றுப் போய் விட்டது எனலாம்.

வீட்டில் உறிகட்டி கறி, உணவு வைக்கும் பழக்கமும் மறைந்து வர, குளிர்சாதனப் பெட்டி அந்த இடத்தைப் பிடிக்கிறது.

மண்சட்டி, மண் பானையில் சமைக்கும் ஆரோக்கிய சமையல் முறையும் மிகப் பெருமளவில் குறைந்துவிட்டது. மூக்குப் பேணியில் தேநீர் அருந்திய காலமும் விடைபெற்றுவிட்டது.

மாநகரம், நகரங்களில் விறகடுப்பின் பாவனையும் வேகமாக வழக்கொழிந்து வருகின்றது.

காஸ் அடுப்பு இதன் இடத்தைப் பிடித்துவருகிறது. அம்மியில் அரைத்தல், ஆட்டுக்கல், திரிகைக்கல் என்பவற்றில் அரைத்தல், உரல், உலக்கை போன்றவையின் பாவனையும் வேக வேகமாக காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன.

கிறைண்டரும், அரைக்கும் ஆலைகளும் அவ்விடத்தைப் பிடிக்கின்றன.

பற்றரிபோட்டு றேடியோ கேட்கும் பழக்கமும் பெருமளவில் காணாமல் போய்விட்டது. கைத்தொலை பேசியிலேயே றேடியோ, கமெரா, வீடியோ, இசைப்பாடல்கள் கேட்கும் வசதி வந்துவிட்டது.

வானொலியில் மத்திய அலைவரிசை, சிற்றலை வரிசை மூலம் பாடல், செய்தி கேட்கும் முறையும் அற்றுப்போகின்றது.

பண்பலை (FM) மூலமாக சகலதும் துல்லியமாகக் கேட்கும் முறை வந்துள்ளது. கமெராவிற்கு பிலிம்றோல் போட்டுப் படம் எடுக்கும் முறை மறைந்தேவிட்டது.

டிஜிற்றல் கமெரா, கைத்தொலைபேசிக் கமெரா என்பவற்றில் மெமறி காட், சிம் மூலம் படம் எடுக்கும் முறையும் வந்துவிட்டது.

கமெரா பிளாஸ் லைற்றில் ஒருமுறை மட்டும் பாவித்து எறியும் பல்பும் பாவனையில் இல்லை. ஸ்ரூடியோ, கமெராக்காரனில் படம் எடுக்கத் தங்கியிருந்த முறையும் பெருமளவில் மாறிவிட்டது.

வீட்டு சிறிய நிகழ்வுகளைத் தாமே தமது கமெராவில் படமெடுக்கும் வழக்கம் பெருமளவில் வந்துவிட்டது.

மின்சாரமுள்ள இடங்களில் கைவிளக்கு, குப்பிவிளக்கு, ல்ாம்பு என்பவை பெற்ற இடத்தை சார்ஜர் லைற், கைத்தொலைபேசி மின் விளக்குகள் பெற்றுவிட்டன.

கையால் இலக்கத்தைச் சுழற்றித் தொடர்புகொள்ளும் தொலைபேசியை மியூசியத்தில்தான் பார்க்கமுடியும்.

தொலைபேசி, கைத் தொலைபேசி, ஈமெயில், இணையம் என்பவற்றின் தாராளப் புழக்கம் கடித எழுத்து மூலம் உறவாடும் பண்பையும் முத்திரை சேகரிக்கும் பழக்கத்தையும் காணாமல் போகச் செய்துவிட்டது.

கடைகளின் விளம்பரப் பலகை, சினிமாத் தியேட்டர், படக் கட்டவுட் இவற்றின் இடத்தை கண்ணீர் அஞ்சலி படம், நிகழ்வுகளின் படம் என்பன பிடித்துவிட்டன.

மனிதனின் ஓவியத் திறமை, கற்பனைத் திறமை என்பவற்றுக்கு இடமில்லாது போய் விட்டது.

வீடுகளில் நிகழும் மங்கல, அமங்லகல நிகழ்வுகளுக்கும், கிராமத்தின் நிகழ்வுகளிற்கும் பந்தல் அமைத்து கிடுகால் வேயும் பழக்கம் முற்றாகவே விடைபெற்றுவிட்டது.

தகரப்பந்தல் போடும் வழக்கம் சகல இடங்களிலும் வந்து விட்டது.

வீடுகளில், கோயில்களில் மங்கல நிகழ்வுகளை நடத்தும் பழக்கமும் வேகமாகக் குறைந்து மண்டபங்களில் அவற்றை நடத்தும் பழக்கம் மிகப் பெருமளவில் வந்து விட்டது.

இதற்கென அமைக்கப்பட்ட மண்டபங்களும் பரவலாக வந்து விட்டன.

மரண வீடுகளில் பாடை கட்டுதல், பறை மேளமடித்தல் என்பனவும் பெருமளவில் குறைவடைந்து அந்தியகால சேவைக் கார், பான்ட் அடித்தல் என்பன வந்துவிட்டன.

பணத்தின் பாவனையைப் பார்ப்போமாயின் ஒரு சதம் இரண்டு சதம், ஐந்துசதம், பத்துசதம், இருபத்தைந்து சதம், ஒரு ரூபாய்த் தாள், ஐந்து ரூபா தாள், பத்து ரூபாய்த் தாள் என்பன பாவனையிலிருந்து விரட்டப்பட்டுவிட்டன.

வங்கிக்கு நேரடியாகச் சென்று பணத்தை மீளப் பெற்ற முறையும் குறைவடைந்து தன்னியக்கப் பணப் பரிமாற்று இயந்திரம் மூலமாக நினைத்த நேரத்தில், நினைத்த நகரத்தில் மீளப் பெறும் முறை வந்துவிட்டது.

இணையத்தின் வழியாகச் செய்திகளைப் பார்க்கும் பழக்கமும் ஏற்பட்டுவருகின்றது.

அச்சுத்துறையில் பழைமையான இயந்திரங்கள், அச்சுக் கோர்க்கும் முறைகள் யாவுமே கைவிடப்பட்டு விட்டன. ஒவ்செற் புகுந்துவிட்டது.

விவசாயத்தில் துலாமிதித்து கிணற்று நீர் இறைத்தல், சூத்திரக் கிணறு என்பவை மறைந்து நீரிறைக்கும் இயந்திரம் வந்தது. அதுவும் தற்போது வேகவேகமாக விடைபெற மின்சாரம் மூலமாக நீரிறைக்கும் முறைகள் பெருகி வருகின்றன.

வயல்களில் நெல்லை அரிவிவெட்ட ஆள்கள் பயன் படுத்தும் நிலையும் மறைந்து இயந்திரங்கள் வந்துவிட்டன.

சூடடிக்க மாடுகள் பயுன்படுத்தப்பட்டமை போய் ட்ராக்டரர் வந்தது. அதுவும் மறைய ஆரம்பித்து இயந்திரங்கள் வந்துவிட்டன.

கள்ளுச் சீவும் தொழிலுக்கு இயந்திரங்கள் வராததால் உயிராபத்து நிறைந்த இந்தத் தொழிலில் இருந்து பெருமளவான தொழிலாளர்கள் விலகியுள்ளனர்.

அதேவேளை 'கள்ளுக்கான மதிப்பும் தரைப்பாதை திறப்புடன் உயர்ந்துவிட்டது.

கைத்தொழில் விற்பன்னர்களே இத்தொழிலில் இயந்திரப் பாவனையைக் கொண்டு வர முயல வேண்டும்.

அரச, தனியார் நிறுவனங்களில் த்ட்டச்சு இயந்திரங்களின் பாவனையும் கிட்டத்தட்ட ஒழிந்து போய்விட்டன.

கணினி அந்த இடத்தைப் பிடித்துவிட்டது.

பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்களில் சட்ட நடைமுறைகளின்படி தட்டச்சு இயந்திரம் இன்னமும் பாவனையிலுள்ளது. கருத்தரங்குகள், செயலமர்வுகள் யாவற்றிலும் சோக்கட்டி, கரும்பலகை, ஓவஹெறாட், புறொஜெக்ரர் (OHP) என்பவையும் பெருமளவில் விடைபெறத் தொடங்கி விட்டன.

பவர் பெயின்ட் மடிக்கணினி, கணினி போன்ற மிக நவீன கருவிகள் வந்துவிட்டன.

அழைப்பிதழ்கள், துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதற்கு அச்சுக்கூடம் போகும் பழக்கமும் குறைவடைந்து வருகின்றது. கணினியில் தட்டச்சு செய்து எடுத்து போட்டோ பிரதியாக்கி அவற்றை உருவாக்கும் நிகழ்வு பரவலாக நடைபெறுகின்றது.

காகிதப்பை, சிமெந்துபாக் என்பவற்றில் ஒட்டிய பாக் என்பவை பெருமளவில் வழக்கொழிந்து, சொப்பிங் பாக், பொலித்தீன் பைகள் அந்த இடத்தைப் பிடித்துவிட்டன.

கணினியில் FLOOP பாவிக்கும் வழக்கம் மறைந்து PEN DRIVE இடம்பிடித்தது.

சைக்கிளில் டைனமோ பூட்டி இரவில் லைற்போடும் முறை அருகிவிட்டது.

இவ்வாறாகப் பாவனையில் இருந்த பொருள் கள் யாவும் விட்டுச் செல்லாத நினைவுகளுடன்தான் இருக்கின்றன. இருப்பினும் எமது சந்ததியினர் இதுபற்றி எதையுமே அறியாதவர்களாகவே இருக்க வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

*

**வே. தபேந்திரன்**



# அநுராதபுரத்தில் வாடும் 55 பேருக்கு விடிவு எப்போது?

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுடன் ஒரு நேர்காணல்

கே: நீங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள அதேவேளையில், ஓர் ஊடகத்துறை சார்ந்தவராகவும் உள்ளீர்கள். அந்தவகையில் அனுராதபுரம், வவுனியா ஆகிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை நீங்கள் சந்தித்த போது உங்களிடம் ஏனைய அரசியல் வாதிகளைவிட வேறு பட்ட உணர்வுகள் தோன்றியிருக்கக் கூடும். அவை பற்றி நீங்கள் விளக்க முடியுமா?

ப: நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை விட - ஓர் ஊடகத்துறையைச் சேர்ந்தவன் என்பதை விட - நான் ஒரு மனிதனாக நின்று அனுபவித்த உணர்வுகளை உங்கள் முன் முதலில் வைக்க விரும்புகிறேன்.

நாங்கள் பெற்றோர், பிள்ளைகளுக்கிடையேயான பாசம், சகோரங்களுக்கிடையேயுள்ள பாசம் போன்ற குடும்ப உறவுகளாலும் சொந்த பந்தங்கள், அயல், நண்பர்கள், சடங்குகள் போன்ற சமூக உறவுகளாலும் பிணைக்கப்பட்டவர்கள்.

அதுமட்டுமன்றி, பிள்ளையைத் தொட்டிலில் போடுதல், தலை தொடல், பூப்பெய்திய பெண்களுக்குத் தலைக்குத் தண்ணி வார்த்தல், மணப் பெண்ணைத் தத்துக்கொடுத்தல், கைப்பிடித்தல், தாலி கட்டல், பிறந்த குழந்தைக்குத் துடக்குக் கழித்தல், கொள்ளி வைத்தல், எட்டுச் செலவு, அந்தியேட்டி செய்தல், திவசம் கொடுத்தல், பிதிர்க்கடன் நிறை வேற்றல் எனப் பாரம்பரிய சடங்குகள் எங்கள் பண்பாட்டுவேர்களில் பிரிக்க முடியாத அம்சங்கள்.

அந்தச் சிறைச்சாலை மதில்களும் இரும்புக் கதவுகளும் எமது இரத்தத்தில் ஊறிவிட்ட உறவுகளைப் பேணல், சடங்குகளைப் பேணல் போன்ற பண்பாட்டு அம்சங்களிலிருந்து அந்தக் கைதிகளைப் பிரித்துவிட்ட கொடுமையை நான் அங்கு உணர்ந்து கொண்டேன். எனக்கு அது ஒருபுறம் தாங்க முடியாத வேதனையையும் ஆட்சியாளர்கள் மீது எல்லையற்ற கோபத்தையும் ஏற்படுத்தியது. இப்படியான மரபுசார் நடவடிக்கைகளிலிருந்து பிரிக்கப்படுதல் எவ்வளவு தூரம் அவர்களுக்கு மன அழுத்தத்தையும் வேதனையையும் ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஒரு மனிதனாக அங்கு என்னால் இவைகளை உணரமுடிந்தது. அதே வேளையில், ஓர் ஊடகத்துறை சார்ந்தவனாக இப்படியான அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும் ஓர் இனத்தின் தனித்துவத்தையே அவர்களுக்கு மறுக்கும் கொடுமையையும் உலகின் முன் அம்பலப்படுத்து வது என முடிவு செய்தேன். இன்னொருபுறம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குள்ள அதிகாரங்களையும் உரிமைகளையும் பாவித்து அவர்களின் விடுதலைக்கும் விமோசனத்துக்கும் முனைப்புடன் செயற்படுவது எனவும் உறுதி பூண்டேன்.

கே: எல்லோரும் இந்தக் கைதிகள் சமூகத்திலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதைத்தான் பார்ப்பார்கள். நீங்கள் மேலும் ஆழமாக எமது இனத்தின் மரபுசார் அம்சங்களிலிருந்தும் கூட பிரிக்கப்பட்டிருக்கும் கொடுமைகளையும் அதனால் ஏற்படும் மனத் தாக்கங்களையும் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் அவர்களைச் சந்தித்தபோது அவர்களின் உணர்வுகள் எப்படி இருந்தன?

ப: முதல் முதலில் அவர்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் நான் என்ற வகையில் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தனர். அந்தச் சந்திப்பு அவர்கள் தங்கள் துயரங்களைத் தற்காலிகமாக மறந்து கொஞ்சநேரம் சந்தோஷமாக இருக்கக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம் என நினைப்பது போலவே எனக்குத் தோன்றியது. அவர்கள் தங்கள் மன உணர்வுகளையும் பிரச்சினைகளை யும் என்னிடம் மனம்விட்டுப் பேசினர்.

1500 சிங்களக் கைதிகள் மத்தியில் - அதிலும் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, போதைவஸ்துக் குற்றங்கள் போன்ற கொடிய குற்றங்களின் பேரில் தடுத்து வைக்கப் பட்டவர்கள் மத்தியில் - சிங் களம் தெரியாத 55 தமிழ்க் கைதிகள் இருப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகி றேன். ஒவ்வொரு கூண்டிலும் ஐந்து பேர் வீதம் பதினொரு கூடுகளில் இவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சட்ட உதவிகள் கூட வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்கப்பட்டாலும் சிங்கள மொழி பேசும் சட்டத்தரணிகளே ஏற்பாடு செய்யப்படுகின்றனர்.

ஒரு பக்கம் இவர்கள் சொல்வதை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாது. மற்றது அவர்கள் இனவாதிகளாக இருந்து விட்டால் விளைவுகள் வேறு விதமாக மாறிவிடும் என்ற அச்சம் கைதிகளிடம் உண்டு.

கே: இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண முடியும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: அவர்களே அதன் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்தார்கள். நான் அதை நிறைவேற்றுவது தொடர்பாக முயற்சிப்பதாக வாக்களித்துள்ளேன்.

கே: ஒரு தீர்வுத் திட்டத்தை அவர்களே முன் வைப்பது அனுபவபூர்வமானதும் ஆக்கபூர்வமானதாகவும் அமைய வாய்ப்புக்கள் உண்டு. அவர்கள் எப்படியான தீர்வை முன் வைத்தனர்?

ப: அவர்கள் தங்களைத் தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிறைகளுக்கு மாற்றும்படி கேட்டார்கள். அது தங்களைச் சந்திக்க வரும் உறவினர்களின் சிரமங்களைக் குறைக்கும் எனவும் மொழி தெரியாதமையால் தமக்கு ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கும் எனவும் தெரிவித்தனர். மேலும் அது தமக்கு வசதியான தமிழ் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்யவும் வசதியாயிருக்கும் எனவும் தெரிவித்தனர்.

பல வழக்குகள் சாட்சிகள் ஒழுங்காக வராமையால் இழுபடும் நிலையில் உள்ளன. வழக்குகள் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்றப்படும்போது இப்பிரச்சினையும் தீர்க்கப்பட்டுவிடும்.

கே: இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளீர்கள்?

ப: இதுபற்றி நான் சட்டமா அதிபருடனும் நீதி அமைச்சருடனும் ஆக்கபூர்வமான பேச்சுகளில் ஈடுபடவுள்ளேன்.

கே: ஏற்கனவே இப்படியான கோரிக்கைகளை முன்வைத்து வெலிக்கடை, மகசின், களுத்துறைபோன்ற சிறைகளில் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்தினர். அப்போதெல்லாம் பல அரசியல்வாதிகள் அங்கு சென்று பல வாக்குறுதிகளை வழங்கினர். இதுவரை அவை எவையும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லையே...?

ப: உண்மைதான்! அதற்காக நாம் முயற்சிக்காமல் இருக்க முடியாதல்லவா? இனவாதம் மேலோங்கியிருக்கும் இந் நாள்களில் ஒவ்வொரு விடயத்தையும் பலத்த சிரமங்கள் மத்தியிலேயே நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஆனால், நான் தனிப்பட்ட முறையில் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு முயற்சிக்கும் அதேவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே இடம்பெறும் பேச்சுக்களின் போதும் இப்பிரச்சினைகளை முன்வைப்பேன்.

தற்போது நீதியமைச்சராக இருப்பவர் ஒரு சிறுபான்மைச் சமூகத்தவர் என்ற வகையில் எமக்கு சில வாய்ப்புகள் ஏற்படக் கூடும் என நினைக்கிறேன்.

கே: இலங்கையின் பல சிறைகளிலும் விசாரணைகளே இன்றிப் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அனுராதபுரம் சிறையில் இப்படியானவர்கள் இருக்கிறார்களா? இருந்தால் அவர்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

ப: ஆம். இங்கும் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் 8 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரின் பொறுப்பற்றதனம், சட்டமா அதிபர் திணைக்களத்தினரின் அசிரத்தை என்பன எத்தனையோ பேரின் வாழ்க்கையையும் பொது நீதியையும், மனித நேயங்களையும் பாழடித்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றைப் பார்க்கும்போது ருஷ்ய எழுத்தாளர் டான்ஸிடாய் அவர்களின் புத்துயிர்ப்பு நாவல்தான் நினைவுக்கு வரும். நீதிபதி தன் மனைவியுடன் ஏற்பட்ட கோபத்துடன் வந்து கதாநாயகருக்கு ஒரு சிறிய குற்றத்துக்கு கடும் தண்டனை விதிக்கிறார். சிறைச்சாலை அதிகாரிகளின் பொறுப்பின்மை காரணமாக அவர் பற்றிய கோவைகள் தொலைந்துவிட அவன் தண்டனைக்காலம் முடிந்து பல காலமாகியும் சிறையில் வாடுகிறான். அது கொடுங்கோலன் ஜார் சக்கரவர்த்தியின் காலம். ஆனால், எமது நாட்டிலும் ஜனநாயகத்தின் பேரால் அதே நிலைமைதான் நிலவுகிறது. எப்படியிருப்பினும் நான் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளேன்.

கே: அவர்களின் மனநிலை எப்படி இருக்கிறது?

ப: அடைக்கப்பட்ட கதவுகளின் பின்னால் ஒரு கூண்டுக்குள் ஐந்து பேர் மாறி மாறி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்? தங்களுக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் கூடக் கிடைப்பதில்லை என என்னிடம் முறையிட்டனர். உடனடியாகவே நான் அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருடன் கதைத்து தமிழ்ப் பத்திரிகைகள் கிடைக்க ஏற்பாடு செய்தேன்.

ஒரு கைதியின் தாய் சுகவீன முற்றிருப்பதாக முதல்நாள் அறிவித்தல் கிடைத்ததாம். அவர் தாயைப் பார்க்கப்போக அனுமதிகோரினாராம். ஆனால், அடுத்த நாளே தாயார் இறந்துவிட்ட செய்தி கிடைத்ததாம். இதைக் கண்ணீமல்க என்னிடம் கூறினார்.

இவர்களில் ஒருவர் ஆயுள் தண்டனைக் கைதி. அவர் இன்னொரு பெண் கைதியை சிறையிலேயே திருமணம் செய்தாராம். இப்போது இருவரும் வெவ்வேறு சிறைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்களாம்.

கே: அதாவது தாய் - பிள்ளைப் பாசம், கணவன் - மனைவி உறவு போன்ற இயல்பான மனித உணர்வுகள் கூட நசுக்கப் படுகின்றன. இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல் அல்லவா...?

ப: உண்மைதான். ஆனால், இந்தக் கொடுமைகளைச் சட்ட பூர்வமாக நியாயப்படுத்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசர காலச் சட்டம் என்பன துணை நிற்கின்றன.

கே: அப்படியானால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவு வழங்குகின்றனரே?

ப: அவர்கள் தெரிவு செய்யப்பட்டமை தமிழ் மக்களால் என்பது உண்மைதான். ஆனால், அவர்கள் பதவி வகிப்பது, அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தவே.

**இந்திரன்**

அவர்கள் நினைத்தால் அமைச்சரவையிலோ, நாடாளுமன்றக் குழுவிலோ வாதாடி இந்தக் கைதிகளின் விடுதலைக்கு வழி வகுத்திருக்கலாம். ஆனால், அவர்களுக்கு அதற்கான மனமும் இல்லை. அதற்கான துணிவும் இல்லை.

அந்தக் கைதிகள் என்னிடம் இராணுவத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தி நேரடியாகப் போரிட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் முதலமைச்சராகவும் அமைச்சராகவும் இருக்கும்போது சிறு குற்றச் சாட்டுக்களின்பேரில் நாங்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை எந்த வகையில் நியாயம் என்று கேட்டனர்.

ஓர் இளைஞர் தான் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தால்2வருடம் சிறைத் தண்டனையை முடித்து வெளியேறியிருக்கலாம் எனவும் குற்றத்தை ஏற்க மறுத்தமையால் நான்கு வருடங்களாகத் தடுப்பில் இருக்கின்றார் எனவும் தெரிவித்தார். இதுதான் அங்கு நிலவும் யதார்த்தம்.

கே: வவுனியா சிறைச்சாலைக் கைதிகளுடனான சந்திப்புப் பற்றி...?

ப: அவர்களுக்கும் இதே பிரச்சினைகள் அத்தனையும் உண்டு. மேலதிகமாக அவர்கள் தண்ணீர்ப் பிரச்சினை பற்றிக் கூறினார்கள். இதுபற்றிச் சிறைச்சாலை அத்தியட்சகருடன் கதைத்தபோது, அங்கு ஒரு குழாய்க்கிணறு அமைக்க நிதி இல்லையெனத் தெரிவித்தார். நான் சில நலன் விரும்பிகளின்உதவியுடன்அந்நிதியை நானே பெற்றுத் தருவதாகக் கூறியுள்ளேன்.

கே: இந்தச் சந்திப்புத் தொடர்பாக இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: இதுவரை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை பற்றி அறிந்தோம். ஆனால், அவர்கள் மனங்கள் சிறைப்பட்டு காயப்பட்டு குருதி ஒழுகுவதை அங்கு சென்ற பின்பு தான் என்னால் அறிய முடிந்தது.

அவர்களின் விடிவுக்கு முழுமூச்சுடன் ஈடுபட வேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு உண்டு என்பது எமக்கு ஆணித்தரமாகவே உணர்த்தப்பட்டுள்ளது.

*

**UK செல்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் (IELTS இன்றி)**

UK இல் கல்விகற்க விரும்பும் மாணவர்களுக்கு IELTS இன்றி UK க்கு செல்வதற்கான இறுதிச்சந்தர்ப்பம் வரும் 21.04.2011 உடன் முடிவடைகின்றது.

ஆகவே IELTS இன்றி UK செல்லவிரும்பும் மாணவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

**Call - 077 4939756**

ATA ASPIRATIONS (PVT.) LTD.
No. 33 1/1, Sri Maha Bhodi Road, Dehiwala, Colombo. Tel: 011 720 7989
E-mail: emilton@ataeducon.com

## சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை, சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-78)

* * *

பருத்தித்துறை மாதனை ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து விசேட சங்காபிஷேகமும் இடம்பெறும். (ம-78)

* * *

கலைநகர், சித்தங்கேணி, கம்பம்புலோ சாமுண்டி சமேத ஆதி வைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. திருவிழாக் காலங்களில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று வைரவப் பெருமான் வீதியுலா வருவார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (204)

**அலை ஓசை**
**IMMEDIATE VACANCY**
**CLIENT SERVICE**

கல்வித்தகைமை G.C.E. A/L
வயது 18 - 30 years
ஓரளவு ஆங்கிலம் பேசக்கூடிய ஆற்றல்
Marketing Experience மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

16.04.2011 ற்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.
பதிவுகளுக்கு - 077 4939756

ATA ASPIRATIONS (PVT.) LTD.
No. 33 1/1, Sri Maha Bhodi Road,
Dehiwala, Colombo. Tel: 011 720 7989
E-mail: emilton@ataeducon.com

**முதல் மாதத்திற்கு வட்டி இல்லாத**

NDB நன்மை
அடகுச் சேவை

*6 மாதங்களுக்கு மேற்பட்ட அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு, இரண்டாம் மாதத்திலிருந்தே வட்டி அறவிடப்படும்.




22 கரட்
ரூ. 34,150/-
24 கரட்
ரூ. 37,250/-

இன்றே அருகிலுள்ள NDB வங்கிக்கு வாருங்கள்.
அழையுங்கள் 011 2 44 88 88

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

**BODY TONE**
19 அமினோ அமிலங்கள் அடங்கிய புரதச்சத்து வில்லைகள்
பொடி டோன்

எல்லா விளையாட்டு வீரர்களுக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுபவர்களுக்கும், கடினஉழைப்பாளிகளுக்கும் சோர்வையும்,களைப்பையும்போக்கி உடல் தைரியத்தையும்,பலத்தையும் புத்துணர்வையும் மேலதிக சக்தியையும் கிடகாத்திரத்தையும் சுறுசுறுப்பையும் தரவல்லது




15 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்கு நாள் ஒன்றுக்கு ஒரு வில்லைவீதம் காலையும் இரவும் சாப்பட்டிற்கு முன்னர் எடுக்கவும் நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு வில்லை வீதம் எடுக்கலாம்*

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள WESCO PHARMACY
284 HOSPITAL ROAD.
Cargills Food City,Super Market மற்றும் Pharmacy களில் கிடைக்கும்
ஏக இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்
K.S.P.international Pharmacy
No-L4 1st Foloor, Central Bus Stand
Colombo-06

**Sales Executive - Lubricants**

McLarens Lubricants Limited is the local distributor of ExxonMobil Corporation, USA; Oil and Gas giant in the world. As one of the major players in the Sri Lankan Lubricants market, McLarens Lubricants Ltd is in pursuit for result-driven, dynamic professionals to step in as Sales Executives for Northern Province.

Ideal Candidate should,

- Have a professional qualification in sales & marketing
- Have excellent customer relationship skills
- Be below 35 years of age

Previous experience in lubricants sales sector will be an added advantage

McLarens Lubricants offers an attractive remuneration package and challenging career opportunities.

Please send in your CV within 7 days of this advertisement to:

E-mail – vacancies@mclarens.lk
Website - www.mclarensgroup.lk
Apply online - www.topjobs.lk/mclarens

Manager - Human Resources
McLarens Lubricants Limited
284 Vauxhall Street
Colombo 2.

**Studying in UK**
World Class Education at an Affordable Cost
Admissions for May | June | July 2011 Intakes

Our Partner Colleges
- Green Wich School of Management London
- British Institute of Technology & E- Commerce
- College of Technology London
- Guildhall College
- E College London
- City of London Academy
- Oxford College International
- 360 GSP College
- SDS College London
- Scott's College London
- Winston College






IELTS* is not mandatory
* terms and conditions apply

For More Details :
IES, 479-1/1, Galle Road,
Colombo 06.
T : 0114 378 835 / 0115 766 722
M : 0773 691 913 / E-mail : subitha@ies.lk
Web : www.ies.lk

London Office :
165B, High Street,
Eastham, London E6 1JB

Hotline :
0773 691913
தமிழ் - සිංහල - English



ஓம் சக்தி
இரணைமடு திருவருள்மிகு
**கனகாம்பிகை அம்பாள்**
**பெருங்கோயில் ஆண்டுச் சித்திரா பௌர்ணமி பொங்கல்**

அம்பிகை அடியார்களே!

நிகழும் கர வருஷம் சித்திரைத் திங்கள் நாலாம் நாள் (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை சித்திரை முழுமதி நாளில் மாலை 4 மணிக்கு அன்னையின் தீர்த்தத் தடாகமாகிய இரணைமடு வாவியில் கும்ப தீர்த்தமெடுத்து அன்னையின் பாதார விந்தத் தில் ஊற்றுகின்ற வைபவமும் வளந்துப் பானைகள் வைத்து பொங்குகின்ற நிகழ்வும் இடம்பெற திருவருள் கூடியுள்ளது. அன்று காலை தொடக்கம் இரவு 10 மணிவரை அடியார்கள் தங்கள் நேர்த்திக் கடன்களைப் பூர்த்திசெய்து கொள்ளலாம்.

**குறிப்பு:** ஆலய வீதியில் வியாபாரம் செய்ய விரும்புவோர் அறங்காவலர் சபையுடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். (39-27)

Website:-www.srikanakampikai.com **அறங்காவலர் சபை.**

# இலங்கையின் வாக்குறுதிகளை நினைவுறுத்தும் விக்கிலீக்ஸ்

**டெய்லிமிரர் பத்திரிகையில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியிருந்த கட்டுரையின் தமிழாக்கம்**

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் றொபேர்ட் ஓபிளேக்குடன் உலகத்தமிழர் பேரவை மற்றும் பிரிட்டிஷ் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடியிருக்கிறார்கள் என்ற செய்தி இலங்கை அரசைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது என்பதாக ஊடக செய்திகளில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இதற்குப் பிரதான காரணம் என்னவென்றால் இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையை வெளியிடப் போகின்ற காலகட்டத்தில் இவ்வாறான சந்திப்பு ஒன்று நிகழ்ந்திருப்பதாகும்.

உலகத் தமிழர் பேரவையின் தலைவர்கள் றொபேர்ட் ஓபிளேக்கைச் சந்திப்பதற்கு முன்பாக லண்டனில் இந்தியத் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்து உரையாடியிருந்தார்கள் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தச் சந்திப்பின்போது உலகத் தமிழர் பேரவையின் தலைவர்கள் சோனியா காந்தியிடம் முக்கியமான ஒரு விடயத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அதாவது, இலங்கை மீதான போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச புலனாய்வுகளைத் தடுக்க வேண்டாம் என்பதே அந்தக் கோரிக்கையாகும்

### இந்தியா என்ன செய்யும்?

இந்தப் புலனாய்வுகளை இந்தியா விரும்புமானால் தடுப்பதற்குப் பலவித உபாயங்கள் அதனிடமிருக்கின்றன. அதில் ஒன்று என்னவென்றால் போர்க் குற்றப் புலனாய்வுகளை மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் மீது நெருக்குதல் மேற்கொள்வதற்கான இரகசிய ராஜதந்திரத்தைப் பிரயோகிப்பதாகும்.

இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கான தீர்மானம் ஒன்று பாதுகாப்புச் சபையில் அல்லது மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்படும்போது இந்தியா தன்முனைப்பாகத் தலையிட்டு அதனை முறியடிப்பது இன்னோர் உபாயமாகும்.

அவ்வாறான ஒரு புலனாய்வு இடம்பெறுவதற்கு இடையூறாக நிற்கவேண்டாம் என்றே உலகத்தமிழர் பேரவை சோனியா காந்தியைக் குறிப்பாகக் கேட்டுக் கொண்டுள்ளது. இலங்கை மீதான போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை ஆதரிப்பதில்லையென்பது இந்தியாவின் கொள்கைத் தீர்மானமாக இருக்கும் பட்சத்தில் இந்தியாவை மௌனம் காக்கும் படியாக உலகத் தமிழர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், இந்தக் கோரிக்கைக்கு சோனியா காந்தி எவ்விதமாகப் பதிலளித்தார் என்பது தெரியாமலிருக்கிறது.

எவ்வாறாயினும், உலகத் தமிழர் பேரவையைப் பொறுத்தவரை சோனியா காந்தியுடனான தங்கள் சந்திப்பு வெற்றியளித்துள்ளது என்பதே அவர்கள் நிலைப்பாடு. அந்தக் கூட்டத்தில், இலங்கையில் காணப்படுகின்ற நிலைமை கவலையளிப்பதாகவிருக்கின்றது என்று சோனியா காந்தி தெரிவித்திருக்கிறார். சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள நிலைமை தொடர்பான ஆதாரங்கள் குறித்து சோனியா காந்தி தெரிவிக்கையில், ''அந்த வீடியோப் படங்களை நானே பார்த்திருக்கின்றேன். நாம் மிகுந்த கவலை கொண்டிருக்கிறோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சோனியா காந்தியுடன் உலகத்தமிழர் பேரவை சந்திப்பு மேற்கொண்டமை தொடர்பாக இலங்கை அரசு தனது கவனத்தைச் செலுத்தியிருக்கிறதா என்பது தெரியவரவில்லை. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்கு இந்தியாவுக்குச் சென்ற போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தாரா என்பதும் கூட வெளிப்படையாக வில்லை. தமிழ்நாடு மாநில சட்ட சபைக்கான தேர்தல்கள் நடைபெறவிருக்கும் தறுவாயில் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையும் வெளியாகவிருப்பது இலங்கை அரசின் கவலைகளையும் அச்சங்களையும் மோசமடையச் செய்துள்ளது. இந்திய மாநிலங்களின் சட்ட சபைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் சமயத்தில் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாக விருக்கின்றது. இந்திய எதிர்க் கட்சிகள் சோனியா காந்தி இலங்கையில் போர் தொடர்வதற்கு ஆதரித்த நிலைப்பாட்டுக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

இலங்கை போர்க் குற்றங்கள் தொடர்பான நிபுணர் குழு அறிக்கையானது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென சிபாரிசு செய்யும் பட்சத்தில் இந்திய அரசு எடுக்கப்போகும் கொள்கைத் தீர்மானம் தமிழ்நாடு மாநில சட்ட சபைத் தேர்தலில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்துவது திண்ணம். தமிழ்நாடு தேர்தலை மனதில் வைத்துக் கொண்டுதான் இலங்கைத் தமிழர்களோடு நிற்பதாக லண்டனில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர்களிடம் சோனியா காந்தி கூறியிருகக்கூடும்.

### இந்து பத்திரிகை வெளியிட்ட விடயம்

சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசியதற்குப் பின்னர் உலகத்தமிழர் பேரவை மற்றும் பிரிட்டிஷ் தமிழர் பேரவையின் தலைவர்கள் அமெரிக்க உதவி அமைச்சர் பிளேக்கைச் சந்தித்திருந்த அதேவேளையில் விக்கிலீக்ஸ் செய்திகளைப் பின்புலமாகக் கொண்டு இந்து பத்திரிகை சில விடயங்களை அம்பலப்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய சர்வதேச சங்கிலித் தொடரைச் சிதைத்து அழித்துவிடும் செயற்பாடொன்றில் இந்தியாவின் ஆதரவுடன் அமெரிக்கா ஈடுபட்டிருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டிருந் தது.

விக்கி லீக்ஸ் தகவல்களின்படி இலங்கையில் 2006 ஆம் ஆண்டு போர் ஆரம்பமான போது அமெரிக்கா இந்த நடவடிக்கையில் இறங்கியதாக இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு இந்தியா தனது அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. இந்து பத்திரிகை தனது அறிக்கையில் தெரிவித்திருந்ததாவது:

புலிகளின் நிதிசேகரிப்பு மற்றும் ஆயுதக் கொள்வனவுகளைக் கண்காணிப்பதற்காக இரண்டு சர்வதேச தொடர்பு குழுக்கள் நிறுவப்பட்டிருந்தன. அமெரிக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை அமைப்பினால் புலிகளின் நிதி சேகரிப்பையும் ஆயுதக் கொள்வனவையும் கட்டுப்படுத்துவதற்காக இவை உருவாக்கப்பட்டிருந்தன. இலங்கையில் செயற்பட்டு வந்த பலவீனமான போர் நிறுத்தம் முறிந்து முழு அளவில் போர் தொடங்கிய சமயமான 2006 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இது ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காதான் இதனை வெளிப்படுத்தி சர்வதேச தொடர்புக் குழுக்களை அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தியது. இதில் புலிகள் நிதி சேகரிப்பதற்கும் ஆயுதம் கொள்வனவு செய்வதற்கும் எதிராக ஒவ்வொன்றாக நிறுவப்பட்டன.

### இலங்கைக்கு நினைவூட்டுவதற்கு

இப்படியான ஒரு கால கட்டத்தில் விக்கிலீக்ஸ் தகவல்களை இந்து பத்திரிகை வெளியிட்டமைக்கு ஒருவேளை அமெரிக்காவும் இந்தியாவும் தான் தமிழ்ப் புலிகளின் பயங்கரவாதத்தை அழித்தொழிப்பதற்குப் பெருமளவில் உதவி புரிந்திருந்தன என்பதை இலங்கை அரசுக்கு நினைவுபடுத்துவதற்காக இருக்கலாம். அமெரிக்காவும் இந்தியாவும் உதவி புரிந்திருக்காவிடில் இலங்கையில் புலிகளை அழித்தொழித்திருக்க முடியாது .என்பதை வெளிப்படுத்துவதற்காகவும் இருக்கலாம்.

**தமிழில்: ரம்யன்**

அதுபோலவே அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கைக்கு ஆதரவளித்தமைக்குத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதாக வாக்களித்திருந்தமையை நினைவுறுத்துவதற்காகவும் இவை வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம்.

எனவே இவையெல்லாம், இலங்கை அரசானது முன்பு வாக்களித்திருந்தது போன்று இன்னமும் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். அதுமட்டுமல்ல, சர்வதேச போர்க் குற்றங்களுக்கான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று புலம் பெயர் புலி ஆதரவாளர்கள் விடுக்கும் கோரிக்கை நியாயமானதே என்பதற்கு இது இடமளிப்பதாகவும் இருந்துவிடலாம்.

எதுவானாலும் றொபேர்ட் பிளேக் இலங்கைக்கு வரப் போகின்றார்.

இலங்கைக்கு அமெரிக்கா கடுந்தொனியில் செய்தி எதனையும் விடுக்குமானால் அவரது வருகைக்குப் பின்னரே அது வெளிச்சமாகும்.

# நல்லை நகரில் ஓர் பல்கலைக்கழகம்

**நல்லை ஆதீன முதலாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூஜைத் தினம் இன்று**



''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தகர்
நிலமிசை நீடு வாழ்வார்''
என்பது வள்ளுவர் வாய் மொழி.

மனத்துக்கண் மாசிலனாகி, மண்ணில் மக்கள் யாவரும் சிறப்புடன் வாழ நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம் அமைத்து ஆன்மிக எழுச்சிக்காக அல்லும் பகலும் அருந் தொண்டாற்றிய அருளாளர் நல்லை ஆதீனக் குரு முதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள்.

இறைவன் அளித்த பூர்வ ஜென்ம பலனால் வண்ணையில் அவதரித்து இளவயதிலேயே சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய கலைகளைப் பயின்று சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, வித்துவ சிரோன்மணி கணேசையர், காசிவாசி செந்திநாதையர் ஆகியோரிடம் பாடங் கேட்டுத் தனது திறமையில் முன்னுக்கு வந்த உதாரண புருஷர். பிரமச்சரியம், இல்லாச்சிரமம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பவற்றை அனுபவத்தினால் உணர்ந்து வாழ்ந்தவர். அவரது வாழ்வு எமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக அமைவதைக் காணலாம்.

திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு, எண்ணியது முடித்தல், நல்லன எண்ணுதல் இவையே அவரது வாழ்வின் ஆதாரமாக அமைந்தன.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்னும் தாரக மந்திரத்துடன் சைவமக்கள் வாழ்வில் கலை, கலாசாரம், பண்பாடு, சமுதாய ஒற்றுமை, ஆன்மீக ஒற்றுமை ஏற்படவேண்டுமென்ற சிந்தனையுடன் இருந்தவர். தனித்துவமாகத் தொண்டையின் மூலம் பிரசங்கமாகிய தொண்டினை தமிழ் மக்கள் மத்தியில் செய்து சேவையாற்றிய சுவாமிகள் 1966 ஆம் ஆண்டு ஆடிக் கார்த்திகை நாள் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனகுருமஹா சன்னிதானத்திடம் காஷாயம் பெற்று துறவறம் பூண்டார். அவரது ஆணையின்படி ஆவணி 6 ஆம் நாள் நாவலர் பிறந்த மண்ணில் நல்லை முருகன் ஆலயச் சூழலில் செந்தமிழ் பாடிய சம்பந்தர் ஆதீனத்தைச் சிறப்புற ஆரம்பித்தார். அந்த ஸ்தாபனம் மூலம் சுவாமிகள் தனது பணிகளை விஸ்தரித்தார். ஆலயங்கள் மூலம் கதாப்பிரசங்கக் கலை மூலம் சைவத்தமிழ் வளர்த்தார்.

ஆதீனத்தில் சமய தீட்சைகள், பண்ணிசைவகுப்புகள், யோகாசன வகுப்புகள், திருநெறிய தெய்வீக மாநாடுகள், கலை நிகழ்வுகள், குருபூசை நிகழ்வுகள் ஆகியவற்றை நடத்தி சமய மறுமலர்ச்சி தந்த பெரியாராக விளங்கினார்.

ஈழநாட்டின் பலவேறு பாகங்களில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சென்று தனது சேவைகளை கதாப்பிரசங்கக் கலையை, சமய பிரசாரங்களைச் செய்து கௌரவங்கள் பலவற்றை பெற்றுள்ளார்.

அவர் தன் சேவைகளைப் பின் வழிநடத்தி செல்லக் கூடிய பான்மையில் தற்போது ஆதீன முதல்வராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளை நியமித்துள்ளார்.

அவரது வினைத்திட்பம், நுண்ணறிவு, அருள்வடிவு, ஆன்மீக சிந்தனையே இன்றும் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை சிறப்புற நடத்துகின்றமையைக் காணலாம்.

நமக்கென அவதாரம் செய்த நாயன்மார்கள், அருளாளர்கள் யாவரும் இறைவணைப் பாடினார்கள். உயிர்தோறும் ஒளித்து நிற்கும் இறையைப் பாடுதலால் அனைத்து உயிர்களும் வாழ்கின்றன.

1981 ஆம் ஆண்டு ஆதீன சுவாமிகள் சமாதியடையும்வரை எல்லோரும் இன்புற்றிருக்க இறைவணைப் பாடினார். அவரது சிந்தனை நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனமாக உருவாகி பல்கலைக்கழகம் போன்று நமக்கெல்லாம் நற்பயனைத் தருகின்றது.

*சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்தி ஹரக்குருக்கள். -கோப்பாய்-*

அந்தப் பயனை அனுபவிக்க அனைவரும் முன்வருதல் அவசியம். நமது சமயத்தின் விழுமியங்களில் ஒன்றான நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தை பாதுகாத்து மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்கிட பணி செய்தல் ஒவ்வொரு சைவத்தமிழ் மகனதும் கடமையுமாகும்.

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி..........

## 10.04.2011 முதல் 16.04.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆதாயமில்லாத அலைச்சல், செலவுகளுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பாராத உதவி கிடைக்கும். சக ஊழியர்களுடன் கருத்து மோதல்கள், ஈகோ பிரச்சினைகள் உருவாகும். பணவரவு உண்டு. தந்தையின் உடல் நலக்குறைவால் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். அரசு தொடர்பான காரியங்களும் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். தேக ஆரோக்கியத்திலும் அடிக்கடி சின்னச் சின்னக் குறைபாடுகள் ஏற்பட்டு, உங்களின் ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கலாம். கடன் பிரச்சினைகளை நினைத்து சிலர் கவலை அடைவர். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த விலை உயர்ந்த பொருள்களை வாங்கலாம். தைரியமும், எதையும் சாதிக்கும் வல்லமையும் அதிகரிக்கும். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட உறவினர்கள் மனம் மாறுவர். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம்.

### இடபம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். நீங்கள் எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். உறவினர் ஒருவருக்கு அவசர உதவி செய்யலாம். அடகுவைத்த பொருள்களை மீட்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். குடும்ப உறுப்பினர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். சிலரிடம் கடன் வாங்கலாம் அல்லது சிலருக்கு கடன் கொடுக்கலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட நாள்களாகப் பார்க்காத மாமன், மைத்துனர்கள், நண்பர்களைப் பார்க்க நேரிடலாம். அவர்களுக்காக சில உதவிகளைச் செய்யலாம். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். தடைப்பட்ட கட்டடப் பணிகள் விறுவிறுப்பாக முடிவடையும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். ஆடம்பரச் செலவுகளை முடிந்த வரை தவிர்க்க வேண்டும். வாகனங்களாலும் செலவுகள் உண்டாகலாம்.

### மிதுனம்

திட்டமிட்ட காரியங்களைக் கடும் சிரமப்பட்டாவது முடிப்பீர்கள். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் அல்லது வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள். சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும். எந்த விடயத்திலும் ஊக்கம், உற்சாகமாக செயற்பட முடியாமல், அடிக்கடி ஆதங்கம், குழப்பங்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட வேலைகளை எதிர்பார்த்தபடி முடிக்க முடியாமல் அடிக்கடி தடை, தாமதங்களையும் சந்திக்கலாம். என்னதான் உழைத்தாலும் பலன் இல்லையே என்ற கவலை அவ்வப்போது குடிகொள்ளும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள், உறவினர்கள் சந்திப்பு போன்றவற்றால் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளைக் குறைவில்லாமல் நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் அதிகரிக்கும். உங்களைப் பாராட்டுபவர்களை விட, விமர்சிப்பவர்களே அதிகம். மாமன், மைத்துனர்களால், நண்பர்களால் நன்மை அடையலாம்.

### கடகம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். காரிய வெற்றி உண்டு. நீண்ட நாள்களாக வராமல் இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள். வரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் இருக்கும். விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். உறவுப் பெண்கள் சிலரின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் வசதி வாய்ப்பு அதிகரிக்கும். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். அடுக்கடுக்காக வேலைகளைச் செய்ய நேரிட்டாலும், அதனால் கணிசமான வருமானம் பெறலாம். சிறிது, சிறிதாக சேமித்த பணம் ஒன்று கணிசமான வகையில் கைக்குக் கிடைக்கலாம். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், சகோதரர்கள், சகலைகள் தொடர்பான வகையில் தொல்லைகள் உருவாகலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். சில விடயங்கள் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது நடக்காமல் போகலாம். தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளலாம். எந்தக் காரியத்தைச் செய்யும் முன்னரும் ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன் மனஸ்தாபம் வரக்கூடிய வாய்ப்பு உண்டு என்பதால், முடிந்த வரை அமைதியாகச் செல்வது நன்மை தரும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவதில் இழுபறி காணப்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது சிரமம் என்பதால், யாருக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வாகனங்கள் வழியிலும், வீடு பராமரிப்பு வகையிலும் செலவுகள் உண்டாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

### கன்னி

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சிலருடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். எந்த வேலையும் சுணக்கம் இல்லாமல் சுறுசுறுப்பாக முடிவுக்கு வரும். மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு போன்றவற்றைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். தொழில் ரீதியான பயணங்கள் அதிகரிக்கும். அதனால், உடல் நிலை பாதிக்கப்படலாம். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். மனைவியிடம் கோபதாபமாகவும், குதர்க்கமாகவும் பேசுவதைத் தவிர்க்கவும். தொழில் செய்யும் இடத்திலோ அல்லது பணிபுரியும் இடத்திலோ, அடிக்கடி மனக்குழப்பம் உண்டாக்கும் சூழ்நிலை உருவாகலாம். பெண்கள் வழியில் சில பிரச்சினைகள், பெண் பிள்ளைகளால், சகோதரிகளால் தொல்லை போன்றவற்றை எதிர்கொள்ளலாம். வீட்டு உபயோகப் பொருள்களும் பழுதாகி கணிசமான பணத்திற்கு செலவு வைக்கலாம். கையிலிருக்கும் பணத்தை செலவழித்து விட்டு, பிறரிடம் கைமாத்து வாங்கலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்யாமல் மாற்றி அமைக்கலாம்.

### துலாம்

நண்பர்கள், உறவினர்கள் கடனாக வாங்கிய பணம் திரும்ப வரலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். பால்ய நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகலாம். ஓய்வாக இருக்காமல் அடுத்தடுத்து பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். போட்டி, எதிர்ப்புகள் இல்லாமல் சுலபமாக சில வேலைகள் முடியலாம். எந்த விடயத்திலும் தந்திரமாகச் செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்களிடம் சாதுவாகப் பேசி உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிப்பீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் எளிதில் நிறைவேறும்.அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, காரியத்தடை போன்றவற்றால் அவதிப்படலாம்.

### விருச்சிகம்

பிள்ளைகள் வழியில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். பணவரவு ஒன்று வந்தாலும், அது உடனடியாக கைக்குக் கிடைக்காமல் தடைப்படலாம். தொழில் ரீதியாக சிலருக்கு நல்ல யோசனை சொல்லலாம். வீண் பயம் உண்டாகும். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். குடும்பத்தினரின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பொன், பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பதோடு, தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சில விடயங்களில் அவசரப்பட்டு செயற்பட்டு முடிவெடுத்து விட்டு, பின்னர் வருத்தம் அடையலாம். இதைச் செய்தால், நன்மையாகுமா, அதைச் செய்தால் நன்மையாகுமா என, அடிக்கடி குழப்பம் அடையலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களாலும் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. பயணங்கள் அதிகரிக்கும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். ஊக்கம், உற்சாகம் கூடும். சந்தோஷமான அனுபவம் பெறலாம். பணவரவு உண்டு.

### தனுசு

மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் கையை விரிக்கலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஆன்மிக விடயங்களில், ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். ஒரு வேலை முடிவடையும் முன்னரே அடுத்த வேலை வந்து விடும். அதனால், பதட்டம், படபடப்புடன், நெருக்கடியான சூழ்நிலைகளில் சில நேரங்களில் பணியாற்ற வேண்டி நேரிடும் என்பதால், மனதை அதற்கு ஏற்ற வகையில் பக்குவப்படுத்திக் கொண்டு செயற்பட வேண்டும். தந்தை, தாயார், சகோதரர்கள் வகையில் கடும் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போரும் ஓர் இடத்தில் இருக்காமல், அடிக்கடி அங்கும் இங்கும் செல்ல வேண்டி நேரிடும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விரும்பிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் நன்மையுண்டு.

### மகரம்

திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். நண்பர்கள்,. சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சிலர் தங்களின் வேலைகளை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால், அவர்களின் வேலையையும் சேர்த்துச் செய்யலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவு செய்யலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். வங்கிகளில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மருத்துவ காரியங்கள் மனதிற்குப் பிடித்த வகையில் அமையும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வருமானம் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் விலகும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் நலன் கருதி முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

### கும்பம்

மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றக் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சில பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கலாம். தொழில் வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்களின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்படும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களைக் குறைவின்றி நிறைவேற்றுவீர்கள். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் வகையில் தொந்தரவுகள் உருவாகலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளும் சூழ்நிலையும் ஏற்படும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரை அனுசரித்துச் செல்ல வேண்டும். கடன் விவகாரங்களை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்க நேரிடலாம். சகோதரர்களுடன் கடுமையான வார்த்தைகளைப் பேச வேண்டாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களும் திருப்திகரமாக இருக்காது. அதேநேரத்தில், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் பெறலாம்.பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பயணங்கள் உற்சாகம் தரும். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல் உண்டு.

### மீனம்

சோர்வின்றி, சுறுசுறுப்பு, உற்சாகமாக செயற்படுவீர்கள். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கும். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள். உடல் உபாதைகளால் அடிக்கடி உற்சாகம் பாதிக்கப்படலாம் அல்லது சில பிரச்சினைகளை நினைத்து அடிக்கடி கவலையில் ஆழ்ந்து விடுவீர்கள். ஏண்டா வாழ்கிறோம் என்ற வெறுப்பும் கூட, அவ்வப்போது ஆள்கொள்ளும். பணிபுரிவோர் விரும்பத்தகாத இடமாற்றங்களாலும் அவதிப்படலாம். பிள்ளைகளிடமோ, குடும்பத்தினரிடமோ, பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களிடமோ அடிக்கடி கோபப்பட்டுப் பேசி விட்டுப் பின்னர் வருத்தம் அடைவீர்கள். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காமல் இருப்பது நல்லது. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வகையிலும் தொல்லைகளே. அரசியல் தொடர்புடையவர்களுக்கு அவநம்பிக்கை அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் செலவுகள் கூடும். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம். எண்ணிய காரியங்கள் தடையின்றி நடக்கும்.

# வளர்ச்சிகள் காணாத நிலையில் வன்னேரிக்குளம் கிராமம்

கிளிநொச்சி நகரிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கிராமமே வன்னேரிக்குளம். 1953ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டக் கிராமம் உருவாக்கப்பட்டது. புதிய கிராமங்கள் உருவாக்கப்படும்போது எல்லோருக்கும் கிராம வளர்ச்சி பற்றிய இலக்கு இருக்கும். ஆனால் 50 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் வன்னேரிக்குளம் கிராமம் எல்லா வழிகளிலும் பின் தங்கிய நிலையில் காணப்படுகிறது.

**மருத்துவர் இல்லாத மருத்துவமனை**

இந்தக் கிராமத்தின் உயிர்நாடி மருத்துவமனையாகும். ஆனால் இந்த மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் பணியில் இல்லை. இதன் காரணமாக மீளக் குடியமர்ந்துள்ள 470 வரையான குடும்பங்களின் மருத்துவ நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் மகப்பேற்றுக்காகத் துடிக்கும் பெண்ணொருவரை மருத்துவமனைக்கு எடுத்து சென்றால் மருத்துவர் அங்கு இருக்க மாட்டார் பின்பு அக் கராயன் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால் அங்கும் மருத்துவர் லீவில் சென்றிருப்பார். இறுதியில் மகப்பேற்றுக்குரிய பெண்ணைக் கிளிநொச்சி பொது மருத் துவமனைக்குத்தான் கொண்டு செல் லும் அவலம் காணப்படுகிறது. மருத்து வர் பணியில் இல்லாமையினால் உயிரா பத்துக்கள் கூட ஏற்படுகின்றன.

**வன்னேரிக்குளம் பாடசாலை**

வன்னேரிக்குளம் கிராமத்தின் அடுத்த உயிர் நாடி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம். இந்தப் பாடசாலையில் தற்போது 200 மாணவர்களே கல்வி பயில்கின்றனர். ஆனால் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. தற்போது தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகள் உள்ளன. 50 ஆண்டுகள் கடந்த நிலையிலும் க.பொ.த உயர்தர வகுப்புகள் இப்பாடசாலையில் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலையில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்குக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஒரு நிபந்தனை விதித்திருந்தது. அது என்னவென்றால் உயர்தர வகுப்பில் படிக் கக் கூடிய மாணவர்கள் க.பொ.த சாதாரண தர வகுப்பில் சித்தியடைய வேண்டும் என்பதே. ஆனால் இப்பாடசாலை மாணவர்கள் பல தடவை உயர்தர வகுப்புக்களில் படிக்கக் கூடிய தகுதியை அடைந்த போதிலும் உயர்தர வகுப்புக்கள் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலையில் இடப்பெயர்வுகளுக்கு முன்னர் 500 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். தற்போது மீள் குடியேற்றத்தின் பின்னர் 200 மாணவர்களே கல்வி கற்கின்றனர். இடப்பெயர்வும் பாடசாலை மாணவர்கள் குறைவடைய முதலாவது காரணமாக அமைந்துள்ளது.

இரண்டாவதாக வன்னேரிக்குளம் மகாவித்தியாலயச் சூழலில் இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீள் குடியேறாமை அல்லது பிற இடங்களுக்குக் குடிப்பெயர்ந்தமை.

மூன்றாவது வன்னேரிக்குளம் கிராமத்தின் குஞ்சுக்குளம், சோலையின் சில பகுதி, உப்புவில்,. திக்காய் போன்ற பகுதிகள் உவரடைதல் ஆகும். இதன் காரணமாக மக்கள் ஐயனார்புரம், ஆனை விழுந்தான் போன்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர். நான்காவது வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்துக்கு நிகரான பாடசாலை ஒன்று இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஐயனார்புரத்தில் உருவானமை.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி இடப்பெயர்வுடன் ஐயனார்புரத்தில் ஊற்றுப்புலம் பாடசாலை இயங்கியது. பின்பு 5 ஆம் ஆண்டுடன் ஐயனார்புரம் பாடசாலை உருவாகி 9ஆம் வகுப்பு வரை உயர்ந்து இன்று 11ஆம் வகுப்புவரை இயங்கி வருகின்றது.

50- ஆண்டு காலமாக இயங்கிவரும் பாடசாலை ஒன்றுக்கு வளங்களை உருவாக்கிக் கொடுக்காமல் ஒரு சிறிய கிராமத்தில் இரு பாடசாலைகளை உருவாக்கியுள்ளது.

இரு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். பௌதீக வள நெருக்கடியும் காணப்படுகிறது.

**கி.பிருதீவி**

ஐயனார்புரம் பாடசாலை ஐந்தாம் வகுப்புகளுடன் இயங்கியிருந்தால் இன்று இரு பாடசாலைகளிலும் க.பொ.த. சாதாரண தர வகுப்புகளில் ஆசிரியர் நெருக்கடி இருந்திருக்காது.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் தொகை அதிகரிக்க வேண்டுமாயின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கூடுதலாகப் பாடுபட வேண்டும். இடம்பெயர்ந்த குடும்பங்கள் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயச் சூழலில் குடியேற வேண்டும்.

இவ்வாண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் சித்தியடைந்துள்ளனர். இந்நிலையில் உயர்தர வகுப்புக்களைத் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**மக்களின் தலைவிதியே குளத்தில் தான்**

வன்னேரிக்குளம் கிராமத்தின் மக்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக வன்னேரிக்குளம் உள்ளது.

இந்தக் குளத்தின் கீழ் 375 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளலாம். ஆனால் கடந்த 30 ஆண்டுகளாக இது முழுமையாக புனரமைக்கப்படாமல் உள்ளது.

தற்போது வன்னேரிக்குளத்தையும் தேவன் கட்டையும் இணைத்து பெரும் நீர்த்தேக்கம் ஒன்று உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டால் 1000 ஏக்கர் வரை நெற்செய்கை மேற்கொள்ள முடியும். தற்போது வன்னேரிக் குளத்தின் கால்வாய்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

**மோசமான வீதிகள்**

வன்னேரிக்குளம் கிராமத்தின் வீதிகளைப் பொறுத்த வரையில் பிரதான வீதி 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. கடந்த பெரு மழையின்போது கிராமத்தின் சிறு வீதிகள் குண்டும் குழியுமாக மாறியுள்ளன. விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ள கிராம மக்களின் வாழ்க்கையுடன் வீதிகள் ஒன்றிணைந்து உள்ளன.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில் பல பேருந்துகள் இக்கிராமத்தைக் கடந்து சென்றாலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லக்கூடிய நிலையில் பணிகள் நடைபெறுவதில்லை. வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தினை காலை 8 மணிக்குச் சென்றடையக் கூடிய பேருந்துப் பணி நடைபெற வேண்டும் என்று மாணவர்கள், பெற்றோர்கள் வேண்டுகின்றனர்.

இந்தக் கிராமத்தில் மிகக் கொடூரமான போர் நடைபெற்றது. மக்கள் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்து இருந்தாலும் போரின் வடுக்கள் மாறவில்லை. போரின் வடுக்களைத் தாங்கியபடி மாதா கோயில், முருகன் கோயில், ஐயனார் கோவில் உள்ளன. இந்த வழிபாட்டுத் தலங்களைப் புனரமைப்பதற்கு மத அமைப்புகள் முன்வரவேண்டும்.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலய மாணவர்களும் பெற்றோர்களும் கடந்த காலத்தில் மாணவர்களின் கல்விக்காக உழைத்த முன்னாள் அதிபர்களான க.புண்ணியசீலன், சு.ஆனந்தசிவம், ஐ.குகானந்தராசா, அ.கைலாயபிள்ளை போன்றவர்களை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும். வன்னேரிக்குளம் கிராமத்தின் வளர்சிக்குப் பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

**கிராமத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகள்**

பௌதீக வளங்கள் நிறைவேற்றப்பட்டு ஆசிரியர்கள் பற்றாக்குறை களையப்பட்டு உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

வன்னேரிக்குளம் தேவன் கட்டுடன் இணைக்கப்பட்டு பெரும் நீர்த்தேக்கம் உருவாக்கப்படவேண்டும்.

வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும். வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளம் பகுதியில் உவரடையும் நிலப் பகுதிகளைத் தடுப்பதற்கான வழிகளைக் காணல். வன்னேரிக்குளம் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களை அல்லது புதிய குடும்பங்களைக் குடியேற்றுதல்.

மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் முக்கியமானவையாக உள்ள போதிலும் இதனை விடவும் மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பல தேவைகள் உள்ளன.

1980களில் வன்னேரிக்குளம் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவராக இருந்த எழுத்தாளர் டாக்டர் ச.முருகானந்தன் ''வன்னேரி பொன்னேரியாகிறது'' என்ற சிறுகதையினை எழுதியிருந்தார். சிறுகதை வெளிவந்து 30 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வன்னேரிக்குளம் பொன்னேரியாகவில்லை என்பது வேதனை தருவதாக உள்ளது.

---

## தமிழகத் தேர்தலும்...

# ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வும்

**வாசகர் மடல்**

2009 இல் இலங்கைத் தமிழர்களை அழிக்க உதவிய இந்திய காங்கிரஸ், தி.மு.க அரசு தற்போது தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கொடுப்பதற்கு இலங்கையை வற்புறுத்துகிறோம் என நாடகமாடித் தமிழக மக்களை ஏமாற்றப் பார்க்கிறது. இதே வேளை தமிழ் மக்களது அழிவுக்குக் காரணமான காங்கிரஸ், தி.மு.க என்பவற்றினை இந்திய அரசியலில் இருந்து முற்றாக அகற்ற வேண்டியது ஈழத்தமிழர்களுக்கான பிராயச்சித்தமாக அமையும்.

யுத்தம் என்றால் மக்களும் அழிவார்கள் தானே என்று கூறிய அ.தி.மு.கவினரும் அவ்வளவு நல்லவர்கள் அல்ல. ஆனால் இந்திய அரசியலில் காங்கிரஸ் ஆதிக்கத்தின் உடைவு ஈழத்தமிழர்களுக்கு மட்டுமன்றி இந்தியாவில் எடுக்கப்படும் சிறுபான்மை மக்களுக்கும் அவசியமானது. கோடிக்கணக்கான ஊழல் நிகழ்வு நடந்தும் இந்தியப் புலனாய்வுத் துறை, காங்கிரஸ் அரசினைக் குற்றத்துக்கு உள்ளாக்க விரும்பாமைக்கு இந்திய இறையாண்மையே காரணம்.

**டாக்டர் சி.யமுனாநந்தா**

இதனை உணர்ந்த அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகள் இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்ற விசாரணைகளை இந்தியத் தேர்தல் காலத்தில் வெளிக்கொணர முனைகின்றன. அதாவது இலங்கையின் சிறுபான்மைத் தமிழருக்கு காங்கிரஸ் சார்பு அரசால் இழைக்கப்பட்ட போர்க்குற்ற ஒத்துழைப்பினை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கு மேற்குலகம் முனைகிறது எனக் கருதலாம். இதன் மூலம் இந்தியாவில் காங்கிரஸ் அணியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவும் அதனூடாக இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தன்மையை அதிகரிக்கவும் மேற்குலகம் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா முனைகிறது. இதன் மூலமே உலகில் தொடர்ந்து தான் வல்லரசாகத் திகழ முடியும் என்பதனை அது உணர்ந்துள்ளது எனலாம். ஆனால் இந்த மாற்றங்கள் எவ்வளவு தூரம் இலங்கைத் தமிழருக்குப் பயனளிக்கும் என்பது கேள்வியாகவே உள்ளது. உலக வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிக்கு பல தசாப்தங்களாக ஈழத் தமிழர் பலியாகிவிட்டனர். அவர்கள் இனி மேலும் பலியாகாது இருப்பதற்கு இலங்கையில் தமிழருக்கு உறுதியான அரசியல் தீர்வு தேவை. இதனை ஐக்கிய நாடுகள் சபை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களது விருப்பமாகும்.

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில், குமரகோட்டம் ஒடை வைரவர் கோயில் சுற்றாடலில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு (பிரதான வீதிக்கு அருகில் அமைந்தது) விற்பனைக்குண்டு.
தொடர்பு - Dr.சிவஞானம் விவேகானந்தராசா, 0112721542, 0777436347


## மரண அறிவித்தல்

### கலைஞானச்சுடர் டானியல் தேவமதுரம்

**(ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், கல்வித் திணைக்களம். முன்னாள் உபசெயலாளர், நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை)**



அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் தேவமதுரம் நேற்று (09.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் - இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும் சுகிர் நாகேந்திரா, சுதன் சுகேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராணி, மோ.தேவமண்ணி, ஜெ.கோகிலமணி, டா.வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சு.மோசஸ், பொ.ஜெகானந்தராஜா, வ.றீற்றா கமலவேணி, எம்.எஸ்.பென்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும் பொ.சந்திராதேவியின் மனைவி வழிச் சகோதரரும் பொ.சந்திரகுமார், பொ.ராஜ்குமார், ம.நந்தினி, மோ.ஷாந்தன் சத்தியகீர்த்தி, மோ.சேந்தன் சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமனும் வ.ஜோய் வாகினியின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.7, பூமகள் வீதி, அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி: 0774745573, 0779810877*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**


## அலுடெக் கம்பனி - கட்டார் உடனடி வேலை வாய்ப்பு உதவியாளர்கள்

சம்பளம் QR 800 அத்துடன் மேலதிக நேர வேலை கொடுப்பனவுகள் இலவச தங்குமிடம், மருத்துவச் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், காப்புறுதி, மற்றும் ஒப்பந்த காலம் முடிவடைந்தபின் திரும்பும் விமானப் பயணச்சீட்டு கடவுச்சீட்டு மற்றும் 05 கடவுச்சீட்டு அளவு புகைப்படங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அலுடெக் கம்பனி தனது முன்னைய வேலையாட்களுக்கு மீண்டும் இக்கம்பனியில் இணைந்து கொள்வதற்கான அரிய வாய்ப்பை வழங்கியுள்ளது.**

விரும்பியவர்கள் உடனடியாக உங்களது
அலுடெக் காட் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
எமது கம்பனியில் நீங்கள் வேலையார்த்த தொழிலுக்கேற்றவாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நியம சம்பளத்திலும் பார்க்க கூடிய சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : **S. Sujitha** – 011 5658003. 077 3604069
அல்லது **SMS** : 00974 55308136

*சொனெக் லங்கா ப்ரைவேற் லிமிடெட்*
SONAK
3A, ஆனந்த மாவத்தை,
மருதானை, கொழும்பு - 10.
தொலைபேசி இல : 011 5658003/011 4337303
ஈமெயில் : sonaks@sltnet.lk, sonaklanka@yahoo.com
அனுமதி இல: AL/1455/05/11,
Al/1455/04/11,AL/1455/06/11, AL/1455/03/11


## பரிசளிப்பு விழா இன்று

காரைநகர்,
ஏப்.10

காரைநகர், புது வீதியில் அமைந்துள்ள எம்.ஈ.சி. கல்வி நிலையத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கல்வி நிலைய மண்டபத்தில் ஏ.எஸ். மோகன்ராஜ் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர். ரி. ஜெயசீலனும் சிறப்பு விருந்தினராக எஸ்.வீ.எம். நிறுவன உரிமையாளர் எஸ்.வீ.எம். குணரட்ணம் ஒய்வு பெற்ற வைத்திய அதிகாரி எஸ். நடராசா ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஐ-250)


**வீடு வாடகைக்கு**
**திருநெல்வேலி**

பலாலி றோட்டில் பரமேஸ்வரா சந்திக்கும், தபால் பெட்டி சந்திக்குமிடையில் 3 அறை 2 குளியலறை வாகன தரிப்பிடம் கொண்டவீடு வாடகைக்கு உண்டு.
NGO, வங்கி, தனியார் நிறுவனங்கள் வைத்தியர், பொறியியலாளர் என்பவர்களுக்கும் மற்றும் அரச விடுதியாக பாவிப்போருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
தொடர்பு - 0779581022


## பார்வையற்றோருக்கு அகராதி கையளிப்பு

பார்வையற்றவர்கள் பயன்படுத்தக் கூடிய பிறேயில் எழுத்துவடிவில் அச்சிடப்பட்ட க்ரியாவின் தற்கால அகராதி சுன்னாகத்தில் இயங்கும் வாழ்வக நிறுவனத்துக்கு க்ரியா இராமகிருஸ்ணனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூற்றொகுதியை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு இன்று மாலை 3.30 மணியளவில் வாழ்வக நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இந்த அகராதி இந்திய மொழிகளில் முதன்முதலில் தமிழில் மாத்திரமே பிறேமி எழுத்து முறையில் அச்சிடப்பட்டிருப்பதும் இலங்கை வாழ்வக நிறுவனத்துக்கே முதன்முதலில் வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)


## மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

## கவுஸ் ஒவ் செலெக்ஷன்

**இல.(22)[J] நவீன சந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**

| | | |
|---|---|---|
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~850~~ | 590 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1050~~ | 640 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1250~~ | 790 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1300~~ | 890 |
| ✱ கொட்டன் சாறி | ~~900~~ | 590 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1250~~ | 790 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1700~~ | 890 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1900~~ | 990 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~2200~~ | 1290 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~2450~~ | 1390 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~2850~~ | 1450 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~4850~~ | 2990 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~6750~~ | 3490 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~8500~~ | 4790 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~1900~~ | 990 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~2150~~ | 1300 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~2750~~ | 1590 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~4250~~ | 1990 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~4500~~ | 2490 |
| ✱ பஞ்சாபி | ~~1100~~ | 490 |
| ✱ பஞ்சாபி | ~~1200~~ | 600 |
| ✱ பஞ்சாபி | ~~1300~~ | 650 |
| ✱ பஞ்சாபி | ~~1600~~ | 790 |
| ✱ பஞ்சாபி | ~~2400~~ | 1390 |
| ✱ பஞ்சாபி பீஸ் சில்க் | ~~1450~~ | 890 |
| ✱ பஞ்சாபி பீஸ் சில்க் | ~~1900~~ | 1190 |
| ✱ ஸ்கேட் | ~~550~~ | 290 |
| ✱ ஸ்கேட் | ~~775~~ | 490 |
| ✱ ஸ்கேட் | ~~850~~ | 550 |
| ✱ ஸ்கேட் | ~~1250~~ | 690 |
| ✱ ஸ்கேட் | ~~650~~ | 390 |
| ✱ கொட்டன் பிறின் 01m | ~~170~~ | 140 |
| ✱ சீத்தை 01m | ~~110~~ | 80 |
| ✱ பட்ட சில்க் 01m | ~~150~~ | 120 |

| | | |
|---|---|---|
| ✱ பிளவுஸ் | ~~475~~ | 200 |
| ✱ பிளவுஸ் | ~~600~~ | 350 |
| ✱ பிளவுஸ் | ~~675~~ | 390 |
| ✱ லேடிஸ் T.சேட் | ~~350~~ | 100 |
| ✱ லேடிஸ் T.சேட் | ~~450~~ | 250 |
| ✱ லேடிஸ் T.சேட் | ~~550~~ | 300 |
| ✱ சோலிகிற் | ~~1850~~ | 490 |
| ✱ சோலிகிற் | ~~2600~~ | 890 |
| ✱ ஸ்கேட்பீஸ் | ~~1250~~ | 790 |
| ✱ ஸ்கேட்பீஸ் | ~~1350~~ | 890 |
| ✱ டெனிம் ஜீன்ஸ் | ~~2150~~ | 1390 |
| ✱ ரவுசர் | ~~1400~~ | 790 |
| ✱ டெனிம் ஜீன்ஸ் சிறிது | ~~750~~ | 390 |
| ✱ டெனிம் ஜீன்ஸ் சிறிது | ~~950~~ | 490 |
| ✱ சோட்ஸ் சிறிது | ~~475~~ | 290 |
| ✱ சோட்ஸ் சிறிது | ~~650~~ | 390 |
| ✱ சோட்ஸ் சிறிது | ~~850~~ | 490 |
| ✱ T.சேட் | ~~350~~ | 190 |
| ✱ T.சேட் | ~~675~~ | 390 |
| ✱ பேபிகவுன் | ~~750~~ | 490 |
| ✱ பேபிகவுன் | ~~1050~~ | 690 |
| ✱ பாட்டி வுறக் | ~~850~~ | 450 |
| ✱ பாட்டி வுறக் | ~~900~~ | 590 |
| ✱ சோக்கோ சேட் | ~~850~~ | 390 |
| ✱ சோக்கோ சேட் | ~~1050~~ | 690 |
| ✱ சோக்கோ சேட் | ~~1350~~ | 890 |
| ✱ சேட் L/S Box | ~~1050~~ | 690 |
| ✱ சேட் L/S Box | ~~1250~~ | 750 |
| ✱ சேட் S/S | ~~900~~ | 490 |
| ✱ வெள்ளை சேட் (சிறிது) | ~~400~~ | 250 |
| ✱ சூட்டிங் 01லெந் | ~~550~~ | 250 |
| ✱ ரெறின் 01m | ~~300~~ | 200 |
| ✱ கேட்டின் துணி (60") 01m | ~~210~~ | 170 |
| ✱ கேட்டின் துணி (48") 01m | ~~190~~ | 150 |

**மலரும் புத்தாண்டில் மனம் கவரும் மலிவு விலையில் 10,11,12,13 நாட்கள் வரை**



# MEITRO Pc Systems

## மாபெரும் கணினிகள் விற்பனை



Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR11 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
15.6" LED Moniter
Keyboard & Mouse
Rs. 37,000/=



Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
15.6" LED Moniter
Keyboard & Mouse
Rs. 38,500/=



Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
18.5" LCD Moniter
Keyboard & Mouse
Rs. 42,000/=



Intel Core I5 3.2Ghz
Intel H55 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
ATX Cassing
Keyboard & Mouse
DVD Writer
18.5" LCD Moniter
Rs. 61,000/=



Dual Core 3.2Ghz
Intel 41 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
18.5" LCD Moniter
Keyboard & Mouse
Rs. 44,000/=




Intel Core I3 3.06Ghz
Intel H55 Chipset M/B
2GB DDR111 Ram
500GB HDD
DVD Writer
ATX Cassing
Rs. 37,850/=



Intel Core I3 3.06Ghz
Intel H55 Chipset M/B
4GB DDR111 Ram
1TB HDD
DVD Writer
ATX Cassing
18.5" LCD Moniter
Keyboard & Mouse
Rs. 58,900/=

**T.P :- 0779591134 , 0750408851**
**175/3 Kasturiar Road Jaffna**

# டெக்கானை வீழ்த்தி வென்றது ராஜஸ்தான்




ரிடிவேடியின் சிறப்பான பந்து வீச்சிலும், போத்தாவின் அதிரடி ஆட்டத்தினாலும் இலகுவான வெற்றியை ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி பெற்றுக் கொண்டது.

ஹைதராபாத் காந்தி சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஐ.பி.எல்லின் இரண்டாவது ஆட்டத்தில் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜஸ் அணியும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி டெக்கான் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதனடிப்படையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டவான் - ஜாகி ஆகியோர் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தனர். முதலாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 29 பந்துகளில் 40 ஓட்டங்களைக் குவித்தது. 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில் தவான் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் புகுந்த அணித்தலைவர் சங்கக்கார ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார்.

சிப்லியும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க டெக்கான் அணி ஆட்டம் காணத் தொடங்கியது. பின்வரிசை வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடாத நிலையில் டெக்கான் அணியின் ஆட்டம் சோடை போகத் தொடங்கியது. இரட்டை இலக்கங்களையே வீரர்கள் எட்டுவதற்கு கடுமையாக போராடினர். ராஜஸ்தான் அணியின் பந்து வீச்சை எதிர்த்து டெக்கான் அணியினால் ஆட முடியவில்லை.

இறுதியில் 137 ஓட்டங்களை எட்டு விக்கெட்டுக்களை இழந்து 20 ஓவர் முடிவில் டெக்கான் அணி பெற்றுக் கொண்டது. ராஜஸ்தான் அணி சார்பில் ரிடிவேடி 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது ராஜஸ்தான் அணி. ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டது. 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதலாவது விக்கெட்டை பறி கொடுத்தது ராஜஸ்தான் அணி. இருந்தும் ராவிட், போத்தா, ரெயிலர் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தது.

ராவிட் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். போத்தா சிறப்பாக ஆடி 67 ஓட்டங்களைக் குவித்தார். மறுமுனையில் ரெயிலர் 21 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இவர்களது அதிரடி ஆட்டத்தின் மூலம் 19 ஆவது ஓவரில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து அபார வெற்றி பெற்றது.

ரிடிவேடி ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (15)

## ஐ.பி.எல் இரண்டாவது ஆட்டம்

டெக்கான் சார்ஜஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| டவான் | c றோட் b சிங் | 24 | 15 | 02 | 1 |
| ஜாகி | c போத்தா b வோர்ன் | 25 | 28 | 03 | 0 |
| சங்கக்கார | c பவுனிகர் b ரிடிவேடி | 00 | 03 | 00 | 0 |
| சிப்லி | b ரிடிவேடி | 06 | 09 | 01 | 0 |
| டுமினி | c போத்தா b வோர்ன் | 14 | 17 | 00 | 1 |
| கிறிஸ்ரெய்ன் | c sub (ரகானி ) b ரிடிவேடி | 26 | 19 | 01 | 2 |
| ரவி ரேஜா | c மெனோரியா b சிங் | 28 | 20 | 02 | 1 |
| ஸ்ரெயின் | c போத்தா b சிங் | 07 | 06 | 01 | 0 |
| மிஸ்ரா | ஆட்டமிழப்பில்லை | 02 | 02 | 00 | 0 |
| இஷாந் சர்மா | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 00 | 0 |
| ஓஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 4) | 04 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஓரம் | 02 | 13 | 0 | 0 |
| சிங் | 04 | 35 | 3 | 0 |
| போத்தா | 04 | 31 | 0 | 0 |
| ரிடிவேடி | 04 | 15 | 3 | 0 |
| வோர்னே | 04 | 21 | 2 | 0 |
| மெனோரியா | 01 | 08 | 0 | 0 |
| பின்னி | 01 | 14 | 0 | 0 |

TOTAL - 137/8 (20)
1-40 (டவான்), 2-40 (சங்கக்கார), 3-53 (சிப்லி), 4-69 (ஜாகி), 5 - 77 (டுமினி), 6 - 114 (கிறிஸ்ரின்), 7 - 130 ( ரவி ரேஜா), 8 - 134 (ஸ்ரெய்ன்)

ராஜஸ்தான் ரோயல்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பவுனிக்கர் | c சங்கக்கார b ஸ்ரெய்ன் | 20 | 19 | 4 | 0 |
| ராவிட் | b ஸ்ரெய்ன் | 28 | 35 | 2 | 0 |
| போத்தா | ஆட்டமிழப்பில்லை | 67 | 47 | 8 | 1 |
| ரெயிலர் | ஆட்டமிழப்பில்லை | 21 | 14 | 1 | 2 |
| றோட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மெனோரியா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஓரம் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வோர்ன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரிடிவேடி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பின்னி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, nb 2, lb 2) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஓஜா | 3.5 | 44 | 0 | 0 |
| ஸ்ரெய்ன் | 4 | 18 | 2 | 0 |
| சர்மா | 4 | 24 | 0 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | 3 | 25 | 0 | 0 |
| மிஷ்ரா | 4 | 28 | 0 | 0 |

TOTAL - 141/2(20)
1-31 (பவுனிக்கர்), 2-83 (ராவிட்),

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

## ஐ.பி.எல் இரண்டாவது ஆட்டம்

கொச்சி

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பிரன்டன் மக்கலம் | c நனீஸ் b ஹோக்லி | 45 | 32 | 04 | 2 |
| லக்ஷ்மன் | c புஜாரா b டில்ஷான் | 36 | 29 | 02 | 2 |
| ஜெயவர்த்தன | st டீ வில்லியர்ஸ் b வெற்றோரி | 18 | 18 | 02 | 0 |
| ஹொஜ் | b சகீர்கான் | 27 | 21 | 03 | 0 |
| ஜடேஜா | ஆட்டமிழப்பில்லை | 23 | 16 | 02 | 1 |
| கொமீஸ் | c ரிவாரி b நனீஸ் | 00 | 01 | 00 | 0 |
| பட்டேல் | ஆட்டமிழப்பில்லை | 01 | 04 | 00 | 0 |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வினய் குமார் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஆர்.பி .சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சிறீசாந் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, b 1, lb2 , nb 1) | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 04 | 28 | 1 | 0 |
| நனீஸ் | 03 | 31 | 1 | 0 |
| வெற்றோரி | 04 | 17 | 1 | 0 |
| டில்ஷான் | 04 | 30 | 1 | 0 |
| மித்துன் | 01 | 19 | 0 | 0 |
| ஹோக்லி | 02 | 14 | 1 | 0 |
| பதான் | 02 | 19 | 0 | 0 |

TOTAL - 161/5 (20)
1-80 (லக்ஷ்மன்), 2- 93 (மக்கலம்), 3-124 (ஜெயவர்த்தன), 4- 147 (ஹொஜ்), 5 - 152 (கொமீஸ்)

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அகார்வெல் | c வினய்குமார் b ஜடேஜா | 33 | 24 | 2 | 2 |
| டில்ஷான் | c மக்கலம் b சிறீசாந் | 01 | 04 | 0 | 0 |
| ஹோக்லி | lbw b வினெய்குமார் | 23 | 18 | 4 | 0 |
| வில்லியர்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 54 | 40 | 1 | 5 |
| ரிவாரி | c ஜெயவர்த்தன b கொமீஸ் | 26 | 24 | 2 | 0 |
| பதான் | ஆட்டமிழப்பில்லை | 12 | 04 | 3 | 0 |
| புஜாரா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சகீர்கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வெற்றோரி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| நனீஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மித்துன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, nb 2, lb 4) | 13 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சிங் | 03 | 29 | 0 | 0 |
| சிறீசாந் | 03 | 28 | 1 | 0 |
| ஜடேஜா | 04 | 28 | 1 | 0 |
| வினய்குமார் | 3.4 | 26 | 1 | 0 |
| முரளிதரன் | 04 | 27 | 0 | 0 |
| கொமீஸ் | 01 | 20 | 1 | 0 |

TOTAL - 162/4(18.4)
1-07 (டில்ஷான்), 2-48 (ஹோக்லி), 3 - 85 (அகார்வெல்), 4 - 137 (ரிவாரி)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# அறிமுக ஆட்டத்திலேயே கொச்சிக்கு தோல்வி

ஐ.பி.எல் சீசன் - 4 இல் புதிதாய் அறிமுகம் கொச்சி. சிறப்பாக ஆடிய போதும் பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்சர்ஸின் வில்லியர்ஸ் இவர்களின் வெற்றியை பறித்தெடுத்தார். இதனால் வீணாகியது கொச்சி அணியின் அதிரடி ஆட்டம்.

ஐ.பி.எல்லின் மூன்றாவது ஆட்டம் கொச்சியில் நேற்று நடந்தது. மஹேல தலைமையில் புதிய அணியாய் கொச்சி ஐ.பி.எல்லுக்கு நேற்று அறிமுகம். நாணயச் சுழற்சியில் வென்றார் மஹேல. துடுப்பெடுத்தாட முடிவு செய்தது கொச்சி.

பிரன்டன் மக்கலம் - லக்ஷ்மன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள். வந்தவர்கள் வெளுத்து வாங்கினார்கள். அதிரடியாக ஆடி ஓட்டங்களை உயர்த்தினர். ஆரம் அடித்தளம் சிறப்பாய் அமைந்தது கொச்சிக்கு. பெங்களூரின் தலைவர் வெற்றோரி வகுத்தார் புது வியூகம். அழைத்தார் டில்ஷானை.

80 ஓட்டங்களில் சரிந்தது முதலாவது விக்கெட். லக்ஷ்மன் 36 ஓட்டங்களுடன் விடைபெற்றார். தொடர்ந்து வெளியேறினார் பிரன்டன் மக்கலம். வந்த மஹேலவும் நீடித்து நிற்க்கவில்லை களத்தில். வந்தவர்கள் வான வேடிக்கை காட்டவே முனைந்தனர். பின்வரிசை வீரர்களின் அதிரடி ஆட்டத்தில் கொச்சி தாண்டியது 150 ஓட்டங்களை.

பின்வரிசை வீரர்களின் அதிரடியில் இறுதியில் 161 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஐந்து விக்கெட்டுக்களை மாத்திரமே கொச்சி அணி இழந்தது. பந்து வீச்சில் கொச்சிக்கு இணையாய் பந்து வீசியது பெங்களூர். பந்து வீசியவர்கள் ஆளுக்கொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

கடினமான இலக்கு இது. ஆட்டத்தை தொடங்கியது பெங்களூர். முதலாவது ஓவரிலேயே விக்கெட்டை இழந்தது. டில்ஷானின் விக்கெட்டை சிறீசாந் சரித்தார். தொடர்ந்து வந்த ஹோக்லி, அகார்வலுடன் இணைந்து சிறப்பாய் ஆடினார். ஆரம்ப விக்கெட் விரைவாய் வீழ்ந்தாலும் இவர்களின் இணைப்பு இதை மீட்டெடுத்தது. தொடர்ந்து வந்த வில்லியர்ஸ் அதிரடி காட்ட விரைவாய் நெருங்கியது முடிவு.

எட்ட முடியாத இலக்காய் இருந்த ஓட்ட எண்ணிக்கையை வில்லியர்ஸ்ஸின் அதிரடியால் பெங்களூர் எட்டியது. இறுதி வரை ஆட்டமிழக்காது 54 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார்.

எட்டுப் பந்துகள் மீதமிருக்க 6 விக்கெட்டுக்களால் பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்சர்ஸ் வெற்றியைப் பெற்றது. அதிரடி ஆட்டம் ஆடிய வில்லியர்ஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (15)






உதயன்
10 ஏப்ரல் 2011 ஞாயிற்றுக்கிழமை

# புதுத் தலைமையில் முதல் வெற்றி புதித்தது ஆஸி.





உலகக் கிண்ணத்தில் காலிறுதி ஆட்டத்துடன் ஆஸ்திரேலிய அணி வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அந்த அணியின் தலைமைப் பொறுப்பு மைக்கல் கிளார்க்கிற்கு வழங்கப்பட்டது. வழங்கப் பட்ட பொறுப்புக்கு அமைவாக சிறப்பாக செயற் பட்டு, உலகக் கிண்ண தோல்விக்குப் பின்னர் தனது முதலாவது ஆட்டத்தை ஆஸ்திரேலிய அணி வெற்றியுடன் தொடங்கியது.

மிர்பூரில் இடம்பெற்ற பங்களாதேஷுடனான முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 60 ஓட்டங்களினால் வெற்றி பெற்றிருக்கின்றது. மூன்று ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் 1:0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய் தது. இதன்படி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது பங்களாதேஷ். 16 ஓட்டங் களைப் அணி பெற்ற நிலையில் ஹடினின் விக் கெட்டை மோர்ரஷ்ஷா வீழ்த்தினார். தொடர்ந்து பொன்டிங் - வொட்ஸன் இருவரும் சிறப்பாக ஆடி அணியை மீட்டனர். வொட்ஸன் 37 ஓட்டங்களு டனும், பொன்டிங் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந் தனர். இருப்பினும் அணித்தலைமைப் பொறுப்பை ஏற்ற மைக்கல் கிளார்க் சிறப்பாக ஆடி 101 ஓட்டங் களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த போதும் இறுதி யில் ஜோன்ஸனின் அபார அதிரடி ஆட்டத்தின் மூலம் 270 ஓட்டங்களை ஆஸ்திரேலியா பெற்றுக் கொண் டது. பங்களாதேஷினால் ஆஸியின் 5 விக்கெட்டுக் களை மாத்திரமே வீழ்த்த முடிந்தது.

பங்களாதேஷ் சார்பில் சுவோ 3 விக்கெட்டுக்களை யும், மோர்ரஷ்ஷா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களா தேஷ் அணி ஆரம்ப விக்கெட்டை வேகமாக இழந்தது. இம்ரு கைல்ஸ், நவீஸ், ரகிபுல் ஹசன் ஆகியோர் தொடர்ந்து ஆட்டமிழந்தனர். இதனால் 49 ஓட்டங் களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து பரிதாப நிலைக்கு பங்களாதேஷ் தள்ளப்பட்டது.

ரமிம் இக்பால் - சகிப் அல் ஹசன் ஆகிய இருவரது இணைப்பாட்டத்தின் மூலம் பங்களாதேஷ் அணி எழுச்சி பெற்றது. சிறப்பாக ஆடிய ரமிம் இக்பால் 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அணித்தலைவர் சகிப் அல் ஹசன் 51 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தார். 5 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை பங்களாதேஷ் அணி பெற்றிருந்தது. 53 பந்துகளில் 121 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலைக்கு பங்களாதேஷ் அணி தள்ளப்பட்டது.

விக்கெட் காப்பாளர் ரகிம் - மகமதுல்லா இருவரும் அதிரடியாய் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த் தினர். இருந்தும் 50 ஓவர்கள் முடிவில் 210 ஓட்டங் களையே பங்களாதேஷ் அணி பெற்றுக்கொண்டது. இதனால் 60 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ரகிம் 44 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தார்.

சிறப்பாக ஆடிய மைக்கல் கிளார்க் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (15)

# புதிய தெரிவுக் குழு

விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகே புதிய கிரிக்கெட் தேர்வுக் குழுவொன்றை நியமித்துள்ளார். இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான துலிப் மெண் டிஸ், டொன் அனுரசிறி, பிரண்டன் குருப்பு, ஆர்.மதுரசிங்க ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அரவிந்த டி சில்வா தலைமையிலான கிரிக் கெட் தேர்வுக்குழு கடந்த புதன்கிழமை இராஜி னாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. (15)

# பாகிஸ்தானையும் இணையுங்கள் ஐ.பி.எல்லில்



இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) போட் டிகளில் பாகிஸ்தான் வீரர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு (பி.சி.சி.ஐ) பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி வேண்டு கோள் விடுத்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் விளையாடியதன் மூலம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இப்போது நல்லுறவு ஏற்பட்டுள்ளது. எனவே பாகிஸ்தான் வீரர்களை ஐ.பி.எல் போட் டிகளில் மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண் டும். பி.சி.சி.ஐ தொடர்ந்து எங்களை தீண்டத் தகாதவர்களாக நினைப்பது மனவருத்தத்தை ஏற்படுத்துகிறது. இந்தியாவில் விளையாட மாட்டோம் என்றோ, ஐ.பி.எல்லில் பங்கேற்க மாட்டோம் என்றோ நாங்கள் எப்போதும் கூறி யது இல்லை. எனவே எனது கோரிக்கையை பி.சி.சி.ஐ பரிசீலிக்க வேண்டும்.

உலகக் கிண்ண கிரிக்கெட்டின் போது, இந் திய பிரதமர் மன்மோகன் சிங்கின் அழைப்பை ஏற்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் கிலானி இந்தி யாவுக்கு கிரிக்கெட் பார்க்க வந்தார். இதன் மூலம் இருநாடுகளிடையே உறவு மேம்பட் டுள்ளது.

இப்போது பாகிஸ்தான் வீரர்களையும் ஐ.பி. எல்லில் சேர்த்துக் கொள்வது மூலம் இந்தியா - பாகிஸ்தான் உறவு மேலும் வலுவடையும் என்று அப்ரிடி கூறியுள்ளார். இந்தியர்கள் குறித் தும், கம்பீர் குறித்தும் நான் தவறாக எதுவுமே கூறவில்லை என்று அவர் மீண்டும் மறுத் துள்ளார். (15)

| திகதி | நேரம் | போட்டி | மைதானம் |
|---|---|---|---|
| மே 01 | இரவு 8.00 | சென்னை சுப்பர் கிங்ஸ் - டெக்கான் சார்ஜஸ் | சென்னை |
| மே 02 | பி.ப.4.00 | மும்பை இந்தியன்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் | மும்பாய் |
| மே 02 | இரவு 8.00 | டெல்லி டெயாவல்ஸ் - கொச்சி | டெல்லி |
| மே 03 | பி.ப.4.00 | டெக்கான் சார்ஜஸ் - கொல்கத்தா நைட்ரடர்ஸ் | ஹைதராபாத் |
| மே 04 | பி.ப.4.00 | சென்னை சுப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் | சென்னை |
| மே 04 | இரவு 8.00 | புனே வாரியர்ஸ் - மும்பை இந்தியன்ஸ் | மும்பாய் |
| மே 05 | பி.ப.4.00 | கொச்சி - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் | கொச்சி |
| மே 05 | இரவு 8.00 | டெக்கான் சார்ஜஸ் - டெல்லி டெயாவல்ஸ் | ஹைதராபாத் |
| மே 06 | இரவு 8.00 | றோயல் சலஞ்சர்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் | பெங்களூர் |
| மே 07 | பி.ப.4.00 | கொல்கத்தா நைட்ரடர்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் | கொல்கத்தா |
| மே 07 | இரவு 8.00 | மும்பை இந்தியன்ஸ் - டெல்கி டெயாவல்ஸ் | மும்பாய் |
| மே 08 | பி.ப.4.00 | றோயல் சலஞ்சர்ஸ் - கொச்சி | பெங்களூர் |
| மே 08 | இரவு 8.00 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் - புனே வாரியர்ஸ் | மொஹாலி |
| மே 09 | இரவு 8.00 | ராஜஸ்தான் றோயல் - சென்னை சுப்பர் கிங்ஸ் | ஜெய்ப்பூர் |
| மே 10 | பி.ப.4.00 | டெக்கான் சார்ஜஸ் - புனே வாரியர்ஸ் | ஹைதராபாத் |
| மே 10 | இரவு 8.00 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் - மும்பை இந்தியன்ஸ் | மொஹாலி |
| மே 11 | இரவு 8.00 | ராஜஸ்தான் றோயல்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் | ஜெய்ப்பூர் |
| மே 12 | இரவு 8.00 | சென்னை சுப்பர் கிங்ஸ் - டெல்லி டெயாவல்ஸ் | சென்னை |
| மே 13 | இரவு 8.00 | கொச்சி - கிங்ஸ் லெவன் பஞ்சாப் | இன்டோர் |
| மே 14 | பி.ப.4.00 | றோயல் சலஞ்சர்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் | பெங்களூர் |
| மே 14 | இரவு 8.00 | மும்பை இந்தியன்ஸ் - டெக்கான் சார்ஜஸ் | மும்பாய் |
| மே 15 | இரவு 8.00 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் - டெல்லி டெயாவல்ஸ் | டர்மசலா |
| மே 15 | இரவு 8.00 | கொச்சி - ராஜஸ்தான் றோயல்ஸ் | இன்டோர் |
| மே 16 | இரவு 8.00 | புனே வாரியர்ஸ் - டெக்கான் சார்ஜஸ் | மும்பாய் |
| மே 17 | இரவு 8.00 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் - றோயல் சலஞ்சர்ஸ் | டர்மசலா |
| மே 18 | இரவு 8.00 | சென்னை சுப்பர் கிங்ஸ் - கொச்சி | சென்னை |
| மே 19 | இரவு 8.00 | புனே வாரியர்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் | மும்பை |
| மே 20 | இரவு 8.00 | மும்பை இந்தியன் - இராஜஸ்தான் றோயல் | மும்பை |
| மே 21 | பி.ப.4.00 | கிங்ஸ் லெவன் பஞ்சாப் - டெக்கான் சார்ஜஸ் | டர்மசலா |
| மே 21 | இரவு 8.00 | டெல்லி டெயாவல்ஸ் - புனே வாரியர்ஸ் | டெல்லி |
| மே 22 | பி.ப.4.00 | றோயல் சலஞ்சர்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் | பெங்களூர் |
| மே 22 | இரவு 8.00 | கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - மும்பாய் இந்தியன்ஸ் | கொல்கத்தா |
| மே 24 | இரவு 8.00 | காலிறுதி | மும்பை |
| மே 25 | இரவு 8.00 | காலிறுதி | மும்பை |
| மே 27 | இரவு 8.00 | தெரிவு ஆட்டம் | சென்னை |
| மே 28 | இரவு 8.00 | இறுதி ஆட்டம் | சென்னை |

## செட்டித்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செட்டியார் தெருவை அகலமாக்க நகர அபிவிருத்திச் சபை முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் பிரகாரம், செட்டியார் தெருவில் உள்ள நகைக் கடைகளை கடற்கரை வீதியில் உள்ள மீன்சந்தைக் கட்டடத்துக்கு மாற்றுவது என்று முடிவாகியுள்ளது. (ஒ-ஐ)

## சாத்வீக.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் சபா மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உரை யாற்றிய சம்பந்தன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எம் மக்கள் அளித்துள்ள ஆணைக்கு மதிப்பளித்துத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கு உறுதியான தீர்வு ஒன்றைக் காண அரசு முன்வர வேண்டும். அண்டை நாடுகளில் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்காது, சர்வாதிகாரம் புரிந்த தலைவர்களின் நிலைமை என்ன ஆனது என்பதையும் அரசு உணர வேண்டும்.

தென்பகுதி மக்கள் எப்படி ஆளும்கட்சிக்கு ஆணை வழங்க உள்ளனரோ, அதேபோலதான் வடக்கு, கிழக்கு மக்கள் எமக்கு ஆணை வழங்கி உள்ளனர்.

ஜனநாயக முறைப்படி தேர்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம், அதே ஜனநாயக முறைப்படி மக்கள் பலத்தைப் பெற்ற ஒரு சமூகத்துக்கு அநீதி இழைக்கக்கூடாது. ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காது சர்வாதிகாரப் போக்கில் நடந்துகொண்ட உலக நாடுகளில் மக்கள் புரட்சி வெற்றியளித்துள்ளது.

இதேபோன்று, எமது மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அது தான் உண்மையான ஜனநாயகம்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின், அரசுடன் தொடர்புகொண்டு பேச்சு மூலம் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான இணக்கப்பாடு ஒன்றைக் காணத் தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தோம். இலங்கை அரசுக்கு சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுத்தன. ஆனால், அரசு செவிசாய்க்கவில்லை.

பின்னர், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பன நடைபெற்றன. எமது அடிப்படை சுயநிர்ணய உரிமைகள் குறித்து விரிவான கருத்துக்களை - நிலைப் பாட்டை - மக்கள் முன்வைத்தோம். எமது கொள்கைக்கு ஒட்டு மொத்த மக்களும் ஆதரவு அளித்து எமக்கு ஆணை வழங்கி உள்ளனர்.

இதன்படி, அரசுடன் பேசுகின்றோம். தனிநாடோ, தமிழீழமோ நாங்கள் கேட்கவில்லை. சிங்கள, முஸ்லிம் மக்களுடன் குரோதம் பாராட்டவும் இல்லை.

யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. எம் மக்கள் இன்றும் அகதிகளாகவே வாழவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. எங்களுடைய காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும்; எமது உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; கல்வி அபிவிருத்தி காணவேண்டும்; கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டும்; சுகாதார வசதிகள் பேணப்பட வேண்டும்; விவசாயிகள் தமது காணிகளில் விவசாயம் செய்ய வேண்டும்; கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் நிர்ணயிக்கும் அதிகாரம் வேண்டும். நாம் வன்முறையை எதிர்ப்பவர்கள்; ஜனநாயகத்தை மதிப்பவர்கள். அதேசமயம், அதிகாரத்தில் இருக்கும் சிலர் அதைத் தரமாட்டோம்; இதைத் தரமாட்டோம் என்று வாய்க்கு வந்தபடி பேசுகின்றனர்.

எமது நோக்கம் ஒன்று தான். மேலே கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தீர்மானிக்கவும் நிர்ணயிக்கவும் கூடிய உரிமை வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்த வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று அபிவிருத்தி செய்யும் அதிகாரம் வேண்டும்.

இந்த நோக்கங்களுடனேயே நாம் பேச்சில் ஈடுபட் டுள்ளோம். எமது நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகம் வரவேற் கின்றது.

அற்பசொற்ப சலுகைகளுக்காகத் தன்மானத்தை அடைவு வைக்கமுடியாது. சாத்வீக ரீதியிலான எமது முயற்சிகள் தோல்வி அடையுமானால், நாமும் மாற்று வழியைத் தான் கடைப்பிடிக்க வேண்டும். இதனை எவராலும் தடுக்க முடியாது - என்றார் சம்பந்தன்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா, திருகோணமலை அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான துரைரட்ணசிங்கம், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்படப் பலரும் உரையாற்றினர். (ஒ-ஐ-2)

## நாடு கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஜீவ விஜேசிங்க எம்.பியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புப் பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அத்துடன் இந்தச் செயலை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினரான ஆறு முகம் தேவராஜன் நியூஸிலாந்து அரசினால் கௌரவிப் பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டமையை அரசு கடுமையாகக் கண்டிக்கிறது.

இது தொடர்பாக நியூஸி லாந்து அரசிடம் வினவிய போது, தெரிவின் போது நாடு கடந்த அரசாக நாம் பார்க்கவில்லை. வேறு சமூ கத்தைச் சேர்ந்தவர் என்றே பார்த்தோம் என்று பதிலளித்திருக்கின்றது.

இந்தப் பதிலால் நாம் திருப்தி கொள்ளவில்லை. நாடு கடந்த தமிழீழ அரசு சட்டவிரோதமானது. அதனை எந்தவொரு அரசும் ஏற்கவில்லை. ஜனநாயகத் தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள எந்தவொரு அரசும் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது. அவ்வாறானதொரு நபர் விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டமைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஒ-க)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் இருந்து இங்கு வந்திருக் கும் நிரபராதி மீன வர்களின் விடுத லைக்கான கூட்டமைப்பின் தலைவர் பி.அருளானந்தம் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தில் இருந்து சில தினங்களுக்கு முன்னர் ஏழு படகில் தொழிலுக்குப் புறப்பட்ட நான்கு மீனவர்கள் காணாமற்போயினர். அவர் ஒருவரின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. அதை அடையாளம் காட்டினோம்.

ஏனைய மூன்று மீனவர்களுக்கும் அவர்கள் சென்ற படகுக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவரவில்லை.

இலங்கைக் கடற்பரப்பில் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க இந்தியா, இலங்கையிடம் அனுமதி பெற்றுள்ளது. அதன்படி எமது 11 மீனவர்கள் இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர் என்றார் அவர்.

தங்கச்சி மடத்தைச் சேர்ந்த எவ்.அந்தோனிராஜ், என்.ஜோன்பால், எம்.மாரிமுத்து ஆகியோரே காணாமற்போன மீனவர்களாவர். (ஒ-ஐ-7-4)

## இளம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் சாறியினால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டது. உடலில் நகக் கீறல் காயங்கள் காணப்படும் அதேசமயம், வேறு சில தடயங்களும் இருப்பதால், இவர் கொலை செய்யப்பட்டு தூக்கில் இடப்பட்டாரா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வீட்டிலுள்ள ஏனையோர் கோயிலுக்குச் சென்றுவிட்டனர். மரணமான ஆசிரியை பாடசாலை விட்டு வீட்டுக்குத் திரும்பியுள்ளார். அதன் பின்னரே அந்த அசம்பாவிதம் நடந்துள்ளது. கோயிலுக்குச் சென்றிருந்த இவரது குடும்பத்தவர்கள் திரும்பி வந்துள்ளனர். அப்போது யுவதி வீட்டில் இருக்கிறார் என்பதற்கான எந்த அறிகுறியோ அசுமாத்தமோ இருக்கவில்லை. அதையடுத்து, வீட்டார் உள்ளே சென்று பார்த்தபோது கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில் அவரின் சடலம் காணப்பட்டது.

முழந்தாள் நிலத்தில் பட்டும் படாமலும் மடிந்த நிலையில் சடலம் கிடந்தது. கழுத்தில் போடப்பட்ட சுருக்கு இறுக்கமாக அன்றி இளகிய நிலையில் காணப்பட்ட தாகவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்றையதினம் மல்லாகம் பதில் நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தினார்.

உடலில் கீறல் காயங்கள் காணப்படு வதாலும் வேறு சில தடயங்கள் இருப்பதாலும் இந்த யுவதியின் மரணத்தில் சந்தேகம் உள்ளது என்று விசாரணைகளின் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ஒ-4-15)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு மாகணங்களின் பல பிரதேசங்களிலும் இருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டுவந்து இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். இதனால் திருகோணமலை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. (ஒ-02)

Bishop Savundram Media Centre, No.891, Hospital Road, Jaffna.
Tel: 021 222 6085 mobile 0777165147

**பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2001ஆம் ஆண்டு முதல் வெளியிட்ட புத்தகங்கள் விற்பனைக்கு**

ஒரு புத்தக விலை 250 ரூபா
ஊடகவியலைப் பாடமாகப் படிப்போர் 200 ரூபாவிற்கு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் பெறலாம். புத்தகங்களை அன்னை புத்தகசாலை நவீன சந்தை, பூபாலசிங்கம் கொழும்பு, ஜெயா புத்தகசாலை கொழும்பிலும் பெறலாம்.

1) பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம் (ஆண்டு 2001)
வடகிழக்கு மாகாண விருதுபெற்றது. இலங்கை இலக்கியப் பேரவை விருதுபெற்றது.
2) பத்திரிகை இயல் அடிப்படைகள் (ஆண்டு 2002)
3) மின்னியக்க பத்திரிகையியல் ஓர் அறிமுகம் (ஆண்டு 2003)
இலங்கை அரச சாகித்திய விருது பெற்றது. இலங்கை இலக்கியப் பேரவை விருது பெற்றது
4) ஊடக இயல் கலைச்சொல் அகராதி (ஆண்டு 2003)
5) ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2004)
6) செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2005)
வடகிழக்கு மாகாண விருது பெற்றது
7) அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல் (ஆண்டு 2006)
8) சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2007) அச்சில்
9) எடு இட்டோர் இயல் ஓர் அறிமுகம் (ஆண்டு 2011)

## மரண அறிவித்தல்

### மாளவிகா மகேசன்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த மாளவிகா மகேசன் நேற்று (09.04.2011) சனிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர்.
அளவெட்டி வடக்கு.

## மரண அறிவித்தல்

### சுந்தரமூர்த்தி சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற பிரதி ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு)



குமகுடை, பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல.10/4, ருத்ரா மாவத்தை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி சண்முகநாதன் கடந்த 07.04.2011 வியாழக்கிழமை மாலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் சாரதாதேவியின் அன்புக் கணவரும் குமகுடை, பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கே.சுந்தரமூர்த்தி - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏகபுத்திரனும் ஆனந் பவன், தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற உமாபதிதேவி (இளைப்பாறிய ஆசிரியை) மற்றும் பார்வதிதேவி (இளைப்பாறிய பதிவுபெற்ற வைத்தியர் - R.M.O), காலஞ்சென்ற கௌரிதேவி (இளைப்பாறிய மருந்தாளர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் சிவானந்தம் (ஓய்வுபெற்ற ஆய்வுகூட பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், துர்க்கா ஆய்வுகூட சேவை), காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் திலகவதி பொன்னையா (கனடா), சத்தியவதி நடராஜா (ஆஸ்திரேலியா), கமலாவதி, பத்மநாதன் (லண் டன்), நகுலாம்பிகை வேலாயுதம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று(09.04.2011)சனிக்கிழமை காலை 9 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையிலும் இன்று (10.04.2011)ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் ருத்ரா மாவத்தையிலுள்ள அவரது இல்லத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காகக் கல்கிசை இந்து மயானத்துக்கு பி.ப. 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சாரதாதேவி சண்முகநாதன்,
தொ.பே.: 0112587659

**J.A.C. லொறி விற்பனைக்கு WP.LG.XXXX**
இரண்டு வருடம் பாவித்த 10 அடி அலுமினியம் பொடி உடையதும் மிக நல்ல நிலையிலுள்ள லொறி விற்பனைக்குண்டு. விரும்பின் வாங்கி மாதவாடகைக்கு கொடுப்பதற்கு ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு - 0771673393

**விற்பனைக்கு**
அலுமினிய பொடியுடன் 41 ஸ்ரீ ISUZU 350 ELF நல்ல நிலையில் விற்பனைக் குண்டு.
(Power Steering, Red Belt Engine)
தொடர்பு: 0777060638

**வாடகைக்குத் தேவை**
ரெஸ்ரோரன் ஒன்று அமைப்பதற்கு வீடு அல்லது கடை ஓரளவு இடப்பரப்புடன் யாழ் நகருக்கு அண்மையில் வாடகைக்குத் தேவை.
அருகில் பாடசாலை கோயில் இன்றி இருத்தல் அவசியம்.
தொடர்பு: 0726815222

**விற்பனைக்கு**
2 SRI XXXX மைனர் 1000
தொடர்புகளுக்கு-0771908704

**A/L பௌதிகவியல் இணைந்த கணிதம்**
பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களை சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) தனிப்பட்ட முறையிலும் சிறு குழுக்களாகவும் பௌதிகவியல், இணைந்த கணிதம் கற்பிக்கப்படும். மீட்டல் பயிற்சியும் உண்டு. பௌதிகவியல் பகுதி I இற்கான ஏராளமான பயிற்சி விடைக்குறிப்புகளுடன் செய்து முடிக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. (தமிழ், ஆங்கிலம்)
தொ.பே.: 0776648751
ஆசிரியர் R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip. in Ed.
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்
(கடையிற் சுவாமியார் வீதிக்குப் பின்னால் உள்ள ஒழுங்கை)

தேசிய வியாபார முகாமை நிறுவனம் NIBM BUILDING COMPETENCIES

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்
அங்கீகாரம் பெற்ற அரச நிறுவனமான NIBMன்

சிங்கள , ஆங்கில கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பம்

கணனி , முகாமைத்துவ பட்டப்படிப்புகளுக்கான
பதிவுகளுக்கு 077 0716974 / 021 222 0361

Photo Editing & Advertising Course
Business Management Course
CALL 077 0716974 / 021222 0360

புத்தாண்டை முன்னிட்டு நமது மாணவர்கள்
நடாத்தும் மாணவர் மற்றும் அலுவலகர்களுக்கான
சதுரங்க (chess) சுற்று போட்டி
காலம்: 13-04-2011
வயதெல்லை: 16 வயதுக்கு மேல்
இலவச பதிவுகளுக்கு
077 0716974 , 021 222 0362



No-40 College Road; Jaffna

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் சுமார் 300 முதல் 400 வரையான படகுகள் ஒரே சமயத்தில் தொழிலுக்குப் புறப்பட்டன.

இந்தத் தொகுதிப் படகுகளுடன் எனது அண்ணனான சேவியர் விக்ரஸின் படகும் தொழிலில் ஈடுபட்டிருந்தது.

இரவு 10.45 மணியளவில் எனது அண்ணனின் படகு தனியாகத் தொழிலில் ஈடுபட்டிருந்த போது அங்கு இலங்கைக் கடற்படையின் பெரிய படகு ஒன்றும் காணப்பட்டது. இதை நான் அவதானித்தேன்.

தொழிலுக்கு வந்திருந்த அன்தோனி என்பவரின் படகில் இருந்தவர்களும் இரவு 10.45 மணி முதல் 11.45 மணி வரை எனது அண்ணனின் படகை இலங்கைக் கடற்படையின் படகுக்கு அருகில் அவதானித்த தாகக் கூறியுள்ளனர். எனது அண்ணனின் படகு கடற்படையின் படகுக்கு மிக அருகில் ஒரு மணி நேரம் வரையில் இருந்திருக்க வேண்டும் - என்று சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-ஐ-4)

**வாடகைக்கு**

திருநெல்வேலிச் சந்தியில் கடையுடன் கூடிய ஓடைக்கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 0772258489

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் றோட்டில் இருந்து குளப்பிட்டிக்கிடையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - ராஜி
0750957296

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள KR42 TOWN AC வான் விற்பனைக்குண்டு.
A/C, Alloy Wheels, TV, Adjustable Seat, New Model Lights Set வசதிகளுடன்
தொடர்பு - 0775051171

**கொழும்பு "ஜெயா" பியூட்டி சலூன்**

(கொக்குவில் கல்வாரி தேவாலயம் அருகில்)



* கொழும்பில் பெரும் வரவேற்பைப் பெற்ற ஜெயா பியூட்டி சலூன் உரிமையாளர் அவர்களால் யாழ்ப்பாணத்திலும் அழகுக்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு புதிய புதிய விறுநுக்களில் நடைபெற்று வருகின்றன. முதலாவது பயிற்சி வகுப்புகள் நிறைவுறும் நிலையில், அடுத்து புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.

- அத்துடன் -

* இந்தியன் சாரிபிளவுஸ், பஞ்சாபி வகைகள் தொடர்பான தையற்பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
* விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.
* பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.

"ராஜேஸ் பவனம்"
பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு. (2477) (37)
தொ.பே-0772378726

**கடையும் வீடும் விற்பனைக்கு**

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக் குண்டு.
தொடர்பு -
தொ.பே.இல
0718454025

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

குறிப்பு I:- யூன் மாத ஜேர்மன் எம்பசி பரீட்சைகளுக்கான ஜேர்மன், Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

குறிப்பு II:- நெதர்லாந்து டச், ஜேர்மன் டொச் புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

GOV.Reg.No W/A 76795 T.P: 0774842464, 0213216928, 0779927117

**புதுவருடதினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| சேட் | - | 400/= |
| பஞ்சாபி | - | 450/= |
| பஞ்சாபி | - | 550/= |
| ஸ்கேட் | - | 200/= |
| லேடீஸ் பிளவுஸ் | - | 150/= |

கோலம் சாறிகள் 50% கழிவுடன் பெற்றுக்கொள்ள இன்றே முந்துங்கள்.

கணேசன் சென்ரர்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே.இல - 0212221508

**சுலபமாக நீங்கள் ரூபா 50,000/- க்கு மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்**

**ஐஸ் கிரீம் இயந்திரம்**




கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரொசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

* ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா soya / வெனிலா venila / சொக்கலேட் chocolate
* சுயமாகவே தயாரிக்கும் திறன். • இலவச பயிற்சி
* உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 385 0089

**Dutch (Netherlands),German ,French,English**

மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்கலுடன் கற்பிக்கப்படுகின்றது.

Netherland தூதரகத்தினால் April லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைய புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டவுள்ளன. ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விஷேட வகுப்புகளும் மாதிரி பரீட்சைகளும் தமிழில் உண்டு.

மாணவர்கள் கவனத்திற்கு:- இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும், Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களுடைய ஆசிரியரை தெரிவு செய்ய முன் வெளிநாட்டிலிருந்து உங்களை Sponsor செய்பவர் மூலம் நீங்கள் தெரிவு செய்யும் ஆசிரியருடன் அந்தந்த நாட்டு மொழியில் கதைத்து அவர் உத்தரவாதம் மிக்கவரா? என்பதை உறுதிப்படுத்தியபின்பு உங்கள் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் பணத்தையும் நேரத்தையும் சேமிக்க கூடியாதாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும்!

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

"Dutch Lanka Academy" # 69- 2/1, Galle Road, Dehiwala. Tel #: 0777 251 332 / 011 271 8811
வெளிமாவட்டத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.
* Condition Apply

**உடனடி வேலை வாய்ப்பு**

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான, தகுதியும் அனுபவமும் உடைய ஆண் / பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

VACANCIES

1) கணினி விரிவுரையாளர்கள்.
2) கணினி போதனாசிரியர்கள்.

* ஆர்வமுடையோர் நேரில் வரவும்.
* கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்..



தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Manager,
UTHAYAN IT ISLAND
GATEWAY CENTER
New Market Building,
Chavakachcheri.
T.P: 021- 227 0323, 077-7739224
gatewaychk@sltnet.lk.

**வேலையாள்கள் தேவை**
**தேனு களஞ்சியம்- திருநெல்வேலி**

* ரேஸ்ரி வான் சேல்ஸ்க்கு:-
அனுபவமுள்ள போட்டர் (சுமைதூக்குபவர்), காசாளர்.
* கடைத் தேவைக்கு:-
சிட்டை எழுதுநர், விற்பனையாளர் (சேல்ஸ்மன்) களஞ்சியப் பொறுப்பாளர், கணக்காளர் (பெண்).

மேற்கூறப்பட்ட வேலையாள்கள் தேவைப்படுவதனால் தகைமையுள்ளவர்கள் நேர்முகத்தேர்வுக்குச் சமுகம் தரவும்.

(அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை)

காலம்:- 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் 11.04.2011 திங்கள் பி.ப. 3.30 மணிக்கும் நேரில் வரவும்.
இடம்:- நவீன சந்தை மேல்மாடி- திருநெல்வேலி.
தொலைபேசி இல:- 0214921261. (49,21,25)

**Quick Learning Course**

**Spoken English with Grammar**

Duration 1 Month
Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.